# குறிஞ்சாளினி

ரீ. எஸ். யோசுவா



பச்சையிலை வெளியீடு
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T.S. யோசுவா

# குறிஞ்சாளினி

பச்சையிலை வெளியீடு
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சாளினி * சிறுகதைகள் * ஆசிரியர் : வண. T.S. யோசுவா
* பதிப்பு 2020
* வெளியீடு : பச்சையிலை நம்பிக்கை

Kurunjalini Short story * Rev. T.S. Joshva * Language Tamil * Edition 2020 * Size A5 * Paper 70fsm * Pages viii + 135

Published by Green Hope Pvt. Ltd.
* Phone : 0779581371 * e-mail : revjosh.sutha@gmail.com.

ISBN : 978-955-7825-04-5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| மீண்டும் அங்கேயே வந்து நிற்கின்றேன் | 01 |
| 1. பச்சரிசி | 06 |
| 2. தேனிலை | 18 |
| 3. பாலிலை | 23 |
| 4. குறிஞ்சாளினி | 31 |
| 5. "வேலி" | 39 |
| 6. உயிரிலை | 47 |
| 7. "தங்கத்தவசி" | 58 |
| 8. நாவலின் காதலன் | 67 |
| 09 ஆடாதோடையும், ஆட்டுக்கல்லும் | 79 |
| 10. தேங்காப்பூ | 90 |
| 11. ஊர்ப்பறவை | 93 |
| 12. கதை கேட்டவர்கள் பகிர்ந்தவை | 102 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

தானே தன் உழைப்பால் உருவாக்கிய

"பாதையில்" தூய்மையான கனவுகளுடன்

தன்னையே பிறருக்கு

"பாதையாக்கிய" வைத்தியர்

**தங்கமுத்து சத்தியமூர்த்தி**

அவர்களுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இயற்கையும், இயற்கையோடு பின்னிப்பிணைந்த செடி கொடிகளும் மனிதனின் ஆரோக்கியத்தோடு எப்போதும் தொடர்பு பட்டவை. ஆரோக்கியம் என்பது மனிதனின்உடல், உளத்தை மேம்படுத்தும் உணவுப்பழக்கங்களில் தங்கியிருக்கின்றது. எங்கள் முன்னோர்கள் தமது உணவுப் பாரம்பரியத்தில் எப்போதும் சிறந்தவற்றையேகைக் கொண்டார்கள். அதன் விளைவாக அவர்கள் எழுபது, எண்பது வயது வரை ஆரோக்கியமானவர்களாக, பெரு நோய்களின் தாக்கத்திற்கு உட்படாதவர்களாக இயற்கை யோடு வாழ்ந்து அமைதியாகவே இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை பெற்றார்கள். ஆனால், இன்றையநிலை அவ்வாறான தில்லை. நாற்பது வயதைத் தொடமுன்னரே பெயர் தெரியாத நோய்க ளெல்லாம் உடலினுள் புகுந்துவிடுகின்றன. அவசர உணவுகள், வெறும் சக்கைகளாய் உடலினுள்சேர்வதால் என்ன பலன்...? இது தொடர்பான மரபின் தொடர்ச்சியைப் பேணும் வகையில் இந் நூலின் படைப்புக்கள் அமைந்திருப்பதைப் பாராட்டியே ஆக வேண்டும்.

திரு.யோகுவா அவர்களை காவேரி கலை மன்றப் பணிப் பாளராக நான்அறிவேன். அவருடனான முதலாவது உரையாடல் மூலமே கிராமப் புறமக்கள் மத்தியில் தொலைந்து போகாத சில உணவுப் பழக்கவழக்கங்களை அழிவுறாமல் பேணி எதிர்கால சந்ததிக்குக்கடத்தவேண்டும்எனும் அவரது வேணவாவை உணரக் கூடியதாகவிருந்தது. அவர் மூலம் நிறைய விழிப்புணர்வுகளை இன்றையச முதாயத்திற்குக் கொண்டு செல்லவேண்டும் என்னும் எண்ணத்திலும் ஆர்வமாகவிருந்தேன். அவ்வகையில் எல்லோர் மட்டத்திலும் அவரது கருத்துக்கள் சென்றடையக்கூடிய விதத்தில் இச்சிறுகதைத் தொகுதி அமைந்திருப்பது உண்மையிலேயே மன மகிழ்ச்சியைத் தரக் கூடியதாக விருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகைக் கருத்துக்கள் பெரும்பாலும், கட்டுரை வடிவிலேயே வெளியிடப்படும் வேளையில் யோசுவா அவர்கள், புது முறையில் இவற்றை சிறுகதைகளாகத் தர முன்வந்திருக்கிறார். சிறுகதை என்பதுவாசகனை மிக அதிக அளவில் ஈர்த்துக் கொள்ளும் தன்மைவாய்ந்ததால் இவர் சொல்லவந்த கருத்துக்கள் வாசகன் மனதில் எவ்வளவிற்குப் பதிந்து போயிருக்கும் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை.

மொத்தம் பதினொருகதைகள் பதினொருகதைகளின் தலைப்புகளும் மிக விசேடமானவை. தனித்துவமானவை. ஏற்கனவே எம்மோடு ஊடபாவிக் கொண்டிருக்கும் செடிகளைப் பற்றி எவ்வளவு லாவகமாக எடுத்துரைக்கிறார் கதாசிரியர். தேனிலை, பாலிலைஎன்று சொல்லும் போதே அந்தப் பெயர்களின் தண்மை அபூர்வமான இனிமை ஒன்றை மனதில் சில்லிடச் செய்கிறது. கதைகளுக்கு முன்னர், மீண்டும் அங்கேயே வந்து நிற்கும்

கதாசிரியர் கூறுவதுபோல,
மனிதர்கள்மட்டும்
தம்இரத்தத்தைத்தின்னும்
நோய்உண்ணிகளை
வியாபாரஉண்ணிகளை,
நாகரிகஉண்ணிகளை,
தின்னயாருக்கும்கொடுப்பதுமில்லை
தாமும்பிடுங்கிவீசுவதுமில்லை.

எவ்வளவு உண்மை அந்த வார்த்தைகளில். மனிதர்கள் தங்கள் உயிர்களை அவ்வுண்ணிகள் உறிஞ்ச இடம்கொடுத்து விடுகிறார்கள். பின்னர் துன்பப்பட்டு என்ன பலன்?

ஒவ்வொரு கதைக்கு முன்னும் கதவைத் தட்டுகிறகதை சொல்லி மூலம் எளிமையான கிராமத் தமிழில் ஒரு குடுகுடுப்பைக் காரனின் கிலுகிலுப்பைக் குரலைக்கேட்கிறோம்.

"நீங்கதான்தெய்வம்,
உங்கவீடுதான்கோயில்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சொல்லைக் கேட்க ஒரு குடுகுடுப்பைக் காரனைக் கதாசிரியர் அழைத்து வரவேண்டியிருக்கிறது நமக்காக. அந்தக் குடு குடுப்பைக் காரனாக மாறியிருக்கிற கதாசிரியர் கேட்பதுபோல,

'முத்தத்தில்நின்றதகாணம்,
தெருவிலத்துகிடந்ததைகாணம்,
வேலியோரத்துசெல்வங்களைகாணம்,
முகட்டிலைகட்டியிருந்தகூட்டகாணம்,
கூட்டிலையிருந்தகுருவியைகாணம்,
குருவிபாடினபாட்டைகாணம்,
அந்தபாட்டகேட்டஉன்னகாணம்..."

என்று எல்லாவற்றையுமே காணாமல் போகத்தேடி நிற்கிறோம்நாம். இப்படியே போனால் நாமே காணாமல் போய் விடுவதற்கான காலம் வெகுதொலைவிலில்லை. இதைக் கச்சிதமாக எம்மை உணர வைப்பதற்காக, இந்தத் தொகுப்பிலிருக்கின்ற பதினோரு கதைகளும் மிகச்சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கதைக்கும் பொருத்தமான பாத்திரங்களை உருவாக்கி அவற்றினூடாக சமூகத்திற்குச் சொல்ல வேண்டிய கருத்தினை அற்புதமாக வெளிப் படுத்தியிருக்கிறார் கதாசிரியர்.

"பச்சரிசி" கதையினை ஆரம்பிக்கும் போது இலட்சுமணன் ஐயாவின் உண்ணாவிரதம் எதற்காக எனப்பதறும் மனது அவரது செடி, கொடிகள் மீதான தீராத வாஞ்சையைப் பார்த்து ஆச்சரியப் பட்டுப் போகிறது. அவராலும், அவரைப் போன்ற இன்னும் சிலராலுமே இந்தஉலகம் இன்னும் பச்சைப்பசேலென்று தளிர்த் திருக்கிறது. இன்று குழந்தைப் பேறின்றி பல்வேறுபட்ட சிகிச் சைக்குச் செல்லும் இளம்தம்பதியினருக்கான இயற்கையான தீர் வினை பச்சரிசி கதைமூலம் இலகுவாக முன்வைக்கிறார்கதாசிரியர்.

"தேனிலை" கதைமூலம் முடக்கொத்தான் கீரைவளரும் பிள்ளைகளின் உடல் வலிமைக்கு எவ்வளவு முக்கியம் என்பதையும், "குறிஞ்சாளினி" மூலம் பெண் குழந்தைகளின் வளர்ச்சியில் குறிஞ் சாச் செடியின் பங்களிப்பையும், "பாலிலை" மூலம் பாலில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் வருத்தத்தை இளம் தாய்மார் கடக்கும் வித்தையையும் கதாசிரியர் நயம்பட வெளிப்படுத்தியுள்ளார். "வேலி" சிறுகதை எங்கள் பண்பாட்டுக் கூறுகளின் அம்சமாயிருந்த உயிர் வேலியினூடு பல்கிப் பெருகிய உயிர்களின் கதையையும் அதனோடு ஒன்றியிருந்த எம்முன்னோர்களின் வாழ்வையும் கண்களைத் ததும்பச் செய்து விபரிக்கின்றது.

"நாவலின்காதலன்" கதையை வாசித்துக் கொண்டிருந்த போது இக்கால இளைஞர்களின் போதைப்பொருள் பாவனை பற்றிய கதையோ எனும் மெல்லிய பதட்டம் மனதினுள் ஓடிக்கொண்டிருந்தது. எனினும்அது "பட்"டென்று இன்னொரு திசையிலோடி நாவல்மரத்தின் மீதான மோகமாக உருமாறி விட்டது. சிறுகதைகளின் பொருத்தமான பாத்திரங்களும், சம்பவங் களும் கதைகளை செழுமையூட்டுகின்றன., பிரச்சார படைப்புக் களுக்குரிய வெற்றுத்தன்மை இல்லாமல் இனிமை சுவற சொல்லப்பட்டிருப்பது இக்கதைகளின் விசேடம்.

தொடர்ந்தும், நான் கதைகளைப் பற்றிச் சொல்லிக் கொண் டிருந்தால் அது வாசகர்களுக்காக இடையூறாக அமைந்து விடும். எனவே இவ்விடத்தில் நான் வாசகர்களுக்கு இடம் விட்டு விலகலாம் என நினைக்கிறேன். வாசகர்களே இதன் பெறுமதியை உணர்ந்து கொள்வார்கள்.

-தாட்சாயணி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் அங்கேயே வந்து நிற்கின்றேன்

காலம் தன் கரத்தில் வைத்திருப்பதை
கொட்டிக்கொண்டே செல்கிறது
வரலாறு அதை
விழுங்கிக்கொள்கிறது,
செமிக்காது துப்பிய
காலத்தின் அசிங்கங்களை
வரலாறு அப்படியே விழுங்கி
இங்கேயும் அங்கேயும்
பீச்சி விட்டிருக்கிறது..

அதை மனிதர்கள்
தங்கள் பண்பாடாய்,
தங்கள் நாகரிகமாய்
தம் முன்னோர்கள்
விட்டுச் சென்ற
மரபுகளாய் அப்படியே அள்ளி
தலையில் தேய்த்து
முகத்தில் பூசி
மேனியில் அணிந்து கொண்டு
பன்மைத்துவ அழகை, இரசித்து
அதற்குள் ஏதோ தேடுகிறார்கள்.

ஆனால் அதற்குள் தான்
மானுட வாழ்வின்
அழகான பக்கங்களை
தின்னும் "உண்ணிகள்"
இரத்தம் உறிஞ்சும் உண்ணிகள்
பெருத்து திளைத்து
இரத்தம் உறிஞ்ச
காத்துக்கிடக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவோரத்தில்
படுத்துறங்கும் தெருமாடுகள்
காகங்களுக்காய்
தவமிருக்கின்றன,
தன் இரத்தத்தை தின்னும்
உண்ணியை தின்ன
காகங்கள்
கடமைப்பட்டுள்ளதாக
இந்த மாடுகள் நினைக்கின்றன.

மனிதர்கள் மட்டும்
தன் இரத்தத்தை தின்னும்
நோய் உண்ணிகளை
பண்பாட்டு உண்ணிகளை
வியாபார உண்ணிகளை
நாகரிக உண்ணிகளை
தின்ன யாருக்கும் கொடுப்பதுமில்லை
தாமும் பிடுங்கி வீசுவதுமில்லை

மீண்டும் அங்கேயே
வந்து நிற்கின்றேன்
காலம் கொட்டிக்கொண்டு
போகிற அத்தனை குப்பைகளையும்
மானுடம் சுவைக்க துடிக்கிறது.
சுவைத்த பின் செமிக்காத
பண்டங்களையும் துண்டங்களையும்
மனித சமூகத்திற்குள்
வாந்தியாய் கக்கிவிடுகிறது

விஞ்ஞானம் மனிதனின்
கண்டுபிடிப்பு
விஞ்ஞானத்தால் மனிதன்
அனைத்தையும் கண்டுபிடிக்கின்றான்
தான் அழிப்பதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை அழிப்பதற்கும்
விஞ்ஞானத்தை
மனிதன் தேடிக்கொண்டே இருக்கின்றான்.

முடிவுறா மனிதனின்
விஞ்ஞானத்தேடலில்
சிலவற்றுக்கு விடை
கிடைப்பது தாமதமாகின்றது
சிலவற்றை நினைத்தவுடன்
மனிதன் அடைந்து விடுகின்றான்..
ஆனால் விஞ்ஞானம்
மனிதனை வாழ்விப்பதை விட
சாவிப்பதையே விரும்புகிறது
ஏனென்றால் அழிப்பதால் தான்
ஆக்க சக்திகளை விஞ்ஞானம்
பெறத் துடிக்கிறது.

ஆனால் மனித இருப்புக்கு
விஞ்ஞானத்தை தாண்டி
தன்னில் தானே ஆழமாய் உட்செல்ல
மானுடம் அழைக்கப்படுகிறது
தன்னைத்தேடி தனக்குள்
புதைந்து கிடக்கும்
செல்வங்களை சுவைக்க
தெரிந்தவனே "மனித"
அனுபவத்தை முழுதாய் சுவைக்கிறான்,

இங்கே இதற்கு நேரமில்லை
ஓட்டம், ஓட்டம் நாளெல்லாம்
மனசு பறவையாய் பறக்கிறது
மேல மேல பெரியாளாய்
வரத்துடிக்கும் மனசுக்கு
தீனிபோட நம் உடல் மாடாய்
உழைக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியில் உடலும்
மனசும் மிஞ்சுவதில்லை
வாழ்க்கையும் பேசப்படுவதுமில்லை..
என்னதான் சொல்ல
வருகிறாய் என்று
நீ கேட்கலாம்,

ஒரு முறை கொஞ்சம்
நில்
உன்னில் ஓராயிரம்
உண்ணிகள் ஒட்டிக்கிடந்து
உன் இரத்தத்தை குடிக்கின்றன,
மனசு அதற்கு "ஆசை"
"கனவு" என்ற வேடத்தில்
துணை போகிறது,

ஒரு முறை கொஞ்சம்
நில்,
உன்னை தின்னும் உண்ணியை
உன் வாழ்க்கையில்
சுமக்க தேவையில்லையென்றால்
உன்னைப்பார், உன் ஆழத்தைப் பார்,
உன்னை சுற்றிலும் ஓராயிரம்
உயிரிகள் ஊசலாடுகின்றன

மெதுவா வெளியே வா
இயல்பாக இருப்பதற்கு
இயல்பாக பேசுவதற்கு
இயல்பாக நினைப்பதற்கு
இயல்பாக சுவைப்பதற்கு
இங்கே உன்னை சுற்றிலும்
நிறையவே இருக்கிறது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாக வெளியே வா

கொடியும், செடியும்,
பூவும், கனியும்,
இயல்பாய் இருப்பதை பார்,
அது இயற்கையாய்
இருப்பதை பார்,
அது இருப்பதும், பறப்பதும்,
பாடுவதும், துள்ளுவதும்,
உனக்காக தான் என்பதை பார்...
நீ அதை இரசிக்க
நீ அதை சுவைக்க
உன்க்கு தெரிந்தால்
அது உன் இரத்தத்தை தின்னும்,
உண்ணியை தின்னும்

பின்பு என்ன
புதிய இரத்தம்
உன் உடலெல்லாம் பாயும்
சிந்தாத சிதறாத இரத்தம்
சுதந்திரமாய் ஓடித் திரியும்
அங்கே உன் மனசுக்கு இடமில்லை
ஆனால் உன் வாழ்க்கை சுதந்திரமாய்
புதிய அனுபவத்தை
உனக்கு கொடுத்துக் கொண்டே இருக்கும்.

அப்படிப்பட்ட
சுதந்திர மனிதர்களும்
அவர்கள் காதல்கொண்ட
இந்த இயற்கையும்
இங்கே அனுபவங்களாக
படைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதவை தட்டும் கதை சொல்லி

# பச்சரிசி

நல்ல காலம் பிறக்குது
நல்ல காலம் பிறக்குது
நீங்க தான் தெய்வம்
உங்க வீடு தான் கோயில்,

போன முறை வரைக்குள்ள
இருந்த வெளிச்சம் வீட்டில காணல,
வீட்டில நின்ற வெளிச்சமும் ரோட்டிலேயும் இல்ல,
ரோட்டில நின்ற வெளிச்சம் ஊரில இல்ல,
எல்லாமே காணா போச்சே
என்று நீங்க ஏங்கி கொண்டிருக்கிறீங்க

நாம தொலைச்சது
நம்மட்ட நாலு பேர்தட்டி பறிச்சது
எல்லாமே காணா போச்சி
என்று நாம தேடிக்கொண்டிருக்கிறோம்,
இப்பக்கூட நேற்று கண்டத இன்னைக்கு காணோம்,

முத்ததில நின்றத காணாம்,
தெரிவில த்து கிடந்தத காணாம்,
வேலியோர செல்வங்கள காணாம்,
முகட்டில கட்டியிருந்த கூட்டை காணாம்,
கூட்டிலிருந்த குருவிய காணாம்,
குருவி பாடின பாட்ட காணாம்,
அந்த பாட்ட கேட்ட உன்னை காணாம்.

என்ன? என்ன காணமோ என்ன சாமி
கண்ணுக்கு முன்னுக்கு குத்துகல்லு மாறி நிக்கிறன்
என்னை காணான்னு சொல்றீங்க,

வீட்டில இருக்க வேண்டிய செல்வங்கள்
இல்லாட்டி நீயிருந்து என்னத்திற்கு
என்று ஒரு கதையில சொன்னத சொல்லுறன்,

அந்த கதைய சொல்லுங்க சாமி கேட்பம்
அந்த கதைய சொல்லட்டா!
நல்ல காலம் பெறந்திருக்கு
இந்த கதைய கேட்டா நல்ல காலம் பிறக்குது.
ஒரு ஊரில ஒரு அரச மரம்
அந்த அரச மரத்திற்கு கீழ ஒரு ஐயா இருக்கிறாரு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இவர் செய்யிற வேலையால ஊருக்குத்தான் கெட்ட பேரு வரப்போகுது. இவர் உண்ணாவிரதம் இருந்து ஊர திருத்த போறாராம். வெங்காயத்தில உப்பு விளையுது என்றா யாருதான் நம்புவினம். எழும்பி போகச் சொல்லு இல்லாட்டி அடிச்சு தூக்கி வீசிப்போட்டு போயிடுவன்” என்றான் துளசி.

துளசியின் கூச்சலுக்கு நான் உடன்படவில்லை என்பது அவனுக்குத் தெரியும். துளசி தென்றலூர் கிராமத்தின் தலைவர். நான் செயலாளர். நேற்றிலிருந்து இலட்சுமணன் ஐயா ஊரின்ர எல்லையிலயிருக்கிற அரச மரத்தடியில் உண்ணாவிரதம் இருக்கிறார் என்று எல்லா ஊருக்குள் ளேயும் ஒரே பேச்சு. எல்லாரும் போன் போட்டு “என்னடா ஊரில பிரச்சனை” என்று எங்களைத்தான் கேக்குறாங்க. 11 மணிக்கு போலீசுக் காரங்கள் வாரத்துக்கு இடையில இலட்சுமணன் ஐயாவை எழுப்பி கலைச்சுப்போட வேணும் என்று சொல்லித்தான் என்னையும் துளசி கூட்டிக் கொண்டு வந்தவன். ஆனா நானும் துளசியும் எவ்வளவோ கதைச்சுப் பார்த்த நாங்கள். அவர் எழும்புற பாடில்ல. “சுரேன் நீ ஊரின்ர செயலாளர் ஊருக்க நடக்கிற நல்லது கெட்டது எல்லாம் உனக்கு தெரியும். இப்ப நடக்குற விசயத்துக்கு எனக்கு நீதி கிடைக்கும் வரைக்கும் நான் எழும்பி போகமாட்டன். அதிகாரிகள் வரட்டும், இல்லாட்டி என்ர உயிர் போகட்டும்” என்று அழுத்தம் திருத்தமாக சொல்லிப்போட்டார் இலட்சுமணன் ஐயா.

“போலீஸ்காரன்கள் வந்தால் சில நேரத்தில் இவரை அரஸ் பண்ணுவாங்கள். பிறகு ஊருக்க இருக்கிற ஆக்களுக்கும் விசாரணை, கோர்ட்டு, கேஸ் என்று வரும். இதெல்லாம் எங்களுக்கு தேவையே” என்று சொல்லிக் கொண்டே அந்த மரத்தடியில் இலட்சுமணன் ஐயா தன்ர கையால எழுதியிருந்த உண்ணாவிரத நோட்டீஸை கிழிச்சான் துளசி.

“துளசி என்ர பவர் உனக்கு தெரியாம நீ கிழிக்கிற, பிறகு நீ நாளைக்கு கவலைப்படுவ” என்றார் இலட்சுமணன் ஐயா. “என்ன உன்ர பவர், சோத்துக்கு வழியில்லாம வீட்டுக்கு வீடு விறகு கொத்திக்கொண்டு திரிகிற உனக்கு, என்ன பவர் கிடக்கு” என்று துளசி கூறியதும், நான் சோத்துக்கு வழியில்லாம அதற்காக உழைத்து வாழ்றன். நீ ஊர ஏமாத்தி பிழைக்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு இருக்கிற திமிர விட எனக்கு பவர் கூடத்தான்" என்று பல்லைக் கடித்தார் இலட்சுமணன். நான் துளசியை அமைதிப்படுத்தி ஓரமாக அமர்த்தினேன். போலீஸ்காரன் வரட்டும் பார்ப்போம் என்றேன்.

துளசியும் இலட்சுமணன் ஐயாவும் சத்தம் போட்டு சண்டை பிடிக்குறத பார்த்த ஊர் சனங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக மரத்தடியில் கூடத் தொடங்க அது ஒரு கண்டன பொதுக்கூட்டம் மாதிரி கிடந்தது.

"நேற்றிலிருந்து இந்த மனுசன் இதிலை தண்ணியில்லாம உண்ணா விரதம் இருக்கிறத ஊரிலிருந்த ஒருத்தரும் எங்களுக்கு சொல்லயில்ல தானே, இப்ப போலீஸ்காரன் வந்த பிறகு எல்லாரும் அதற்கு பதில் சொல்ல போறியள்" என்றான் துளசி.

"அட, இந்தாள் நெடுகலும் இந்த மரத்தடி கட்டில படுத்துத்தானே கிடக்கும் எங்களுக்கு தெரியுமே உண்ணாவிரதம் இருக்கிறார் என்று. இருந்துட்டு செத்துப் போனா தூக்கி போட்டு எரித்து போட்டு போய்க் கொண்டே யிருப்போம்" என்றான் விளையாட்டுக் கழக தலைவர் மனோஜ்.

என்னதான் இருந்தாலும் இலட்சுமணன் ஐயாவ இவை நையாண்டி பண்ண விடக்கூடாது என்று நினைச்சுக்கொண்டு "தேவையில்லாம ஆளுக்கொரு மாதிரி வாயில வந்த மாதிரி கதைக்காதேயுங்கோ. நீங்க கனபேர் ஊருக்க புதுசு. கனபேர் இளம் தலைமுறை. இந்த மனுசனை பற்றி உங்களுக்குத்தெரியாது. இலட்சுமணன் ஐயா இந்த சமூகத்தின்ர சொத்து மட்டுமல்ல அவர் இந்த நாட்டின்ர சொத்து. சும்மா ஒரு ஆளப்பாத்து அவரின்ர தொழில பாத்து அவர மதிப்பிடக்கூடாது" என்று நான் சொல்ல, "இவர மதிக்கிறதுக்கு இவர் என்ன மகாத்மா காந்தியா" என்றாள் பூரணம் அக்கா.

எனக்கு கொஞ்சம் கோபம் வந்திட்டுது. "இவங்கள் இளம்பெடியள் தெரியாமல் கதச்சாலும் பரவாயில்ல பூரணமக்காவும் கதைக்கிறியளே, உங்களுக்கு தெரியும்தானே இந்த மனுசன் படுறபாடு".

"இலட்சுமணன் ஐயா யார், எண்ணத்திற்கு உண்ணாவிரதம் இருக்கிறார் என்று தெரியாத ஆட்கள் தான் இதுல வந்து தேவையில்லாம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கிறியள். என்ன இங்க எழுதிப்போட்டிருக்கிறார்? காணாமல் போனவ எங்கே? கொன்றவன் இங்கே வந்து பதில் தரவேணும்! என்று எழுதிப் போட்டிருக்கிறார். இது ஒன்றே போதும் ஊரில இருக்கிற எங்கள் எல்லாருக்கும் இவர் ஆப்புவைக்க வெளிக்கிட்டிருக்கிறார்" என்றான் மீண்டும் மனோஜ். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு ஒன்றும் கேளாதவர் போல் மரத்தில் சாய்ந்து காலாட்டிக்கொண்டிருந்தார் இலட்சுமணன் ஐயா.

"வேன் ஒன்று வருகுது" என்று கூட்டத்தில இருந்து யாரோ சொல்ல திரும்பிப் பார்த்தேன். ஒரு வெள்ளை வேன் வேகமா வந்து திரும்ப, கூட்டத்தில நின்ற எல்லாரும் துண்டக் காணோம் துணியைக் காணோம் என்று சிதறி ஓடினார்கள். துளசியும் நின்ற இடம் தெரியாமல் ஓடி விட்டான். ஆக இப்ப நானும் இலட்சுமணன் ஐயாவும் மட்டுந்தான் இருந்தோம்.

எங்களுக்கு முன்பாக வந்து நின்ற அந்த வேன் கருப்பு கண்ணாடிகளாய் இருந்தபடியால் உள்ளுக்கு யார் இருக்கிறது என்று தெரியாமல் இருந்தது. வேன் நிறுத்தப்பட்டும் ஒருவரும் வெளியில் இறங்கயில்ல. எங்கும் அமைதி. ஆனால் இலட்சுமணன் ஐயா வழமைபோல காலாட்டிக் கொண்டிருந்தார். ஓடிய எல்லாரும் தூரமாய் நின்று பார்த்துக் கொண்டி ருந்தார்கள். சிலர் தூரமாய் ஓங்கி வளர்ந்திருந்த மரங்களின் உச்சியில் நின்று பார்ப்பது தெரிந்தது.

வேன் அமைதியாக நிற்பதால் உள்ளிருந்து யாரோ எங்களை அவதானிக்கிறார்கள் என்பது மட்டும் எனக்கு தெளிவாக தெரிந்தது. சில நேரத்தில் வீடியோ கூட எடுக்கப்படலாம். நானும் ஓடியவர்களுடன் ஓடியிருக்கலாம் என்று யோசித்தேன். வெள்ளை வேன், உண்ணாவிரதம், காணாமல் போகுதல், பிறகு அதற்கு போராட்டம் எல்லாம் சில இளைய தலைமுறைக்கு தெரியாமல் இருந்தாலும் அதன் தாக்கங்களை உணர்ந்து அவர்கள் எச்சரிக்கையோடு தப்பி ஓடிவிட்டார்கள். நான் மட்டும் ஏன் இங்கே நின்றேன். இந்த அனுபவங்களை நான் கடந்து வந்தும் மனைவி பிள்ளைகள நினைச்சு என்றாலும் ஓடியிருக்க வேண்டும் என்று மனம் பேசியது. ஆனால் இலட்சுமணன் ஐயாவுக்கு ஒரு பிரச்சனையும் இல்ல. தனிமனிதன். எதையும் சந்திச்சுப் போட்டு போகும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துக்கொண்டு இலட்சுமணன் ஐயாவ பார்த்தன். அவரின்ர கண் மூடிக்கொண்டு போறது தெரிஞ்சது. 48 மணித்தியாலத்திற்கு மேல தண்ணியும் குடிக்காமல் இருக்கிறதால என்ன நடக்கப் போகுதோ தெரியயில்ல என்று "இலட்சுமணன் ஐயா" என்று என்னை அறியாமலே சத்தமாய் கூப்பிட்டேன். அவர் கண்விழித்தார். வாகனத்தின் கதவும் மெதுவாய் திறந்தது.

ஆச்சரியம். அந்த முன் சீற்றில அவள் மாத்திரம் இருந்தாள். கண்களில் கூலிங் கிளாஸ், கையில கேமரா, வாரி உச்சியில முடிச்சு போடப்பட்ட கொண்டை, வெள்ளை நிற பாவாடையும் கருப்பு நிற டீசேர்ட்டும் அணிந்தி ருந்தாள். நான் அவளைப் பார்த்த உடனேயே அவள் என்னை பார்த்துச் சிரித்துக் கொண்டே வேனை விட்டு இறங்கி நேராக என்னை நோக்கி நடந்து வந்தாள். நான் மேலே முடிஞ்சிருந்த சாரத்தை அவிட்டு அவளுக்கு முன்பாக மரியாதையாக நிற்க முற்பட கையை காட்டி "நோ.. நோ.." என்றாள்.

அவள் இறங்கிய பின்பு வேனிலிருந்து இரண்டு வயோதிபர்கள் இறங்கி வந்தார்கள். அவர்கள் இருவரும் தங்கள் கரங்களை இறுக்கிப் பிடித்துக் கொண்டு ஒருவரை ஒருவர் தாங்கி கொண்டதுபோல் நடந்து வந்தார்கள். வந்தவர்கள் இருவரும் நேராக சென்று இலட்சுமணன் ஐயாவ தொட்டு வணங்கினார்கள். அதை அந்தப்பெண் டிக் டிக் என்று சுற்றி சுற்றி படம் பிடித்தாள். இலட்சுமணன் ஐயா எந்த ஆசுவாசமும் இல்லாமல் எப் போதும் போல காலாட்டிக்கொண்டிருந்தார், ஆனால் அவரின் முகத்தில் மிகப்பெரிய சோர்வு வெளிப்பட்டுக்கொண்டிருந்தத நான் அவதானிக்க "என்ன தம்பி நீங்க மட்டும்தான் நிக்கிறியள்" என்றார் அந்த பெரியவர், நான் சிரித்தேன்.

"நான் ராஜன், இவள் என்னுடைய மனைவி திலகவதி, இது என்னுடைய மகள் பச்சரசி" என்றார். "பச்சரசியா" என்று மனதுக்குள் ஓடி யொடுங்கியது. "என்ன ஒரு தெய்வத்தையும் ஒரு பக்தனையும் மட்டும் தான் இந்த இடத்தில பார்க்கிறோம்" என்றாள் அந்த பச்சரசி. இப்போது அவள் கண்ணாடிய கழட்டிவிட்டு என்னைப் பார்த்தாள். அவள் கண்களில் ஆயிரம் ஏக்கங்கள் இருப்பதை உணர்ந்தேன். "நாங்கள் கொழும்பில இருந்து வாரோம். என்ர மகள் பச்சரசி அமெரிக்காவில் யேல் பல்கலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்தில படிக்கிறா. இலட்சுமணனின் உண்ணாவிரதத்தை கேள்விப் பட்டவுடனே பச்சரசி உடனடியாக வெளிக்கிட்டு வந்தவா" என்றார் ராஜன்.

எனக்கு ஒன்றும் புரியாதது போல் முழுசிக்கொண்டிருந்தேன். "என்ன குழப்பமா கிடக்கே" என்றார் ராஜன் சிரித்துக்கொண்டே. நான் "ஓம் என்றேன். இங்கே போலீஸ்காரர் ஒருத்தரும் வர மாட்டினம்" இந்த ஓடிப்போன சனத்த எல்லாம் வரச் சொல்லுங்க என்றார் பச்சரசி.

நான் சத்தமாய் அனைவரையும் கூப்பிட துளசியை தவிர மற்ற எல்லாரும் மெதுவாய் வரத்தொடங்கினார்கள். இப்போது அந்த வேன் ரைவர் ஒரு போத்தலும் கிளாசும் கொண்டுவந்து ராஜனின் கையில் கொடுத்தார். அதை அந்த கிளாசில் ஊற்றி அந்த கட்டில் வைத்தார் ராஜன். முதல் இருந்த சனத்தை விட தென்றலூர் கிராமமே கூடிநின்றது. இப்போது பல வயோதிபர்களும் அங்கே கூடியிருந்தார்கள். எனக்கு ஒன்றும் புரியயில்ல என்பது போலிருந்தன். "என்ன குழப்பமா கிடக்கே" என்றார் ராஜன் திரும்பவும் சிரித்துக்கொண்டே, நான் " ஓம்" என்றேன்.

ராஜன் தான் ஊற்றி வைத்த யூஸ் கிளாசை எடுத்து கையில் வைத்துக் கொண்டு "இலட்சுமணன் ஐயாவின் கோரிக்கையை அரசாங்கம் நிறை வேற்ற முடியுமோ முடியாதோ எங்களுக்கு தெரியாது. ஆனால் உங்களாலும் என்னாலும் நிறைவேற்ற முடியும். அந்த உறுதியை இந்த இடத்தில் நான் வழங்கிறன். இந்த தென்றலூர் கிராமத்திலிருந்து உலகம் முழுவதற்கும் இந்த செய்தியை நான் அறிவிக்கிறன்" என்றார். அவரது மகள் பச்சரசி அதை வீடியோ எடுத்துக் கொண்டிருந்தாள். "ஏலுமென்றா நீங்களும் ஒருக்கா சொல்லுங்கோவன், ஐயாண்ட கோரிக்கைக்கு நாங்கள் ஆதரவளித்து அதை நிறைவேற்றுவோமென்று" கூடியிருந்த மக்களைப் பார்த்து கேட்டார் ராசன். கூடியிருந்த எல்லாரும் அமைதி யாயிருந்தார்கள்.

"இந்த மனுசனை சாகவிடப்போறியளே" என்றார் ராஜன். அதற்கு எல்லாரும் பேசாமல் இருந்தார்கள். "அவர் உண்ணாவிரதம் இருக்கிறது அவரின்ர பிள்ளைகளுக்காகவோ குடும்பத்திற்காகவோ இல்ல. இங்க இருக்கிற உங்களுக்காகவும் உங்கள் தலைமுறைக்காகவும்" என்றார் ராஜன் அழுத்தமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஐயா நீங்க சொல்லுற மாதிரி நாங்க இந்த உண்ணாவிரதத்த ஆதரிக்க ஏலாது. ஏனென்றால் நிறைய பேர நாங்க இழந்துபோட்டோம். இனியும் இழக்க ஏலாது” என்றான் மனோஜ்.

இப்போது துளசியும் கொஞ்சம் கிட்டத்திற்கு வந்து நிண்டு கேட்டுக் கொண்டிருந்தான். “தம்பி இழந்தவைகள மீட்க முடியாமல் போகலாம். ஆனா இருக்கிறதையாவது இழக்காமல் இருக்கிறதிற்குதான் இலட்சுமணன் உண்ணாவிரதம் இருக்கிறார்” என்றாள்” பச்சரசி. பச்சரசியின் கதையை கேட்டு துளசி பக்கத்தில வந்து நீங்க எங்கேயோ இருந்து இங்க வந்து எங்களுக்கு என்ன செய்ய வேணுமென்று சொல்ல ஏலாது. இவரின்ர சேட்டைக்கு நாங்கள் இடம் கொடுத்தால் நாங்க எல்லாரும் உள்ளுக்கு போகவேண்டி வரும் என்றான் அழுத்தமாக. அவயளோட வந்த பெண் துளசிய பார்த்து “தம்பி, இந்த பச்சரசிய பார்த்து எங்கேயோ இருந்து வந்தவ என்று சொல்லுரியள்”.

“ஓ நீங்கள் யாரென்று எங்களுக்கு தெரியாட்டி அப்படித்தான் சொல்லுவோம் ”என்றான் துளசி.

இப்போது துளசியின் தாய் தாமரையக்கா முன்னுக்கு வந்து “தங்கச்சி நான் இந்த இலட்சுமணனுக்கு ஆதரவா அவரின்ர கோரிக்கைய ஏற்கிறன்” என்று இலட்சுமணன் ஐயாவுக்கு பக்கத்திலிருந்தா. “ணேய்.. அம்மா உனக்கு லூசா” என்றான் துளசி, “உனக்குத்தாண்டா லூசு” என்றா தாமரையக்கா. பார்த்துக் கொண்டிருக்க சில வயசுபோனவர்கள் ஒவ் வொருவராக வந்து இலட்சுமணன் ஐயாவுக்கு பக்கத்துல இருந்தார்கள். இப்போது ராஜன் தன்ர கையில இருந்த ஜூஸ் கிளாச தாமரையக்காவிடம் கொடுத்து இலட்சுமணன் ஐயாவுக்கு கொடுக்கச் சொன்னார்.

இலட்சுமணன் ஐயா குடிப்பதை பச்சரசி கிட்டச்சென்று வீடியோ எடுத்தா. எல்லாருக்கும் குழப்பமாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. ஆனால் இலட்சுமணன் ஐயாவும் தாமரையக்காவும் மிகவும் தெளிவாக இருந்தார்கள். ராஜன் யாருக்கோ போன் செய்து கொண்டிருந்தார். “அஞ்சு நிமிசத்துல நீங்க இங்க வரவேணும்” என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி முடியல ரெண்டு போலீஸ் ஜீப் முன்னுக்கு வர அதற்கு பின்னுக்கு இரண்டு பயூரோக்கள் வர திரும்பவும் எல்லாரும் ஓடத் தொடங்கினார்கள். துளசி எல்லாருக்கும் முன்பாக ஓடினான். “இங்கே ஓடாதேயுங்கோ” என்று சொல்ல, எல்லாரும் தூரமாக சென்று நின்றார்கள்.

வந்த பயூரோக்களில் இருந்து டை கட்டிய சில உத்தியோகத்தர்கள் இறங்கி வந்தார்கள், தூரமாய் நின்ற எல்லாரையும் அழைத்த ராஜன் “இன்று தென்றலூர் கிராமத்திற்கு திருவிழா ஏனென்றால் இங்க இருந்து கொண்டு உலகத்திற்கு ஒரு செய்திய சொல்லப்போறோம்” என்றார்.

இப்போது பச்சரசியின் கரங்களில் இருந்த கேமராவை ராஜன் வாங்கிக் கொள்ள அந்த கட்டுக்கு மேல் பச்சரசி ஏறி, “நான் பச்சரசி நான் உங்களுக்கு எல்லாம் ஒரு கதை சொல்லப் போறன் அது உண்மையா என்னுடய சொந்த கத..

முப்பது வருசத்துக்கு முதலில இந்த ஊருக்கு என்ர அப்பாவும் அம்மாவும் வந்தவை. ஏனென்றா அவை அப்போது மலேரியா கட்டுப் பாட்டு வேலையின்ர உத்தியோகத்தரா இருந்தவை. இந்த தென்றலூரில நிறைய பேருக்கு மலேரியா காய்ச்சல் இருந்ததால, அடிக்கடி இங்க வந்துபோக வேண்டியிருந்தது. அப்படி வந்துபோகக்குள்ளதான் ஒருநாள் இலட்சு மணனை என்ர அப்பா சந்திக்கக்கிடைச்சது. இலட்சுமணன் ஒரு விறகு வெட்டி. ஆனால் காடுகளில காய்ந்து போன அல்லது செத்துப் போன மரங்களை மட்டும் தான் வெட்டி விறகாக்கி எல்லாருக்கும் கொடுப்பார். அப்படி அவர் விறகு வெட்டுறதோட பாலப்பழம், வீரைப்பழம் என்று காட்டுப்பழங்களையும் விக்கிறவர். ஒருநாள் பாலப்பழம் வாங்குறதற்காக இலட்சுமணன் வீட்டுக்கு அப்பாவும் அம்மாவும் போகைக்குள்ள இலட்சுமணன்ர அம்மா சமைச்சுக்கொண்டிருந்தவா. வீட்டுக்கு வெளிய ரோட்டு வரைக்கும் வாசமடிச்சது. என்ன இப்படி வாசமடிக்குதே என்ன சமைக்கிறீங்க என்று அம்மா கேட்க எங்கட அம்மா பச்சரசி காளான் சமைக்கிறா என்று சொல்ல, என்ர அம்மாவும் பச்சரசி காளானா? என்ன இவ்வளவு வாசமடிக்குது. ஒருக்கா, பார்க்கலாமா என்று கேட்க, இலட்சுமணன் அத கூட்டிக்கொண்டுபோய்க் காட்டினார். இலட்சுமணனின் அம்மா இராமாயி வெளியில வந்து அம்மாவப் பார்த்து கும்பிடுறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயே என்று வணக்கம் தெரிவித்தா. என்னம்மா இப்படி கமகமவென்று வாசமடிக்க சமைக்கிறியளே என்று அப்பா கேட்க, அதுவா நம்ம பச்சரசி காளான் எல்லா வீட்டுலயும் இப்ப பச்சரசி காளான் தான் சமைப்பாங்க என்றார் இராமாயி,.

அம்மாவுக்கு வாயூறிக்கொண்டிருந்தது. இந்த வாசத்தை ஒருக்கா டேஸ்ட் பண்ணி பார்க்க கிடைக்காதா என்று நினைக்க, "என்னம்மா ஒருக்கா டேஸ்ட் பண்ணி பாரு" என்று சொல்லி குசினிக்குள்ள போய் ஒரு பிளேட்டில கொஞ்சம் பச்சரசி காளான வதக்கினத கொண்டுவந்து கொடுத்தா. அம்மாவும் அப்பாவும் சாப்பிட்டுப்போட்டு இப்படி ஒரு சுவைய சுவைக்கவேயில்ல என்று சொல்ல, இது சுவை இல்ல தம்பி இது உயிர், உயிர் வாசம் என்றார் இராமாயி.

என்னது உயிர்வாசமா, அப்படியென்றா என்னவென்று அப்பா கேட்க, அதுவா இந்த பச்சரசி காளான் சாப்பிட்டா பிள்ளை இல்லாதவங்களுக்கு பிள்ளை கிடைக்கும் என்று ராமாயி சொல்ல, அம்மாவின் மூச்சு ஒருக்கா நிற்குமா போலிருந்ததாம்" என்று பச்சரசி கூறிவிட்டு அவளுடைய அம்மாவ பார்த்தாள்...

ஊரே அமைதியாக கதையை கேட்டுக் கொண்டிருந்தது. இப்போது பச்சரசியின் அம்மா திலகவதி அந்த கட்டுக்கு மேலே ஏறி வந்து பேசத்தொடங்கினா. "இராமாயி சொன்னதும் உண்மையிலேயே எனக்கு ஒரு புறம் அதிர்ச்சி, மறுபுறம் ஆச்சரியம், ஏனென்றால் கலியாணம் முடிச்சு பத்து வருசம் ஏறாத கோயிலில்ல. பார்க்காத டொக்டர் இல்ல. ஆனால் இந்த ஊருக்குள்ள இப்படியொரு காளான் பிள்ளைய பிறக்க மருந்தா கிடைக்குமா? நாங்க இரண்டு பேரும் ஆச்சரியமா பார்த்தோம் இராமாயி அம்மாவ.

என்னம்மா இது எல்லாத்துக்கும் தெரியும். உங்களுக்கு தெரியாதா? இந்த இலட்சுமணன் கூட கனகாலத்திற்கு பிறகு, இந்த ஊருக்கு வந்து இந்த காளான் சாப்பிட்டுத்தான் பிறந்தான்" என்று கூறினா.

பிறகு அப்படியே நின்றுகொண்டு, "எடியே தாமரை எங்க புள்ள நிக்கிற" என்று குரல் கொடுக்க, ஒரு கர்ப்பிணித் தாய் நிறைமாதமா அடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவில வெளியே வந்து "என்ன இராமாயி அக்கா கூப்பிட்டநீங்களா" என்று கேட்க, இங்க பாரும்மா, இந்த தாமரைக்கும் பிள்ளையில்லாம லிருந்தது இப்ப பச்சரசி காளான் சாப்பிட்டு நிறைமாதம்" என்றா.

நாங்க ரெண்டுபேரும் அன்றைக்கு மதிய சாப்பாடு அவங்க வீட்டிலேயே சாப்பிட்டோம். அதற்கு பிறகு இலட்சுமணனின்ர வீட்டிலதான் கொஞ்ச நாளா சாப்பாடு.

இரண்டு மாசத்துல நான் கருவுற்றிருக்கிறன் என்று செய்தியை டொக்டர் சொல்லைக்குள்ள எங்களுக்கு நம்பவே முடியல. அதற்குப்பிறகு பச்சரசி பிறக்கும் வரைக்கும் இங்க இருந்திட்டு பிறகு ரான்சரில கொழும்புக்கு போக வேண்டி வந்திச்சு" என்று சொல்லி முடித்தா திலகவதி.

எல்லாரும் இலட்சுமணன் ஐயாவை அனுதாபமா பார்த்துக் கொண்டி ருந்தார்கள். ராஜன் இப்ப பேசத்தொடங்கினார். "இன்றைக்கு உங்கட ஊரில பச்சரசி காளான் இல்ல, தேடினாலும் கண்டுபிடிக்க முடியாது. பச்சரசி காளான் என்றா இங்கிருக்கிற பலபேருக்கு தெரியாது"

இப்படிப்பட்ட பச்சரசி காளான உலகம் முழுவதற்கும் அறிமுகப்படுத்த வேணும் என்று சொல்லித்தான் என்ர பிள்ளைக்கு பச்சரசி என்றே பேர் வைத்தோம். இங்க வந்திருக்கிற அதிகாரிகள் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த விவசாய ஆராய்ச்சியாளர்கள். அண்மையில் இந்த பச்சரசி காளான் பற்றிய இவங்கட ஆய்வில நம்மட நாட்டில, குறிப்பா நமது பிரதேசங்களில் இருந்த அந்த பச்சரசி காளான் தொடர்பாக ஆய்வு செய்திருக்கிறாங்க. ஆனா துக்கமான விசயம் என்னென்றால் அந்த பச்சரசி காளான் இப்ப காணாமல் போயிரிச்சு என்றதுதான். பச்சரசி காளான் தனியா பிள்ளப்பேற்றுக்கு மட்டுமல்ல, பிறக்கிற பிள்ளைங்க நோய் இல்லாத ஆரோக்கியமான நிறைய நோயெதிர்ப்பு சக்தியோட இருக்கு றதுக்கும் காரணமாய் இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தி ருக்கிறார்கள்" என்று கூறிவிட்டு வந்திருந்த அதிகாரிகளை பார்த்தார்.

அவர்களில் ஒரு கருப்பினத்தவர் இங்கிலீசுல பேச தமிழில் பச்சரசி மொழிபெயர்த்தார். "முதலில் உங்கள் எல்லாருக்கும் வணக்கம், இலட்சுமணன் ஒரு விறகுவெட்டி. ஆனால் காட்டையும் காட்டோடு வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரினங்களையும் பாதுகாப்பதற்காக திருமணமே செய்யாம போராடி வாறாரு. குறிப்பாக இந்த பச்சரசி, காணாமல் போன இந்தப் பச்சரசி காளான திரும்பக் கொண்டுவாரதுக்கு போராடிக்கொண்டிருக்கிறார். நீங்களும் இந்த நாட்டில இருக்கிற எல்லாரும் இதற்காக எங்களோட சேர்ந்து போராடோனும், உண்மையில பச்சரசி காணாமபோகயில்ல. உங்கட நிலத்தில எங்கோ ஒரு மூலையில் வெளியே வரமுடியாம தவிச்சுக் கொண்டிருக்கிறா. அதற்கு காரணம் நீங்க பாவிக்கிற ரசாயன உரங்களும் மருந்துகளும்தான். யார் நீங்க அதை பாவிக்காம தோட்டம் செய்கிறீங் களோ உங்கட வீட்டுக்கு பச்சரசி வருவாள் என்றார்.

கூட்டத்தில இருந்த கலைவாணியின் மகள் மீனா எழுந்து நின்று "எங்கட தோட்டத்தில பச்சரசி இருக்கிறாள்" என்றாள்.

அவளுக்கு பத்து வயசு இருக்கும். ஆச்சரியத்தோடு அனைவரும் மீனாவை பார்த்தார்கள். பின்வரிசையில் நின்ற மீனாவின் தாயார் கலைவாணி "அவ என்ர பிள்ளைதான்" என்றாள்.

"கலைவாணி உங்கட வீட்ட பச்சரசி காளான் இருக்கா" என்று ஆச்சரியத் தோடு வந்திருந்த ஒரு அதிகாரி கேட்டார். "பச்சரசி இருக்கு. நிறைய இருக்கு".

"என்னுடைய கணவர் இந்த மண்ணையும் மக்களையும் நேசிச்ச ஒருவர். அதற்காகவே வாழ்ந்தவர். போராடியவர். அவர் இருக்கக்குள்ள இந்த நிலத்தில் ஒரு விசத்தையும் போட விடமாட்டார். நிலம் என்ர அம்மா. அவள நஞ்சாக்க விடமாட்டன் என்று அடிக்கடி சொல்லுவார். ஆனா கடைசி யுத்தத்தில அவர் காணாம போயிட்டார். இன்றைக்கு வரைக்கும் அவரத் தேடி போராடிக் கொண்டிருக்கிறன். அவரின்ர நினைவாக, அவரின்ர கனவுக்காக இந்த நிலத்த நஞ்சாக்காம விவசாயம் செய்து கொண்டிருக்கிறன். ஊரிலும் உலகத்திலும் இருந்து காணாமல் போன பச்சரசி காளான் காணாமல் போன என்ர கணவனின் நினைவாக என்ர தோட்டத்தில உயிரோட இருக்குது என்று நினைக்குள்ள என் கணவனே உயிரோடிருக்கிறதா நான் நினைக்கிறன்" என்று கலைவாணி விம்பி வெடித்து அழுதாள். கூடியிருந்த அனைவரும் கண் கலங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்த அதிகாரிகளில் ஒருவர் மீனாவை மேடைக்கு அழைத்தார். மீனாவின் பக்கத்திலிருந்த திலகவதி மீனாவை பார்த்து "நீ இன்றைக்கு பச்சரசி காளான் சாப்பிட்டியா" என்று கேட்டார். "ஓ இப்பதான் சாப்பிட்டன்" என்றாள் மீனா. "என்ன இப்படி வாசம் அடிக்குது. அன்று அடிச்ச வாசம் இன்றைக்கு அடிக்குமாபோலிருக்குதே" என்றாள். அது வாசமில்லம்மா, உயிர் வாசம்" என்றார் இலட்சுமணன் சத்தமாக.

எல்லாரும் இலட்சுமணனை நோக்கினார்கள். "நான் விறகு வெட்டி பிழைப்பவன் தான். ஆனால் எங்கட ஊரில, எங்கட பிரதேசத்தில, கடந்த முப்பது வருடத்தில நிறைய, செடிகள், கொடிகள், காளான்கள், மரங்கள் காணாமல் போயிடுச்சு. அது ஏன் காணமல் போயிடுச்சு. எப்பிடி காணமல் போயிடுச்சு என்டு நாங்கள் யாரும் யோசிக்கிறது இல்ல. இந்த மண்ணில இருக்கிற செடியும், கொடியும், மரமும், பறவையும் எங்களுக்காகத்தான் வாழ்ந்ததுகள். அதுகள் வாழயில்ல என்டா எங்களுக்கு வாழ்க்கையில்ல. இந்த காணமல் போனதுகளுக்காக நானும் பச்சரசியும் தான் இப்ப போராடிக் கொண்டிருக்கிறம். என்ர ஏக்கத்தை அடிக்கடி பச்சரசிக்கு போனில கதைக்கக்குள்ள சொல்லுவன். பச்சரசி தான் இந்த விழிப் புணர்வு ஏற்படுத்த ஒரு உண்ணாவிரத்தை இருக்க சொல்லிச்சு" என்றார்.

ராஜன் தன் வீடியோ கேமராவை ஒரு பக்கத்தைப் பார்த்து நிறுத்தி "உலகம் முழுவதுமிருந்து லைவ்வில இந்தக் காட்சிய பார்த்துக் கொண்டிருக்கிற இலட்சக்கணக்கான பார்வையாளர்களே, மீனாவின் அப்பாவின் கனவாக அவள் வீட்டிலிருக்கும் காளானுக்கு என்ன பெயர் வைக்கவேண்டும் என்று ஆன்லைனில் பதிவிடுங்கள்" என்றார். சிறிது நேரத்தில் "உயிர்வாசம்" என்று பத்து இலட்சம் பேர் பதிவிட்டார்கள்.

துளசி ஓடி வந்து இலட்சுமணன் ஐயாவ முத்தமிட்டு "இந்த உயிர் வாசத்துக்காய் ஆயிரமாயிரம் இளைஞர்கள் இலட்சுமணன் ஐயாக்களாக மாறுவோம்" என்று அவர் தலையில் அடித்து சத்தியம் செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவை தட்டும் கதை சொல்லி

# தேனிலை

நல்ல காலம் பொறந்திருக்கு
நல்ல காலம் பொறந்திருக்கு
நீ தான் தெய்வம்
உன்ர வீடு தான் கோயில்
நல்ல காலம் பிறந்திருக்கு
நல்ல காலம் பிறந்திருக்கு.
வீட்டோட காச்சலென்று
ரோட்டோட சொன்னாங்க
கூட்டோட நோயென்று
பாட்டோட சொன்னாங்க.
நல்ல காலம் பொறந்திருக்கு
நல்ல காலம் பொறந்திருக்கு
முன் வாசல் வழியால வந்த துன்பம்
பின் வாசல் வழியால ஓடட்டும்
கிழக்கால வெளிச்சாச்சு
தென்றல் மேற்கால வந்தாச்சு
தாயே ஒரு பானையில தண்ணியை வை
இந்த தண்ணியில கொஞ்சம்
அந்த இலைய வையி...

என்ன சாமி இலையெல்லாம் சொல்லுறீங்க
அதற்கு நாங்க எங்க போவம்?

இலை தானே உன் வீட்டிலேயே கண்டுடேனே,
அங்க பாரு அது கண்ணடிக்குது தாயே,

எங்க எங்க அத காட்டுங்க...

காட்ட மட்டும் மாட்டேனம்மா
அந்த செடி சொன்ன கதையும்
சொல்லவல்லே வேணுமம்மா...

கதைய சொல்லுங்க சாமி

ஒரு ஊரில பள்ளிக்கூடம்
அந்த பள்ளிக்கூடத்தில ஒரு வீரனம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சானுவின் வெற்றியை பாடசாலைக்கும் அப்பால் நாம் கொண்டாட வேண்டும்" என்று நான் கூறியதை அனைத்து ஆசிரியர்களும் ஆமோதித்தார்கள். "தில்லைநகர் ஆரம்ப வித்தியா லயத்தின் முதலாவது சாதனையாளனாக சானுஜன் வெற்றி பெற்றிருக் கிறான். இளையவர்களுக்கான நூறுமீற்றர் ஓட்டத்தில் மாவட்டத்தையும் வென்று மாகாணத்தின் வெற்றியாளனாக தெரிவு செய்யப்பட்டிருக் கிறான். இனியென்ன தேசிய வெற்றியை நோக்கி அவன் பாதங்கள் பதியப்போகுது. இந்த தேசத்திற்குப் பெருமை சேர்க்கும் விடிவெள்ளியாக சானு வரப்போகிறான்" என்று பள்ளிக்கூட அசம்பிளியில் நான் கூறிய போது ஒரே கரகோசம், கரகோசம். ஓய்ந்திருந்த அமைதியில் சானுஜனை ஆயத்தப்படுத்துவதற்காக அவன் பெற்றோரை ஆயத்தப்படுத்த வேண்டும் என்று நான் கூறியபோது ஆசிரியர் இராகவன் கைய உயர்த்தி "ஒருக்கா பேசலாமா" என்று கேட்டார். "சொல்லுங்கோ சேர்" என்றேன்,

"தில்லைநகர், எங்கட மாவட்டத்தில பழம்பெரும் கிராமமாக இருந்தாலும், இன்னும் பொருளாதார நிலையில மிகவும் பின்தங்கிய நிலையில நிறையப்பேர் இருக்கினம், எங்கட தில்லைநகர் ஆரம்ப பாடசாலையில் படிக்கிற நூற்றி முப்பத்தி ரெண்டு மாணவர்களில் நிறையப்பேர் போதிய போசாக்கற்றவர்களாக இருக்கிறார்கள் என்று ஆய்வறிக்கை கூறுகின்றது. சேர், குறிப்பா சானுஜனின் குடும்பம் மிகவும் பின்தங்கியிருக்குது". என்று இராகவன் ஆசிரியர் கூறினார்.

"இந்த போசாக்கற்ற கிராமத்திலிருந்து மாகாணத்தின் சிறந்த ஓட்ட வீரன் தெரிவு செய்யப்பட்டுள்ளான். ஒருக்கா சானுஜனின் வீட்டுக்கு போய்ப் பார்ப்போம்" என்று கூறினார்.

போவோம் என்ற அழைப்பை நானும் ஏற்றுக் கொண்டு நானும் இராகவன் ஆசிரியரும் சானுஜன் வீட்டுக்கு போனோம்.

அது ஒரு குச்சொழுங்கை. அழகான காட்டு தாவரங்களின் பூக்களும் காய்களும், கனிகளும் சுவாசத்திற்கு வாசத்தை கொடுத்து வரவேற்றது. குச்சொழுங்கையின் முடிவில பல கல்வீடுகளுக்கு இடையில சானுஜனின் வீடு அரைகுறையா கட்டி முடிக்காம இருந்திச்சு. ஆனால் ஒரு சோலைக் குள் மலர்ந்த பூ போல வாசலில் நின்று சானுஜனின் அம்மா மலர்ந்த முகத்துடன் வரவேற்றா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்பத்தான் தம்பி சொன்னான் சேர் வருவீங்க" என்று கூறிக்கொண்டே கதிரைகளை முற்றத்தில் எடுத்து போட்டா. சானுஜனின் தாயாரை எனக்கு ஏற்கனவே தெரியும். பல தடவைகள் பாடசாலைக் கூட்டங்களில் கலந்து கொண்டவர். அவரது கணவர் ஒரு சிறந்த தச்சு தொழிலாளி. அவருடைய கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட கதிரையில்தான் நான் பாடசாலை அதிபராக அமர்ந்து கடைமை புரிகின்றேன்.

"எங்க சானுஜனின் அப்பாவ காணயில்லை" என்று கேட்டேன். "அவர் இப்பத்தான் காட்டுக்கு தேன் எடுக்க போனவர். வந்திடுவார் சேர்" என்று சொல்லி வாய் மூடயில்ல "இந்தா வந்திட்டார்" என்றார் சானுஜனின் தாயார்.

"என்ன தங்கராசாண்ண எப்படி இருக்கிறிங்க" என்று கேட்டேன். "சுகமாக இருக்கிறம் சேர்" என்றார் பணிவுடன். "இப்பத்தான் தேனெடுத்திட்டு வந்தன், நாளைக்கு அமாவாசையென்றதால இன்றைக்கே எடுக்கவேணும். மாதத்திற்கு ஒருக்காவென்று நானும் மரத்தில மாறிமாறி எடுக்கிறனான்" என்றார் தங்கராஜா.

"அப்ப தேன் வியாபாரம் எப்படி போகுது" என்றார் இராகவன் சேர். என்ர தொழில் தச்சுத் தொழில்தானே சேர். தேன் எடுக்கிறது எங்கட பரம்பர தொழில். வீட்டுத்தேவை வேறயாருக்கும் அவசரத்தேவைக்கு மருந் துக்கும் கொடுப்போம். என்றார் தங்கராஜா.

"வீட்டில சேர், மகன் சானுக்கும் மகள் தேவிக்கும் எப்பவும் தேன் தான் சாப்பாட்டில முக்கியமாக சேத்துக் கொடுப்பம்" என்றார் சானுவின் தாயார் ராணி. "சரி தங்கராஜண்ண சானுஜன் மாகாணத்தின் முதல் ஓட்ட வீரனாக தெரிவு செய்யப்பட்டுள்ளான். இந்த ஒரு மாதத்திற்கு இவனுக்கு நல்ல சத்தா சாப்பாடு கொடுக்கவேணும்" என்று கூறிக்கொண்டே எனது மோட்டார் சைக்கிலில இருந்த சப்பாட்டு மூட்டைய எடுத்து கொடுத்தேன்.

"ஏன் சேர் நீங்க இவ்வளவு கஸ்ட்டப்பட்டு இதெல்லாம் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறியள்" என்றார் ராணி. "பிள்ளையின் ஆரோக்கியத்தில நாங்க கவனம் செலுத்தவேணும்" என்று நான் பதிலுக்கு கூறினேன். உடனே ராணியின் முகம் சற்று மாறுவதை நான் பார்த்தேன். "சேர் உங்கட உதவிக்கு நன்றி. ஆனா பிள்ளையின்ர ஆரோக்கியத்த நீங்க குறை சொல்லாதிங்க சேர். அவனுக்கு என்ன குறை வச்சநாங்க, நாங்க ஏழைகள் தான் ஆனால் எங்கட உடம்புக்கு தேவையான ஊட்டச்சத்து எங்கட உடம்பில இருக்குது. இவனோட எல்லா பிள்ளைகளும் ஓடினாங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனா இவன் மட்டும் இவ்வளவு வேகமா ஓடினதிற்கு காரணம் இவனுக்கு நாங்க கொடுக்கிற குடிநீர்" என்றவுடன் ராகவன் சேர் என்ர முகத்த பார்த்தார்.

"தம்பி சானு இங்க வாங்கோ சேருக்கு சொல்லுங்க. ஒவ்வொரு நாளும் என்ன குடிநீர் குடிக்கிறிங்கவென்று" ராணி சானுஜனை அழைத்தார். விறாந்தையில் நின்ற சானுஜன் மெதுவாக வந்தான். சொல்லு "தம்பி என்ன குடிக்கிறநீயென்று சொல்லன்".

"பால் குடிக்க மாடுமில்ல, வாங்கி குடிக்க காசுமில்ல, மா குடிக்க காசுயில்ல, மாச சம்பளம் அப்பாக்கு இல்ல, பீசா சாப்பிட காசு இல்ல", அம்மா மாச சம்பளம் வாங்குறதில்ல, முட்டையும் மீனும் இறைச்சியும் ஒவ்வொரு நாளும் சாப்பிடறதில்ல, வங்கியில காசு வட்டியாக இல்ல என்று சானுஜன் சொல்லக்கொண்டே போனான்.

ஒருக்கட்டத்தில மெதுவா சொல்லிக்கொண்டே என்னைப்பாத்து சிரித்தான். "இது என்ன பாட புத்தகத்தில இருக்கிற பாட்டா? இல்ல சேர் இது ராணி எழுதிக் கொடுத்து தம்பி ஒவ்வொரு நாளும் சொல்லுவான், தேவிக்கும் தம்பிக்கும் ஒரே பாடல் தான்" என்றார் தங்கராஜண்ண.

"எங்க பாட்டை முழுசா சொல்லு பார்ப்போம்" என்றேன். "தேவி தேவி என்று ராணி அழைக்க மகள் தேவி வெளியே வந்தாள்". அவள் பதினோ ராம் ஆண்டு படிக்கிறாள் போல. "தேவி நமது வீட்டுச்சாப்பாட்ட பற்றி சேர் கேட்கிறார். கொஞ்சம் சொல்லு" என்றார் ராணி. "தேவி வணக்கம் சேர் என்று கூறிவிட்டு புன்னகைத்த முகத்துடன். நாங்க சேர் ஆரோக்கியமா சாப்பிடுறதாலதான் ஆரோக்கியமா இருக்கிறோம்".

"தம்பியின்ர வெற்றிக்கு அவன் குடிக்கிற குடிநீர் தான் காரணம். அப்பா இன்றைக்கு ஒரு சிறந்த தச்சன். நல்ல உடல் கட்டோட இருக்கிறார். மரமேறி தேன் எடுக்கிறவர். நல்ல உழைப்பாளி. இது எல்லாத்திற்கும் காரணம் இந்த குடிநீர் தான்".

"என்னடா இது என்னத்திற்கோ வந்து என்னவோ நடக்குது" என்று நான் மெதுவாக ராகவன் சேருக்கு சொல்ல, "இது தான் பொல்லு கொடுத்து அடி வாங்கிறது என்று சொல்லுவினமோ" என்று இராகவன் சேர் மெதுவா காதுக்குள்ள சொன்னார். தேவி தொடர்ந்து பேசிக்கொண்டேயிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்க பாருங்க சேர், இது" என்று முற்றத்தில நின்ற ஒரு கொடியை காட்டினாள். "ஓ... இது முடக்கத்தான் கொடி" என்றேன். "இது தான் எங்கள் குடும்பத்தின் உறுதியான வெற்றிகளுக்கு காரணம். உழைப்புக்கும் உயர்வுக்கும் எங்கட உடல் எலும்புகள் பெலமா இருக்கணும் சேர். எங்கட பாட்டி இருந்த காலத்திலயிருந்து ஒவ்வொரு நாளும் இரவு சாப்பாட்டுக்கு முதலில ஒரு கப் முடக்கொத்தான் சூப் குடிச்சிட்டுத்தான் பாட்டி சாப்பாடுவா, எங்கட பாட்டி சாகக்குள்ள தொண்ணூற்றிரெண்டு வயசு. நடந்து கொண்டுதான் செத்தவ, தாத்தா தொண்ணூறு வயசில தான் செத்தவர். சாகக்குள்ள தேன் எடுத்து கொடுத்து போட்டுத்தான் செத்தவர். இங்க பாருங்கோ சேர் இது தான்" என்று ஒரு போத்தல் கொண்டு வந்து காட்டினார்" ராணி. அதுக்குள் ஒரு தூள் இது முடக்கத்தான் பவுடர். இத தேனில கலந்து காலையில ஒரு உருண்டை தம்பி சாப்பிட்ட பிறகுதான் தம்பி சாப்பிடுவான்" என்றார். "என்னன்டா சேர் நாங்க இந்த இலையோடையும் குழையோடையும் வாழுறோம் என்றார்" தங்கராசண்ண. நான் மெதுவாக அந்த சாப்பாட்டு மூட்டையை மோட்டார் சைக்கிளில் வைத்து திரும்பவும் கட்டத் தொடங்கினேன்.

மணிக்கூட்டை பார்த்தன். நேரம் 6 மணியாகுது 7 மணிக்கு. டொக்டரிட்ட போக வேணும் என்று மனம் பேசியது.... கிழமைக்கு கிழமை இன்சுளின் ஊசி போடவல்லோ வேணும்.

சுட சுட மொடக்கத்தான் சூப் ராணி கொண்டு வந்தார். மொடக்கத்தான் சூப்பை குடித்துக்கொண்டே ராகவன் சேர் வாய்க்குள்ள முணுமுணுத்தார்.

*"மொடக்கத்தான் தினம்*
*குடிக்கத்தான் வெற்றி"*
*"கொடுக்கத்தான், மனம்*
*நாளும் துடிக்குந்தான்......."*
*என்று எனக்கு விளங்கியது.*

சானுஜன் ஒரு தேசிய வீரனாக வெற்றி வாகை சூடும் போது மொடக்கத் தான் உலக உற்சாக பானமாக விற்கப்படுமென்று நினைத்துக் கொண்டே வீட்டை நோக்கி எனது வாகனத்தை திருப்பினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவை தட்டும் கதை சொல்லி

# பாலிலை

நல்லகாலம் பொறந்திருக்கு
நல்லகாலம் பொறந்திருக்கு
நீங்க தான் தெய்வம்,
உங்கட வீடுதான் கோவில்,
எங்க வீட்டில யாரயும் காணலயா,
நாலு தெருவுக்கு கேக்குது வீட்டுபிள்ள கத்துறது
குழந்தவரம் கேக்க, கொடுத்திட்டுப்போய்
அதற்கு காணிக்க கேட்க வந்திருக்கிறன் தாயே,
பிள்ளை அழுகுது பால்கொடுக்க யாருமில்லையா,

வந்திட்டன் சாமி வந்திட்டன்,
கோடியில கொடிகட்டி காயவச்ச
உடுப்பையெல்லாம் மழைவரப்போகுதெண்டு
எடுக்கப்போக கத்துரான் தம்பிப்பிள்ள ஊரே கேட்கவல்லோ,
அங்கர் வாங்க அப்பா போயிருக்காரு
சர்லக் வாங்க மாமா போயிருக்காரு
வந்திருவாரு செல்லம் அழாத கண்னே,

நல்லா பாடுறியள் பாட்டு
உன் மார்பில பாலை வச்சிட்டு
ஊர்மாட்டுப் பாலத்தேடி திரியிறியே,
பாலகனுக்கு உன் பாலை கொடுத்தத்தானே
அவன் பார்வேந்தன் ஆகிடுவான்,

அப்படியே சாமி,
அது இருக்கணுமே கொடுக்கிறதிக்கு,

இந்த வீட்டில நல்ல செடி
இருந்தா அது தானாக ஊறும் தாயே,
வற்றாம பாயும் தாயே,

அப்படியா
அது எப்படி சாமி சொல்லுங்க கேட்போம்,

நம்ம ஊரிய ஒரு நாளில நடந்த கதை தாயே,
என் காதுபட நாலுபேர் கதச்ச கத சொல்லுறன் தாயே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சங்கவி மீண்டும் இண்டைக்கு வேலைக்கு வந்திருக்கின்றாள். அதே அழகு, அதே மலர்ச்சி. எந்த மாற்றமும் இல்ல. அவளின்ட உடம்பில. என்ன? என்றும் இருபது போலிருக்குது என்றேன். "ஏன் அப்படி சொல்லுரியல். வயசு போக போக எல்லாம் மாறிக் கோண்டே தானே இருக்குது" என்றாள் சங்கவி. "இல்ல சங்கவி உன்னில அந்த மாற்றத்தை காணயில்ல" என்று நான் சொன்னதற்கு ஒரு புன்முறுவ லோடு அவள் தன் அலுவலக அறைக்குள் சென்றுவிட்டாள்.

நானும் சங்கவியும் நீண்ட நாள் நண்பிகள். "கட்டைப்பாடி" கிராமத்தில் இருவேறு துருவங்களாக இருக்கும் ராமனுஜனுக்கும் செந்திலுக்கும் பிள்ளைகள் என்றாலும் ஒரே பாடசாலை, பல்கலைக்கழகம் என்று எங்கள் இளமைக்காலம் முதல் இணைபிரியாத நண்பிகள். கடைசியாக மல்லிகைநகர் பிரதேச செயலகத்தில் இருவரும் சேர்ந்து வேலை செய்யும் வாய்ப்பு கிடைத்து விட்டது.

திருமண வாழ்க்கை என்னவோ அவளுக்கு இருபத்தியேழிலும் எனக்கு முப்பது வயதிலும் நடைபெற்றது. இருவரது கணவன்மாரும் அரச உத்தியோகத்தர்கள். அவளுக்கு இப்போது மூன்று பிள்ளைகள். எனக்கு ரெண்டு பிள்ளைகள். இப்ப அதுதான் பிரச்சன. சங்கவி எப்போதும் எங்கட வீட்டுக்கு வந்து போவாள். என்ர அம்மா பார்வதி, சங்கவி எப்ப வீட்டுக்கு வந்திட்டு போனாலும் "ஏய் சாந்தி பாருடி அவள இப்பவும் எப்படியிருக் கிறாள்? நீ ரெண்டு பெத்திட்டாய் என்றதும் கிழவி மாரி வந்திட்டா, அவள பார் எப்படி இருக்கிறாள்" என்று பல தடைவ சொல்லிட்டா. அம்மா சொல்லாட்டியும், என்ர அடி மனசிலயும் அதே கவலைதான். ஆனபடியால் தான் மூத்தவனுக்கு நாலுமாதம் தாய்ப்பால் கொடுத்தனான். இளை யவனுக்கு மூன்று மாதத்திலேயே தாய்ப்பாலை நிப்பாட்டிவிட்டு அங்கர் மாவை வாங்கி கொடுத்தனான். என்றாலும் முகத்தில சுருக்கம், கண்ணில குழி விழுந்த மாதிரி, இடுப்பு நிறைய சள்ள, வயிறு பெருத்து சள்ளை தள்ளுது. எல்லாத்திற்கும் காரணம் தாய்ப் பால் கொடுக்கிறதாலத்தான் என்று இங்க பல பேர் ஒ.ஃப்பீசில சொல்லிப் போட்டினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் சங்கவி மூன்று பிள்ளைக்கு பிறகும் அதே அழகுடன் இருக்கிறாள். பிள்ளைக்கு தாய்ப்பால் கொடுக்க வேணும் என்றதிற்கா கவே நாலு மாசம் வரை லீவு எடுத்து போட்டு பிறகு ரெண்டு மாசம் நோ பே லீவும் எடுத்துப்போட்டு வந்திருக்கிறாள். ஆனா அவள் அழகு கூடியி ருக்கே தவிர குறையலையே! "என்னடி சாந்தி" மீண்டும் சங்கவியின் குரல் என் அறைக்குள் வந்தவள் "ஒரு மாசத்திற்கு மூன்று மணியோட வீட்ட போறதிற்கு மெனேஜர் அனுமதி தந்திட்டாரடி, சின்னவருக்கு ஒரு வயசு வரைக்கும் பால்கொடுக்கிறதா தீர்மானிச்சிருக்கிறன்" என்றாள்.

"என்னடி சங்கவி எப்படியடி இப்படி உன்னால மட்டும்" என்றேன். "என்ன? என்ன? ஏதோ ஆச்சரியமா கேக்கிற. என்ன தாய்ப்பால் கொடுக்கிறது பெரிய தியாகமா? அது ஒவ்வொரு தாயின்ர கடமை. அத சரியா செய்யிறது இந்த உலகத்திற்கு நாம செய்ய வெண்டிய பெரிய பொறுப்பு" என்றாள்.

"என்ன பொறுப்பு, சேவை என்ற பேச்சு" என்று கேட்டுக்கொண்டே அறைக்குள் சந்திரன் நுழைந்தான், சந்திரனும் எங்கள் கட்டைப்பாடி கிராமம்தான். நல்ல பிரண்ட்லியா கதைப்பான். எங்கள விட ரெண்டு வகுப்பு கீழ படிச்சவன். அவனும் கலியாணம் முடிச்சி மனிசிக்கு ரெண்டு பிள்ளைகள்.

"என்ன சாந்தியும் சங்கவியும் ஏதோ அழக பற்றி அடிக்கடி கதைக்கிறியள் வயசு போக அழகும் போகும் தானே" என்றான். "டேய்! தம்பி சங்கவிக்கு வயசு கூட கூட அழகுமெல்லே கூடுது. அது தான் எப்படி என்று தெரியல, என்னடி நீ உண்மையா என்னை பார்த்து சரியா வொரி பண்ணுர"? என்றாள் சங்கவி.

"ஏண்டி வொரி வராது. நீயும் நானும் ஒரு ஊர், ஒரு ஸ்கூல், ஒரு வகுப்பு. ஒரே வயசுல சாமத்தியப்பட்டோம். ஒரே யுனிவர்சிட்டி, ஒரே படிப்பு எல்லாம் ஒரே மாதிரி எனக்கென்னடி குறை. ஏன் நான் மட்டும் ரெண்டு பிள்ளையோட கிழவிமாதிரி போயிட்டன் என்றது இல்ல என்ர பிரச்சனை, நீ ஏன் மூன்று பிள்ளை பெத்த பிறகும் இப்படி குமரி மாதிரி இருக்கிறா என்றது தான் என்ர பிரச்சனை" என்று கொஞ்சம் சத்தமாகவே நான் பேசினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் அமைதி, அந்த அமைதியில் அறைக்குள் நானும் சங்கவியும் சந்திரனும் மட்டும்தான் இருந்தோம், கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு கத்திபோட்டன் போல. "சொரி மன்னிச்சி கொள்ளடி" என்றேன். சந்திரனும் சங்கவியும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டு தலையை கீழே போட்டுக்கொண்டு அமைதியானார்கள்.

"சொரி மனசில இருந்தது வெளிய வந்திருச்சி அவ்வளவுதான், சாந்தி என்னடி அப்படி கதைக்கிற. அழகில என்ன இருக்கடி, ஏன் இப்படி யோசிக்கிற" என்றாள் சங்கவி. "இல்ல சாந்தி சொல்லுறதில ஒரு உண்மையிருக்கு. பெண் என்றவள் பூ மாதிரி என்று சொல்லுவினம். அந்த பூ வாடி போறதிற்கும் ஒரு காலம் இருக்கு" என்றான் சந்திரன்.

சங்கவியின் கண்களில் கண்ணீர் துளியிட தொடங்கியது. மெதுவாக எனது அறையை விட்டு வெளியேறி விட்டாள். "நீ இப்படி கத்தியிருக்க கூடாது, எனக்கும் கூட ஆச்சரியகத்தான் இருக்கும். சங்கவியின் அழகை சில நேரங்களில் நானும் ரசிப்பதுண்டு அழகை ரசிப்பதில் என்ன குறையி ருக்குது" என்று சொல்லிட்டு சந்திரனும் அறையிலிருந்து வெளி யேறினான்.

எனக்கு மனசிக்குள்ள ஏதோ ஒன்று அழுத்துவது போலிருந்தது. எனக்கு சங்கவியில பொறாமையா? இல்லை ஆச்சரியமா? ஏன் எப்பையும் அவளது அழகை பற்றியே நான் யோசிக்கிறன்? நாங்கள் ஒன்றாக படித்த காலத்தில பொடியளுக்கு கனவு கன்னியாக நான் தான் இருந்திருக்கிறன். அந்த காலத்தில பொடியள் சங்கவிய விட நீ தான் அழகியென்று பல தடைவை சொல்லியிருக்கிறாங்கள். கலியாணம், பிள்ளை பெறுகிறது, பால் கொடுக்கிறது, சமைக்கிறது, உடுப்பு தோய்க்கிறது இது தான் வாழ்க்கையா? நானும் ஒரு பெண்ணா? என்ர அழக இரசிக்க, மத்தவைய இரசிக்க வைக்க எனக்கிருக்கிற விருப்பங்கள ஏன் நான் மனசுக்குள்ள அடக்கி வைக்கணும். அதற்காகதானே என்ற ரெண்டு பொடியளுக்கும் மூணு மாசத்திலேயே பால் கொடுக்கிறத நிப்பாட்டினன். இவளுக்கு ஒரு வருசம் வரைக்கும் பால் கொடுக்க போறாளாம். என் மனசில சங்கவி மீது வெறுப்பு கொட்டத்தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேராக மெனேஜர் அரைக்கு சென்ற நான், "கொஞ்சம் கதைக்க வேணும்" என்றேன். "சொல்லுங்கோ" என்றார். "மெனேஜர் சங்கவிக்கு மூன்று மணியோட பால் கொடுக்க லீவு கொடுக்கிறியளாம், அப்படி என்றா எனக்கும் தரவேணும்" என்றேன். திகைத்து போன மெனேஜர் "சாந்தி இரும்மா" என்னம்மா என்ன நடந்திச்சு என்றார். "ஒன்னும் நடக்கயில்ல, நானும் பால் கொடுக்கவேணும்" என்றேன்.

மெனேஜர் என்னை உற்றுப்பார்த்து கேட்டார், "யாருக்கு பால் கொடுக்க போர"? அவரது முகத்தில கொஞ்சம் கோபம் தெரிந்தது. "எனக்கு தெரிய உன்ர ரெண்டு பொடியளும் இப்ப மூணு வயசுக்கு மேல இருக்கிறாங்கள். இப்ப திடீரென்று யாருக்கு பால் கொடுக்க வேணும் என்கிறா" என்றார். "அது உங்களுக்கு தேவையில்ல சேர், பிள்ளைக்கு எப்பையும் பால் கொடுக்கலாம், அது என்ர உரிமை", என்ன உரிமைய பற்றி நீ கதைக்கிற சாந்தி மூணு மாசத்தோட உன்ர பிள்ளைக்கு பால் கொடுக்கிறத நிப்பாட்டி போட்டு இங்க வேலைக்கு வந்தவ நீ, பிறகு கதைக்கிறா, நான் ஒன்றும் உன்ர விசயத்தில தலை போடயில்ல. "பிள்ளைய பெத்துபோட்டு வந்து பால் கொடுக்க லீவு எடுக்கலாம்" என்று கூறியவர், "நேரத்தை வீணாக் காம போய் வேலைய பார்" என்று கூறிவிட்டு தன் வேலையை பார்க்க தொடங்கினார்.

பெருத்த அவமானத்தோடு மெதுவாக அறைக்கு திரும்பினேன், மீண்டும் சந்திரன் எனது அறைக்குள் வந்தவன். "சாந்தி நீ இப்படி கதைச்சிருக்க கூடாது. பாவம் சங்கவி, அழுது அழுது முகம் வீங்கி போயிட்டுது" என்று ஒரு நக்கல் சிரிப்புடன் வெளியேறினான்.

மாலை அலுவலகம் மூடும் நேரத்தில் சஞ்சலத்தோட அறையை விட்டு வெளியே வந்தன். வழமை போல சங்கவி இணைந்து போவதற்காய் எனக்காக காத்திருந்தாள். கதவ சாத்திவிட்டு வெளியே வந்தன். பியோன் ஒரு கடிதத்தை என்னிடம் கொடுத்தான். பிரித்துப்பார்த்தேன், "அழகும் பெண்களும்" என்ற தலைப்புடன் ஒரு அழைப்பிதழ். நாளை மாலை எமது அலுவலகத்தில் விசேட உரை. உரையாளர், திருமதி சங்கவி இரவிச்சந்திரன் இன்விடேசனை மறைச்சு வைத்துக்கொண்டு சங்கவியை புன்னகைத்தேன். அவளும் புன்னகைத்தாள். இருவரும் இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைசிக்களில் வீடு நோக்கி சென்றோம். இன்றைய சம்பவங்கள் குறித்தும் எந்த உரையாடலும் வழியில் இல்லை. விடை பெற்றோம்.

சங்கவியின் வீட்டுக்கு போக வேண்டும் என்றது போல் மனம் பேசியது. மாலை 5 மணிக்கு சங்கவி வீட்டுக்கு போனன். வாசலில் வழமை போல சங்கவியின் பாட்டி குந்தியிருந்தா. அந்த கிழவிக்கு இப்ப எண்பது வயசிருக்கும். ஆனா பாக்க ஐம்பது வயசு போலிருக்கு. "வா வா சாந்தி" என்று சங்கவியின் அம்மா வரவேற்றா. அவாவுக்கு அறுபது வயசிருக்கும் ஆனா நாற்பது வயசு போலிருக்கா. மனசுக்குள்ள கேள்விகளுடன் பொய்ப்புன்னகையுடன் கதிரையில் அமர்ந்தேன். சங்கவி உள்ள ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறாள். "கூப்பிடுகிறன்" என்றா அம்மா...

அழகான கூட்டுக்குடும்பம். சங்கவி வெளிய வந்தாள். "என்னடி சொல்லாம பறையாம வந்திருக்கிறா" என்றா. "இல்லடி மனசுக்க சரியில்ல ஏதோ காலையில குமுறிட்டன்"

"இச்சி.. அத விடு நாளைக்கு உரைக்கு ஆயத்தப்படுத்துறன்" என்று சொல்லிக்கொண்டே பக்கத்தில அமர்ந்தா. "பாட்டிதான் நாளையான் உரைக்கு நோட்ஸ் தரவேணும்" என்றாள் சங்கவி. "திரும்பிப்பார்த்த கிழவி, "என்ன" என்றது. "இல்ல பாட்டி நீ எப்பவும் சொல்லற நீயல்லே",

பாலும் பாலழகும்
தேனாய் பிறக்க
இனிக்க, உன்னை
இரசிக்க நானும்
பசளி கீரை மணக்க
இடை சுருங்கி
குருதி சுருதியாய்
இசைக்கும் உடலழகில்.

"ஓ.. அதுவா அந்த காலத்தில நாங்க பாட்டா பாடுவோம்" என்று அந்த கிழவி பாடத்தொடங்கியது. "என்னடி இது பாட்டு" என்றேன். "என்ன இது கூட தெரியாமலா உன்ன உன்ர அம்மா வளர்த்தவ" என்றது கிழவி. "வெறுப்பா கிடந்தது", இல்ல என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொம்பள புள்ள பெருசான சாமத்தியப்பட்டவுடன் முதலில கீரைக்களி கொடுக்கணும். அதில கீரை என்றா அது பசளித்தான். பசளியில பல பசளி இருக்கு. எல்லா பசளியிலேயும் இருக்கும் ஒரு பொதுவான சத்து ஒன்றுதான். நம்ம ஊரில காய் பசளி, இலை பசளி, தரை பசளி, பூபசளி, பருப்பு பசளி, வட்ட பசளி, குத்துப்பசளி என்று பல பசளிகள் இருக்கு. பசளி சாப்பிட சாப்பிட இரத்தம் புதுசு புதுசா சுரக்கும். எங்கட சங்கவிக்கு எப்பயும் பசளி கொடுப்போம். ஒவ்வொரு மாசமும் பீரியட் நேரத்தில பசளி சுண்டல், பசளி கறி, பசளி புட்டு, பசளி களி என்று கொடுப்பம். இவள் கலியாணம் முடிச்சி கர்ப்பமா இருக்கிற காலத்திலயும் பசளி நல்லா சாப்பிட்டவள். என்னடி புள்ள உங்கட அம்மா உனக்கு இதெல்லாம் சொல்லித் தரயில்லயே என்று கேட்டா கிழவி. "இல்லை" என்றேன். "அது தான் இப்படி இருக்கிறியா" என்றார். அது எனக்கு நெருப்பில சுட்டது போலிருந்தது அமைதியானேன்.

"என்னடி சாந்தி இவ்வளவு காலம் நானும் நீயும் இருக்கிறம். பெண்கள் உடல் பராமரிப்பு குறித்து எவ்வளவோ பேசியிருக்கிறம். இது கூட உனக்கு தெரியாதே" என்றாள் சங்கவி. நீ பசளி பற்றி சொல்லயில்ல "என்று சிரித்துக்கொண்டே சொன்னேன்". இது இரகசியம் அழகின் இரகசியம் சொல்ல மாட்டியள்தானே என்று மீண்டும் சிரித்துக்கொண்டே சொன்னேன்.

"கர்ப்ப காலத்திலயிருந்து பால் கொடுக்கிற காலம் வரைக்கும் எங்கட சங்கவிக்கு பசளி தான் பிரதான சாப்பாடு" என்று கிழவி திரும்பவும் ஏதோ முணு முணுத்திச்சு.

அம்மா தேத்தண்ணி கொண்டு வந்தா. "என்ன சாந்தி பசளி பற்றி நல்லா கத நடக்குது. பொம்பளைங்க வீட்டில துளசி மரம் வளர்த்து சாமி கும்பிடுற மாதிரி பசளி செடி வளர்த்து சாப்பிடணும். அது தான் இரத்தத்த சுத்த மாக்கி புது இரத்தத்த ஊற வைக்கிறது. நம்மட ஊரிலே வீட்டில எங்க பார்த்தாலும் பசளி கிடக்கு. எல்லாருக்கும் தெரியும். ஆனா ஒருத்தரும் தொடுறதில்ல" என்றா சங்கவியின் அம்மா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சரி போயிட்டு வாரேன். நாளைக்கு மீதிய சங்கவி பேசட்டும் கேட்போம்” என்று வெளிக்கிட்டன். லேசான இருட்டு வீட்டுக்கு வெளியே வந்தன். சங்கவியின் அப்பா வயலில் இருந்து வீட்டு வளவுக்குள் வந்தார். “என்ன சாந்தி கனகாலமா கண்டு, இப்படி கிழவி மாதிரி போயிட்ட” என்றார்.

இன்றைக்கு நாளே சரியில்ல போலத்தான் கிடக்கு என்று மனம் பேசியது. அவர் கையில ஒரு கூடை கூடை நிறைய ஏதோ கீரை, ஆனா என்ன கீரை என்று நல்ல தெரியயில. “என்ன கீரை போல” என்றேன். “பொட்டு பசளி இத வயல் பசளி என்றும் சொல்லுறவை” என்றார். “உங்கட வயலுக்கையும் இருக்குது அப்பா கொண்டு வாரதில்லேயே” என்றார் சங்கவியின் அப்பா. “எங்கட அப்பா முதலாளி. நீங்க அவரின்ர வயலில தொழிலாளி அதின்ர பெருமை அவருக்கு எங்க தெரிய போகுது” என்றேன். வாசலில் இருந்த பாட்டி “கொஞ்சம் பசளி கீரைய சாந்திக்கும் கொடுத்து விடுங்கவன்” என்று சொல்ல சங்கவி ஒரு பேக்கில கீரையை கொண்டு வந்து தந்தா.

“பசளி பருப்போட போட்டு
ஒரு கடையல் நீ மசிக்க
உன்ர பிள்ளைகள் நாளைக்கு
ஒரு படையில் தளபதியாகுவான்.”

என்ற பாட்டியின் பழமொழியுடன் விடை பெற்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கதவை தட்டும் கதை சொல்லி

# குறிஞ்சாளினி

நல்ல காலம் பொறந்திருக்கு
நல்ல காலம் பொறந்திருக்கு
நீ தான் சாமி உன்ர வீடு தான் கோயில்
நல்ல காலம் பிறந்திருக்கு
நல்ல காலம் பிறந்திருக்கு.

போன முறை வரைக்குள்ள
பிள்ளை வரம் கேட்டியளே
இந்த முறை வரைக்குள்ள செல்வ வரம் கேட்பதென்ன

பிள்ள பொறந்திருச்சி அத
பெத்தவளும் மனம் செத்தவளாய்
நிற்கிறாளே செல்வ வரம்
வேணும் சாமி – அவ துன்ப
கடல் தாண்டத்தானே,

வயிறெல்லாம் புண்ணெடுத்து
வாயெல்லாம் அவிஞ்சிருச்சி
உதிரமெல்லாம் ஓடித்தானே
உயிருமெல்லோ உருகிடுச்சி ...

நிறுத்து தாயே ...
பெத்தவள குளிப்பாட்டி
சுட்ட முதும் கொடுக்கலியே
குறிஞ்சாவ சேர்த்து நீயும்
செல்லமுது தீத்தலையோ,

என்ன சாமி சொல்லுங்க, சொல்லுறன் கேளுத்தாயே,

நல்ல காலம் பொறந்திருக்கு
நல்ல காலம் பொறந்திருக்கு
ஒரு ஊரில ஒரு விருட்சம்மா
அந்த செடியத்தான் ஒருத்தன்
தேடி போறானம்மா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்னே ஒன்னுதான் இருக்கா? பரவாயில்ல யாருக்கும் கொடுத்திராத இந்தா வந்து கொண்டிருக்கிறன்". என்று கூறிவிட்டு போனை வைத்தான் சுதாகரன். "ஆசுபத்திரிக்கு போக முதல்ல சங்கர் வீட்ட போய் அத வாங்கி கொண்டு போடா. வேற யாரும் வாங்கி கொண்டு போட்டா பிறகு அதத்தேடித் திரிய ஏலாது" என்றாள் சுதாகரனின் அம்மா சிவனேஸ்வரி.

சுதாகரனுக்கு மூத்த பிள்ள பொம்பள பிள்ள பிறந்திருக்குது நேற்று சுகபிரசவமா பிறந்த பிள்ளையும் தாயையும் வீட்டுக்கு கூட்டிக்கொண்டு வரப்போறான் சுதாகரன். குழந்த பொம்பள பிள்ளையா பொறக்க போவுது என்று தெரிஞ்சவுடனே சங்கருக்கு சொல்லி வைச்சநான். கட்டாயம் ஒரு செடி எடுத்து வையடா என்று. எல்லாத்தையும் வித்து போட்டான்.

"பிள்ளைய வீட்டுக்கு கொண்டு வரக்குள்ள பிள்ளைய வாசலில் வைச்சி ஆராத்தி எடுக்க முதலில அந்த செடிய நட்டு போட்டு தான் கொண்டு வரவேணும் என்று சொன்னனான். இப்ப யாரெல்லாம் இத சொல்ல கேட்க போயினம்" என்றாள் சிவனேஸ்வரி.

சிவனேஸ்வரிக்கு ஒரே மகன் சுதாகரன். போன வருசம் தான் கலியாணம் முடிஞ்சது. வீட்டுக்கு முதல் வாரிசு பொம்பள புள்ள. எல்லாம் முறைப்படி செய்ய வேணும் என்றதில சிவனேஸ்வரி கவனமா இருக்கிறா. "நேர சங்கர் வீட்டுக்கு போட்டு பிறகு ஆசுபத்திரிக்கு போ" என்ற சிவனேஸ்வரியின் கட்டளைப்படி சுதாகர் சங்கர் வீட்டுக்கு போனான். சங்கரும் சுதாகரனும் ஏற்கனவே நண்பர்கள். சங்கர் மரக்கன்றுகள் செடிகள் விற்பனவு நிலையம் ஒன்றை நீண்ட காலமாக நடாத்தி வருகின்றான். எந்த கன்றுகள் எந்த விடயத்திற்கு நட வேண்டும். அதன் முக்கியத்துவமெல்லாம் அவனக்கு தெரியும். ஆனால் சுதாகரன் ஒரு மேசன் தொழிலாளி. தாயார் சொன்னதிற்காக அந்த செடியை வாங்க வேண்டுமென்று வந்திருக்கிறான்.

என்னடா இது முதல்ல மனுசிய, பிள்ளைய வீட்ட கூட்டிக்கொண்டு வாரத விட இந்த செடிய வாங்கு, அந்த செடிய வாங்கு, அங்க நட வேணும், இங்க நட வேணும், எத்தனை சாங்கியம் சம்பிரதாயங்கள். ச்சீ என்ன கரச்சல் என்று மனசுக்குள்ள திட்டிக்கொண்டு சங்கர கூப்பிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதாகரனின் அந்தரத்தை உணர்ந்த சங்கர் அந்த செடியை ரெடியா வைத்திருக்க, நூறு ரூபாய் காசை கொடுத்து வாங்கிக்கொண்டு சுதாகரன் ஆசுபத்திரிக்கு சென்று மனைவியையும் மகளையும் அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தான்.

வாசலில் வரவேற்ற சிவனேஸ்வரி பிள்ளையையும் தாயையும் வாசலில் நிற்க வைத்துக்கொண்டு சுதாகரன் கையில் வைத்திருந்த செடியை வாங்கி ஏற்கனவே கிடங்கு வெட்டி வைத்திருக்கிற இடத்தில் நடப் போனாள். "இது இங்க வீட்டில இருக்கிற செடி தானே, பிறகு எதற்கு திரும்ப திரும்ப திரும்ப நடுவான்" என்றான் சுதாகரன். "டேய் தம்பி, என்ன செடிடா வாங்கி கொண்டு வந்த நீ" என்று சற்று கோபத்துடன் கேட்டாள் சிவனேஸ்வரி. "அது தான் நீ சொன்ன குறிஞ்சா செடி தானே. "சரிடா குறிஞ்சா தான்" இங்க பார், இந்த செடின்ட நிறத்தை. கரண்டு போனதை கொடுத்து விட்டிருக்கிறான். போய் இன்னொன்ற வாங்கி கொண்டு வா. அத நட்ட பிறகு தான் பிள்ளைய வீட்டுக்குள் எடுக்கலாம்". என்றாள்.

"என்னமம்மா நீ விளையாடுறியே பிள்ள பெத்தவள வாசலில் வைச்சி போட்டு வேற எங்க வாங்கி கொண்டு வாரது. நம்மட வீட்ட ஏற்கனவே குறிஞ்சா செடி ஒன்னு கிடக்கு தானே, பிறகு எதற்கம்மா?" என்று சுதாகர் சத்தம் போட்டான்.

அதெல்லாவற்றையும் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்த சுதாகரன்ட மனைவி நந்தினி மாமி நீங்க ஆரத்தி எடுக் காட்டையும் பரவாயில்ல. நான் வீட்டுக்க போறன் பிறகு செடிய வாங்கி நட்டுப்போட்டு ஆராத்தி எடுங்கோ" என்று சொல்லிப்போட்டு வீட்டுக்குள்ள வெளிக்கிட "தங்கச்சி உனக் கென்ன விசரே. பொம்பளபிள்ள பிறந்தா குறிஞ்சா நட்டு தான் வீட்டுக்க அழைக்க வேணும், கொஞ்சம் நில்லம்மா. தம்பி ஓடி வாங்கி யாடா" என்று கெஞ்சினாள் சிவனேஸ்வரி. "இதென்னடா கரைச்சலா கிடக்கு" என்று சொல்லிப்போட்டு சுதாகரன் சங்கருக்கு கோல் எடுத்தான். நீ என்ன மச்சான் நீ பட்ட செடிய தந்து போட்ட என்று அம்மா இங்க கத்துரா என்றான் "டேய் அதில இலையெல்லாம் கொட்டிருச்சி மச்சான்" ஆனா பச்சை செடி, நட்டா வருமென்று சொல்லடா அம்மாட்ட, "இல்ல மச்சான் வேற ஒரு செடிய எடுத்து தந்தா நல்லமடா" என்றான் சுதாகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உரையாடல் நடந்து கொண்டிருக்கும் போதே நந்தினியின் தாயும் தகப்பனும் ஒரு ஆட்டோவில வந்து இறங்கினவ. "என்னடி இது? வந்ததும் வராதும் வாசலில உன்ன நிப்பாட்டி வெச்சிருக்கினம்" என்றாள் நந்தினியின் தாய் சரோஜா. "என்னவோ செடி நடவேணுமாம். அதற்கு தாயும் மகனும் இங்க சண்டை பிடிச்சி கொண்டிருக்கினம். இப்ப ஒரு மணித்தியாளமா இங்க வெளிய இருக்கிறன்" என்றாள் நந்தினி.

"இது தாண்டி அப்பவே நாங்கள் சொன்னனாங்கள். இந்த குடும்பத்திற்கு போகாத என்று கேட்டனியே. கண்டறியாத காதல் கத்தரிக்காய்" என்று சரோஜா கத்த தொடங்கினாள்.

சரோஜாவின் கணவர் இராஜேஸ்வரன் சரோஜாவை எவ்வளவோ அமைதிப்படுத்த முயன்றாலும் முடியவில்லை. சரோஜாவும் இராஜேஸ் வரனும் வேப்பம்பட்டி கிராமத்தில வசதியான குடும்பத்த சேர்ந்தவர்கள். சரோஜா ஒரு ஆசிரியை. இராஜேஸ்வரன் சொந்தமா பலசரக்கு கடை வைச்சிருக்கிறார். அமைதியான சுபாவம் கொண்ட அவருக்கு சரோஜாவின் குணநலன்களில் எப்பவும் சஞ்சலம் தான்.

"சரி விடு சரோஜா. என்னம்மா செடி எங்க வாங்க வேணும் நீங்க சொல்லியிருந்தால் நாங்க வாங்கி கொண்டு வந்திருப்போமே" என்றார் இராஜேஸ்வரன், "இங்க பாருங்கோ தம்பி, நீங்க என்ன தான் எங்கட சம்பந்தியாயிருந்தாலும் என்ர தம்பி மாறி சொல்லுறன், பொம்பள பிள்ள பிறந்தா கொடி குறிஞ்சா, பெரும் குறிஞ்சா நட்டுத்தான் குழந்தைய வீட்டுக்க அழைக்கிறது எங்கட பரம்பரை வழக்கம்" என்றாள் சிவனேஸ்வரி.

"நல்ல பரம்பரை வழக்கம், என்ன பரம்பரை நீங்க, புள்ளத்தாச்சி பிள்ளைய வடிவா பார்க்க தெரியல, நான் வச்சிப்பார்க்க கேட்கவும் விடயில்ல. இப்ப குழந்தை பிள்ளைக்காரிய ரோட்டில வச்சிக்கொண்டு பரம்பரய பற்றி கதைக்கிறியள், என்னதான்டி உன்ட பரம்பர சோத்துக்கு வழியில்லாத பரம்பர, என்ர பிள்ள பணக்காரி என்றதும் மகனை உசிக்காட்டி காதலிக்க வச்சி தூக்கிக்கொண்டு வந்துபோட்டு பரம்பரைய பற்றி கதைக்கிறா, நீயும் உன்ர பரம்பரையும், நீ ஏறடி நந்தினி எங்கட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டோவில" என்று சரோஜா பொங்கி எழுந்தாள். "மாமி நான் பொறுமையா இருக்கிறது உங்கட மரியாதைக்கு தான், நீங்கள் ஒரு டீச்சரா இருந்துக்கொண்டு வாயுக்கு வந்த மாதிரி கதைக்க கூடாது" என்று சுதாகர் மாமியை அதட்டினான்.

"இங்க பாருங்கோ இங்க சுத்தி அயல் எல்லாம் வந்து பார்க்குதுகள், கொஞ்சம் பொறுமையா இருங்கோ" என்றார் இராஜேஸ்வரன், "சரி சரி நீங்க இவ்வளவு கத கதைச்சு போட்டியல். செடிய நட்டா என்ன, வளர்த்தா என்ன, உங்கட விருப்பபடி எல்லாத்தையும் செய்யுங்கோ. நான் ஒரு செடியும் நடயில்ல" என்று கையில வச்சிருந்த மண்ணை உதறித் தள்ளிப் போட்டு வாசலில் இருந்த அந்த தென்னங்குற்றியில வந்து உட்கார்ந்தாள் சிவனேஸ்வரி.

சுதாகரன் மனைவியையும் பிள்ளையையும் வீட்டுக்குள் அழைத்து சென்றான். இராஜேஸ்வரனும் அதே குத்தியில் ஒரு பக்கத்தில் உட்கார்ந்தார். மௌனமாக இருந்த சிவனேஸ்வரியின் கண்களில் கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. கொஞ்சநேரம் அமைதியாகவிருந்த இராஜேஸ்வரன், "என்ன செடியம்மா நட வேணும்? நீங்க சொன்னியல் என்றா நான் இப்பவென்றாலும் வாங்கிக்கொண்டு வருவன்" என்றார்.

இராஜேஸ்வரனின் அமைதியான சுபாவத்தை அறிந்த சிவனேஸ்வரி "மீண்டும் செடி குறிஞ்சா, பெருங்குறிஞ்சா என்றும் சொல்லுறது தம்பி, இங்க பாருங்கோ" என்று தன் வளவில் ஏற்கனவே இருந்த செடியை காட்டினா. "அட இந்த செடியே எங்கட வீட்ட காடு மாறி கிடக்கம்மா. சரோஜாவுக்கு டயப்பட்டீஸ்தானே, அந்த சீனி வருத்தத்திற்கு இடைக்கிடை சாப்பிடுவா".

"குறிஞ்சா என்டா இப்ப என்னவோ சீனி வருத்தத்திற்கு மட்டுந்தான் எல்லாரும் சாப்பிடினம். குறிஞ்சா சாப்பிடுற எல்லாத்திற்கும் சீனி வருத்தம் இல்லாட்டி சீனி வருத்தகாரருக்கு தான் குறிஞ்சா என்டமாரி எல்லாரும் யோசிக்கினம்" என்று கூறிய சிவனேஸ்வரி எழும்பி தன்ர முற்றத்தில் இருந்த குறிஞ்சா செடி இருக்கும் இடத்திற்கு போய் நிண்டு கொண்டு. இங்க வாங்கோ தம்பி "இந்த இடத்தில முதல் முதல் குறிஞ்சா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செடி நான் குழந்தையா பிறந்து இந்த வீட்டுக்கு வரக்குள்ள என்ட பூட்டி நட்டவவாம், அதற்கு பிறகு என்ர அம்மம்மா நான் வளர்ந்து வரக்குள்ள எனக்கு குறிஞ்சாச்செடி ஏன் நட்டிருக்கு தெரியுமா எண்டு கேட்டு கனக்க கதை சொல்லுறவா".

"என்ன பிள்ளைக்கு சுடுதண்ணி வைக்க வேணும். வந்து எங்க வைக்கிறது எண்டு சொல்லுங்கோ. இந்த குறிஞ்சா கதையெல்லாம் இப்ப தேவையில்ல" என்று வீட்டுக்குள்ள இருந்த சரோஜா மீண்டும் சத்தம் போடத் தொடங்கினாள். "நீங்க சொல்லுங்க அக்கா. அவளின்ர கதைய விட்டுப்போட்டு. உங்கட அம்மம்மா இந்த குறிஞ்சா பற்றி என்ன கத சொன்னவ? சொல்லுங்கோ" என்று இராஜேஸ்வரன் ஊக்கப்படுத்தினார்.

வெளியில போட்டு வந்த சுதாகரன் ஒரு குறிஞ்சா செடியுடன் வந்ததை கண்ட சிவனேஸ்வரியின் முகம் மலர்ந்தது. "இங்க கொண்டுவா தம்பி, பிள்ள வந்தவுடன் நடாட்டியும் இப்ப என்றாலும் நடுவம்" என்று சொல்லி இராஜேஸ்வரனின் "கையில பேத்திய நினைச்சுக்கொண்டு அவள் பரம்பரை தழைச்சோங்கவேணும் என்று சொல்லிக்கொண்டு நடுங்கோ" என்று சொன்னாள் சிவனேஸ்வரி.

ஒரு மாதிரி வீட்டில அமைதி திரும்ப தொடங்கியிருந்தது. ஆனால் குறிஞ்சா பற்றி பூட்டி என்ன கத சொல்லியிருப்பா என்று இராஜேஸ்வரன் அறிய மிகவும் ஆவலாய் இருந்தார். அன்று மாலை முழு நிலா வானத்தில் அழகாய் வலம் வரத்தொடங்கியது. சிவனேஸ்வரியும் சுதாகரனும் இராஜேஸ்வரனும் முற்றத்தில் அமர்ந்திருந்து பிள்ளைக்கு பேர் வைப்பது குறித்து பேசிக்கொண்டிருந்தார்கள். இராஜேஸ்வரன், "அக்கா நீங்க பூட்டியின் குறிஞ்சா கீரை கதைய ஒருக்கா சொல்லுங்கோவன்" என்று கேட்டார்.

சிவனேஸ்வரி தொண்டையை செருமி சரிப்படுத்திக்கொண்டு, "ஒரு காலத்தில நம்மட ஊருக்குள்ள இருந்த பெண்களுக்கெல்லாம் குழந்தையே பிறக்கலையாம், எல்லாரும் நம்மட ஊர் எல்லையில இருக்கிற அம்மன் கோவிலுக்கு சென்று நேத்திக்கடன் வைச்சவையாம் அந்த கோயில்ல இப்பையும் பிள்ளை இல்லாதவை நேத்தி வைக்கிறவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி". "பிறகு என்ன எல்லாருக்கும் குழந்தை கிடைச்சதே" என்றார் இராஜேஸ்வரன்.

"சொல்லுரன் கேளுங்களன், குழந்தை ஏன் கிடைக்கல என்றா ஊரில நிறைய பொம்பள பிள்ளைகளுக்கு, பெரிய பிள்ளையான பிள்ளை களுக்கு அந்த அந்த காலத்தில பீரியட் வாரதில்ல. இல்லாட்டி பீரியட் வார நேரத்தில வயிறு உயிர் போர மாறி குத்துமாம். பிந்தி முந்தி வாரதால பிள்ளைகளுக்கு என்ன வருத்தமென்னு போய் டாக்டர கேட்க அந்த காலத்தில ஆசுபத்திரியா இருந்தது? பிறகு தான் தெரிஞ்சிருக்கு பிள்ளைகளுக்கு கருப்பையில சுருக்கம், கருப்பையில கிருமி கருப் பையில இருக்கிற முட்டையில வீரியம் இல்ல. இப்படி கருப்பை சரியா இயங்காதபடியால் தான் இந்த பீரியட் முந்தி பிந்தி வாரதுன்னு அந்த கோயிலில இருந்து கலையாடி அருள்வாக்கு சொலுறவருக்கு அம்மன் வந்து சொல்லியிருக்கு. "பிறகு என்ன சொன்னிச்சு" என்று இராஜேஸ்வரன் ஆர்வமா கேட்க, ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு சிவனேஸ்வரி கதைய தொடர்ந்தா. "அந்த அம்மன் தொடர்ந்தும் அருள்வாக்கில சொன்னிச் சாம்" கருப்பையில கிருமிய வைச்சுக்கொண்டு குழந்தை வரம் கேட்டா யாரு கொடுக்க முடியும்? பொம்பள பிள்ளை வீட்டில இருக்கிறவ எல்லாரும் நான் சொல்லுர இந்த குறிஞ்சா செடிய வீட்டில நடவேணும். நட்டு வாரத்திற்கு ஒரு முறை இந்த இலை பறிச்சி, அரிசிமா கலந்து புட்டு அவிச்சு கூட நல்லெண்ணை கலந்து கொடுக்கனும். தொடர்ந்து கொடுத்து வந்தா கருப்பைய நான் சுத்தமா வைச்சிருப்பன் என்று சொன்னதாம். அதிலயிருந்து வீட்டில அந்த செடிய நட்டு அம்மளாச்சியே வீட்டில இருக்கிறதா நினைச்சி கிழமைக்கு ஒருக்கா அந்த இலையோட அரிசி சேர்த்து இடிச்சு புட்டு அவிச்சு கொடுக்க வீட்டுக்கு வீடு பிள்ள பொறந்திச் சாம். அதில முதல் பிறந்த குழந்த என்ர பூட்டியாம், அதாலத்தான் அவளுக்கு "குறிஞ்சியம்மா என்று பேரும் வைச்சவையாம்" என்றாள் சிவனேஸ்வரி.

கதை கேட்டு பெருமூச்சு விட்டு திரும்பி பார்த்த இராஜேஸ்வரனுக்கு ஆச்சரியம். பின்னுக்கு சரோஜாவும் நின்று கேட்டுக்கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மன்னிச்சிருங்க அண்ணி நான் உணர்ச்சி வசப்பட்டு பேசிப்போட்டன், இந்த குறிஞ்சாவுக்கு இவ்வளவு மகிமை இருக்கின்னு இன்றைக்கு தான் தெரியும்”.

“இங்க பாரு சரோஜா. பொம்பள பிள்ளைகள் வயசுக்கு வந்திருச்சினா அதற்கு பிறகு கிழமைக்கு ஒருக்கா குறிஞ்சா புட்டு கொடுக்கனும். பிள்ள பெத்தவளுக்கு குறிஞ்சா இடியப்பம் அவிச்சி குறிஞ்சா சொதியோட ஒரு நாளைக்கு ஒருக்கா எண்டாலும் கொடுக்கனும்” என்றாள் சிவனேஸ்வரி. “இப்படி கொடுத்து வந்தா பீரியட் முந்தி பிந்தி வராது. குழந்தை இல்லா பிரச்சனை வராது. கருப்பைல வார ஒரு வருத்தமும் வராது. அதற்காக தான் அம்மனை நினைச்சி பொம்பள பிள்ளை பிறந்த குறிஞ்சாவ வீட்டில நட்டு துளசி செடி மாதிரி கும்பிட்டு வளர்க்கினம்” என்றார்.

“சரி சரி பிள்ளைக்கு என்ன பேர் சொல்லுங்கோ” என்றான் சுதாகரன். நான் ஒரு பேர் சொல்லட்டே சிரிக்க கூடாது. “எல்லாரும் ஓம் என்று சொல்ல வேணும்” என்று வீட்டுக்குள்ள இருந்த நந்தினி குரல் கொடுத்தா. “என்ன நீர் இன்னும் முழிச்சா இருக்கிற” என்றான் சுதாகரன். “பின்ன மாமி சொன்ன முழுக்கதையும் கேட்டுக்கொண்டு தான் இருக்கிறன்” என்றாள் நந்தினி. “சரி சரி பேர சொல்லும் கேட்பம்” என்றார் இராஜேஸ்வரன்.

“என்ர மூத்த மகளுக்கு” உங்கட மூத்த பேர பிள்ளைக்கு “குறிஞ்சாளினி” என்று பேர் வைப்போம் என்றாள் நந்தினி. எல்லாரும் அட நல்ல பேரா யிருக்குதே என்ற சொல்ல சிவனேஸ்வரி,

*குறிஞ்சா வீட்டுக்கு வந்த*
*எங்க குலம் தழைத்தோங்க*
*குல தெய்வமே வீட்டிலேயும்*
*கருவிலேயும் கருக்கொள்ளுமாம்*

என்ற பழமொழியை சொல்லி சிரிக்க “எல்லாரும் சிரித்துக்கொண்டே இருந்தார்கள்”. அம்மன் கோவில் மணியோசை ஒலித்துக்கொண்டிருப்பது போல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதவை தட்டும் கதை சொல்லி
# "வேலி"

நல்ல காலம் பொறந்திருக்கு
நல்ல காலம் பிறந்திருக்க
நீங்கதான் தெய்வம் உங்க வீடுதான் கோவில்,
எங்க பார்போம் வீட்டின்ற நாலுபக்கமும்
என்ன நீங்கமட்டும்தான் இருக்கிறிங்களா?

உங்க வீட்டிலா உங்களோட
சீட்டியடிக்க நம்ம சிட்டுக்குருவியும்
பாட்டுப்பாட குயிலும்
நல்ல செய்தியோ கொட்ட செய்தியோ
சொல்லநாலு காகமும்
காலை மாலை தென்றலோட
தேனிசை பாடுற புளுனியும், மைனாவும்
அந்த பாட்டுக்கு ஆடுற அணிலும், ஓணானும்
இருந்திச்சின்ன ஏது குறை ஏது குறை

இப்படி வாங்க சாமி வந்ததும்
வாரதும் மதிலையே பாக்கிறீங்க.

இல்லைத்தாயே என்னவோ கோட்டைக்க
சிறையிருக்க மாதிரி
இப்படி இரும்புக்கதவும் மதிலும் கட்டிபோட்டிய
வீட்டுக்குள்ள தென்றல கூட்டிட் வாரதிற்கு
வீட்டின்ற நாலுபக்கமும் நாலு விருட்சம்
இருக்கனும் கண்ணு
வேலிக்காவே
உயிர்கொடுத்த உத்தமனங்க வாழ்ர ஊரில
வேலிய கட்டிப்போட்டு ஊழிய வீட்ட வரவிடலாமா?

இந்த வேலியபற்றி ஒரு கதை சொல்லுர கேளு.... பிள்ள
நல்ல காலம் பிறந்திருக்க நல்ல காலம் பிறந்திருக்கு
ஒரு ஊரில ஓர் வீடு அந்த வீட்டில ஒரு நாளு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வா யப்பொத்திக்கொண்டு நீ இருக்கவேணும்” என்று மாலதி சொன்னவுடன் சுந்தரம் தாத்தா அப்படியே அமைதி யானார். “எதையும் தொடக் கூடாது, வெட்டக் கூடாது என்றா என்னத்துக் குத்தான் இந்தக் காணிக்க இருப்பான்” என்று கூறிக் கொண்டே கத்தியையும் கோடாலியையும் எடுத்து என்னட்ட கொடுத்தா மாலதியக்கா. சுந்தரம் தாத்தா என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். அந்த சாய்வு நாற்காலியிலிருந்து.

எனக்கும் இப்ப அறுபது வயசாகுது. முப்பத்தைந்து வருசமா நான்தான் சுந்தரம் தாத்தாவுக்கு இந்த வேலி அடைகிற வேலையெல்லாம் செய்வன். எப்ப பாத்தாலும் காந்தன், காந்தன் என்டு கூப்பிட்டு ஏதாவது சொல்லிக் கொண்டேயிருப்பார். இப்ப கொஞ்சநாளா பெருசா ஒன்னும் கதைக்க மாட்டார். இடைக்கிடை அவரின்ர மகள் மாலதியக்காவுக்கு எதையாச்சும் சொல்லிப்போட்டு இப்படி ஏச்சு வாங்கிக் கொண்டு இருப்பார்.

மாலதியக்காவுக்கு ஒரே மகள் சௌந்தரியா. இப்பத்தான் கலியாணம் முடிச்சி நாலு மாசம். மாலதி அக்கா மகளின் கலியாண பேச்சில சொன்ன மாதிரி ஒரு துண்டு காணிய தனக்கு வச்சுப்போட்டு மிகுதி எல்லாம் மாப்பிள்ளை குமாருக்கும் மகளுக்கும் எழுதிக் கொடுத்துட்டா. மாப்பிள்ளை குமாரு ஒரு இஞ்சினியர். வீட்டுக்கு மாப்பிள்ளையா வந்திருக்கிறாரு. வந்ததிலிருந்து அவருக்கு இந்த வேலியில ஒரு கண். சுந்தரம் தாத்தா பொத்தி பொத்தி அழகா அடச்சி வைச்சிருந்த இந்த வேலிய களட்டிபோட்டு சுற்றுமதில் கட்ட வேண்டுமென்று ஒத்த காலில் நிற்கிறார் மாப்பிள்ள.

இந்த வேலிதான் வீட்டின்ர வடிவ குழப்புதாம். சுத்துமதில் கட்டி அலங்கார கேற் போட்டாத்தான் இந்த வீட்டுக்கு நான் வருவன் என்று கலியாணத் துக்கு முதலிலேயே மாப்பிள்ள சொன்னவராம். அட அது என்ன பெரிய வேல. நீங்க என்ஜினீயரா வந்த பிறகு உங்களுக்கு ஏற்றமாரி வேலிய பிடுங்கி கட்டுங்கோவன் என்று மாலதியக்காவ சொன்னவையாம். அது தான் குமாரு இப்ப வரிஞ்சி கட்டிக்கொண்டு நிற்கிறார். வேலிய கழட்டிப் போட்டு மதில் கட்டுறதுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கல்லு, மண் எல்லாம் பறிச்சுப்போட்டு எவ்வளவு காலந்தான் பொறுமையா இருக்குறது. எதையும் தொடக்கூடாது என்றா அப்ப எங்கதான் வாழுறது" என்று சொன்னபடியே மாலதியக்கா எனக்கு தேத்தண்ணி கொடுத்தா. "சரியக்கா அவருக்கும் எண்பது வயசாகுது, வயசு போனா இப்படித்தான் ஏதாவது சொல்லிக்கொண்டிருப்பினம் அதவிடுங்கோ". என்று நான் வேலை செய்யத் தொடங்கினன்.

முதலாவது வேலியில இருந்த வாதநாராயினிய வெட்ட கோடாரிய போட்டன். "காந்தன் என்ர தகைய வெட்டுறியே" என்று கத்தினர் சுந்தரம் தாத்தா. "காந்தன் நீ உன்டபாட்டுக்கு வேலைய செய், யாரின்ர கதையும் கேட்கத் தேவையில்லை" என்றார் சௌந்தரியா.

நான் மளமளவென்று வேலிய வெட்டி சரிச்சுக்கொண்டு போனன். எனக்கே மனசுக்கு கஸ்டமாத் தான் இருக்குது. என்ன செய்ய? கூலி வேலை செய்கிற நாங்கள் சொல்லுறத செய்துவிட்டுப் போக வேண்டியது தான் என்று நினைத்துக் கொண்டு திரும்பிப் பார்த்தன். "சுந்தரம் தாத்தா தன்ர கண்ணாடியை உயர்த்திப் பிடிச்சுக் கொண்டு நான் வெட்டுறத வெளிய வந்து பார்த்துக் கொண்டிருக்கிறார். "என்னடா காந்தா எல்லாத்தையும் வெட்டி சரிக்குறா". என்றவர் "வேலி எங்கட வீட்டுன்ர செல்வமடா" என்றவர் "டேய் காந்தன் ஏனடா வேலிய வெட்டுறா" என்று திரும்பவும் கத்தினார்.

இதுவரை அமைதியா இருந்த குமாரு, "மாமி அப்புவ உள்ளுக்கு போக சொல்லுங்கோ, வேலை செய்கிற ஆக்கள குளப்பினா எனக்கு பிறகு தெரியும்தானே" என்றவர், "நீ வெட்டுடா காந்தன், மயிறு என்ட காணிக்க நான் மதில் கட்ட இவருக்கு என்ன பிடுங்குது" என்று சரத்தை மடிச்சி கட்டிக் கொண்டு வந்து அவனும் வெட்ட தொடங்கினான். சுந்தரம் தாத்தா மெதுவா உள்ளுக்குள் போய் திரும்பவும் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டார்.

மதியம் ஒரு மணி. நல்ல வெயில். ஒரு பக்க வேலி முழுக்கலும் வெட்டி முடிச்சிட்டு சாப்பிட கூப்பிட்டவ. சாப்பாட்டுக்கு வந்தன் "சுந்தரம் தாத்தா சாய்வு நாற்காலியில அமைதியா படுத்திருந்தார். "என்ன தாத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடாம நித்திரையாகிட்டார் போல" என்றேன். "நீ சாப்பிடு காந்தன் எழும்பட்டும் கொடுப்பம்" என்றார் மாலதியக்கா.

சுந்தரம் தாத்தா இந்த கிராமத்தில் மூத்தகுடி. இவரும் இவரின்ர மனிசி சரஸ்வதியும் நல்ல விவசாயிகள். இந்த காணியில் எப்ப பார்த்தாலும் தோட்டம் செய்வினம். நானும் இங்கதான் கூலிக்கு வருவன். ஒருநாளும் வஞ்சகமாக ஒரு சொல் சொல்லாது. உண்மையான மனசு. கடுமையான உழைப்பு. உயர்வான எண்ணம், ஒரு நாளும் கோயிலுக்கு ஒன்றும் போறதில்ல. வீட்டில சாமி படத்தை காண முடியாது. விரதம், தேர், அப்படியென்று எதற்கும் சம்பந்தம் இல்லாதவர். கனகாலமா பிள்ளை இல்லாமல் இருந்தவையாம். அப்பகூட கோயிலுக்குப் போய் நேத்தி வையுங்கோ என்று கேட்டுக்கூட கோயிலுக்கு போகாதவர். பிறகு கன காலத்துக்குப் பிறகுதான் மாலதியக்கா பிறந்தவாவாம். ஒரே புள்ள. ஒருமாரி கஸ்டப்பட்டு விவசாயம் செய்து படிப்பிச்சுபோட்டார். அவாவும் படிச்சு டீச்சராகி ஒரு மாஸ்டர காதலிச்சு கல்யாணம் செய்தவா. அந்த மனுசன் குடி குடியென்று குடிச்சு சுந்தரம் தாத்தா சேர்த்து வைச்சிருந்த நகையெல்லாம் அழிச்சுப்போட்டார். இந்த காணி மட்டும்தான் மிச்சம். இதை வைச்சுத்தான் தண்ட பேத்தியையும் உழைச்சு படிப்பிச்சவர். போன வருசம்தான் சரஸ்வதி பாட்டியும் செத்தவா. அதற்குப் பிறகு தாத்தாவுக்கு காணியும் செடியும் கொடியும் தான் ஆறுதல். எப்ப பாத்தாலும் வெளியில ஏதாவது ஒன்றை இழுத்து கட்டிக்கொண்டிருப்பார். இனி வேலியும் இல்ல அவருக்கு என்று மனத்திரையில் ஓடிக்கொண்டிருக்க, மாலதியக்கா "என்ன காந்தன் வடிவா சாப்பிடு" என்று திரும்பவும் சோத்தை பிளேட்டில் போட்டா. "போதும் போதும்" என்றனான், "தாத்தாவுக்கு சாப்பாட்டை கொடுங்களேன்" என்றேன். "நீ சாப்பிடு பிறகு கொடுப்போம்" என்றவர் "சௌந்தரியா தாத்தாவை எழுப்பு சாப்பிடட்டும்" என்றார்.

நான் கையை கழுவிவிட்டு வாய் கொப்பளிக்க "ஐயோ ஐயோ என்ர அப்பா வந்து பாரு காந்தன்" என்று மாலதி அக்கா குழறினா. வீட்டுக்குள் ஓடிப் போனேன். சுந்தரம் தாத்தா முழித்துக் கொண்டே இறந்து போயிருந்தார். அவரது கடைசி பார்வைகள் நான் சரித்த வேலிகளில் பதிந்திருந்ததை பார்த்து அப்படியே உறைந்து போனேன். அம்மாவும் மகளும் போட்ட சத்தத்திற்கு அயலில் உள்ள எல்லாரும் ஓடி வந்துவிட்டுட்டினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேலி சரிந்ததும் வேரும் சரிந்ததுவோ" என்றார் தம்பி ஐயா. தம்பி ஐயா அயல் வீட்டுக்காரர். சுந்தரம் தாத்தாவின் நெருங்கிய நண்பர், தம்பியையா ஒரு ஆசிரியர், இவர் விவசாயி, என்றாலும் இணைபிரியாத நண்பர்கள்.

ஒரு பெருமூச்சுடன் வெளிவந்த தம்பியையா என் கரத்தைப் பற்றிக் கொண்டு வெளியே அழைத்துக்கொண்டு போய் "ஏன்டா விடிய மனுசன் என்னோட நல்லாத்தானே கதச்சுக்கொண்டு இருந்தது" என்றார். நான் ஒன்றும் சொல்லாமல் அமைதியாகவிருந்தேன். "எனக்குத்தெரியும் நீ விடிய வேலிய வெட்டக்குள்ளேயே யோசிச்சநான். மனுசன் நொருங்கப் போகுதென்று". சொல்லிக் கொண்டே தம்பியையா கண் கலங்கினார். இது என்னடா பழி என்னில வரப்போகுது போலிருக்கு என்று நினைத்துக் கொண்டிருக்கக்குள்ளயே வீட்டுக்குள்ள அழுகை சத்தத்துடன் ஒரே சண்டை.

சுந்தரம் தாத்தாவின் தம்பி இந்திரன் தாத்தா பெரிய சத்தம் போட்டு ஏதோ பேச அவருக்கு குமாரு கைவக்க, இந்திரன் தாத்தாவின் மகன் அரவிந்தனுக்கும் குமாருக்கும் இடையில கைகலப்பு. தம்பிஐயா தான் எல்லாத்தையும் ஒரு மாதிரி அமைதிப்படுத்தினார்.

"இங்கே பாருங்கோ மனுசன் நல்லா வாழ்ந்த மனுசன் நேரம்வர போயிட்டு. சும்மா தேவையில்லாமல் சண்டை பிடிக்க தேவையில்ல, ஆகவேண்டியத பாருங்கோ" என்றார் தம்பியையா. "அது சரி அது பிரச்ச னையில்லை. எங்கட பெரியப்பா இதுவரைக்கும் ஆசை ஆசையா வளர்த்த வேலிய ஏன் இன்றைக்கு வெட்டிசரிக்கணும். எங்களுக்குத்தான் தெரியும் அவர் இந்த வேலியில வைச்சிருந்த பாசத்தை" என்றான் அரவிந்தன்.

"அவரின்ர ஆலோசனையில தான் வெட்டியிருப்பினம். அதை விடுடா அரவிந்தன் என்றார் தம்பிஐயா. அரவிந்தன் விட்ட பாடில்லை" திரும்பவும் பிரச்சனை. முத்திக்கொண்டு போக, "தம்பியையா காந்தன கேட்பம். அவன் தானே வேலிய வெட்டினவன், அவன் சொல்லட்டுமே சுந்தரம் தாத்தா என்ன சொன்னார்" என்று தம்பியையா என்ன பாத்து கேட்டார். எனக்கு படார் என்று தூக்கி வாரிப்போட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி ஐயா கிட்ட வந்து என்ர கையை பிடித்து, "செத்தவீடு சரியா நடக்க நீ தான் உதவி செய்ய வேணும்" என்று மெதுவாக சொல்லிப்போட்டு போய் "சொல்லேன்டா சுந்தரம் தாத்தா என்ன சொன்னவர்" என்று என்றார்.

அழுதவை எல்லாம் அமைதியாகிட்டினம். நான் பேசாமல் நிக்க, "ஏன் காந்தன் சொல்லுமேன் தாத்தா சொல்லித்தான் வெட்டினான்" என்று என்றார் மாலதியக்கா.

நான் பேசுவதற்கு என் மனம் ஒத்து வந்தாலும் வார்த்தை வரவில்லை. "சொல்லு காந்தன்" என்றான் குமாரு. என் மனசாட்சியை மூடிவைத்து விட்டு ஒண்ணும் சொல்லவில்லை என்று சொல்லுவோமா. செத்தவீடு சரியா நடக்கத்தானே வேண்டும் என்று நினைத்துக் கொண்டு அவர் சொல்லித் தான் வேலிய நான் வெட்டினேன் என்று நான் சொல்லத் தொடங்க, "ஏன் காந்தன் பொய் சொல்லுற? என்ர தாத்தா இந்த வேலிய வெட்டச் சொன்னவரா" என்று அழுதுகொண்டே சவுந்தரியா பேசத் தொடங்கினா.

"தாத்தாவுக்கு வேலி என்டா உயிர், வேலிய வச்சு நிறைய கதை எனக்கு சொல்லுவார் என்று அழுதுகொண்டே சொன்னாள் சௌந்தரியா". தாத்தா வேலிய வீட்ட பாதுகாக்கும் ஒரு கேடயமா பார்த்தார். அவர் வேலி எங்கள் வாழ்க்கையின் ஆதாரமென்று எப்பவும் சொல்லுவார். ஐயோ என்ர தாத்தான்ர உயிர் போறதுக்கு நானும் என் புருஷனும் காரணமாக போட்டமே என்று புரண்டு புரண்டு அழ தொடங்கினார்.

"நீங்க செத்தவீட்ட நடத்துங்கோ. நாங்கள் போட்டு வாரம்" என்று சொல்லி போட்டு அரவிந்தனும் இந்திரன் தாத்தாவும் வெளியேற அவருடைய மற்ற நெருக்கமான உறவினர்கள் எல்லோரும் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறத் தொடங்கினார்கள். கடைசியா நான் ஒரு கொலைகாரனை போல நின்றன். தம்பியையா மெதுவா என்னிடம் வந்து சரி நாங்க ஆக வேண்டியதப் பார்ப்போம் என்று சொன்னர்.

"வா பிடிட மெதுவா தூக்கி வந்து மேசையில கிடத்துவம்" என்றார். நானும் குமாருவும் ஊர் பொடியளும் சேர்ந்து தூக்கி அப்படியே அந்த மேசையில சுந்தரம் தாத்தாவ கிடத்தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கண்களை மூடி கையை இழுத்து கட்டினேன். சுந்தரம் தாத்தாவின் கைக்குள் ஒரு பேப்பர். மெதுவாக விரித்தேன். வேலி சாயவில்லை வேலி யுடன் என் தலைமுறையும் சாய்கிறது என்று அதில் எழுதியிருந்தது. நான் அந்தத் துண்டுப் பேப்பர எடுத்து வாசிக்க செளந்தரியா கண்டவுடன் “காந்தன் இங்கே கொண்டு வா” என்று கேட்டார், அவளிடம் கொடுத்து விட்டு வெளியே வந்து விழுந்து அழுதேன்.

என் தோள்களில் தட்டிய குமாரு “என்னடா வேலிக்கு ஏன்டா இவ்வளவு பெறுமதி” என்று கேட்டார். இதுவரை பொறுமையாய் இருந்த நான் இனியும் பொறுக்க முடியாமல் “வேலி வேலி வேலி. இது சுந்தரம் தாத்தா மட்டுமல்ல இந்த ஊரில இருக்கிற எல்லாருக்கும் தெரியும் அதுதான். எங்கட ஊருக்குள் எவனும் மதில் கட்டுறதில்ல. நீ வீட்டுக்கு மாப்பிள் ளையா வந்தவன். பெரிய இஞ்சினியரா இருக்கலாம். ஆனால் இந்தப் பாரம்பரியம் உனக்கு தெரியம போட்டு” என்று அழுதபடியே கூறினேன்.

பக்கத்தில் வந்த தம்பியையா “தம்பி வேலி என்றது எங்கட வாழ்வாதாரம் மட்டுமல்ல அது தான் எங்கட உயிர் மூச்சில் வடிகட்டி” என்றார்.

வீட்டுக்கு வெளியே நானும் தம்பிஐயாவும் குமாருவோட கதைக்கிறத பார்த்துக்கொண்டிருந்த செளந்தரியா மெதுவா வெளிய வந்து “செத்த வீட்டுக்கு முதலில இந்த வேலியை திரும்ப நீங்க அடைத்துப் போட்டு தான் வரணும்” என்று சொல்ல, “என்ன பகிடி விடுறியளே, அப்படி என்றா நான் எங்க வீட்டுக்கு போறேன் செத்துவீட்ட முடிச்சுப்போட்டு நீ வேணும் என்றா அங்க வாரும்” என்று சொல்லிப்போட்டு குமாரு மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு போய்ட்டார்.

செளந்தரியா மூன்று மாத கர்ப்பிணி. ஒரு சிறு பிரச்சனை குடும்ப பிரச்சனையாகப்போகுதோ என்று நான் நினைக்க “குடும்பமே பிரிந்தாலும் நீ வேலி போடாம இந்த வீட்டுக்கு வரக்கூடாது” என்றார் செளந்தரியா. “இவருக்கு என்ன தெரியும் வேலிய பற்றி. தாத்தா எனக்கு சொன்ன கதைகள் நிறைய இருக்கு. இந்த வேலியில இருக்கிற ஆடாதோட, நொச்சி என்ர வயித்தில இருக்கிற குழந்தைக்கு சுகத்தை கொடுக்கிற மருந்து, இந்த வேலியில இருக்கிற அத்தனை கொடிகளும் செடிகளும் என்ர தாத்தா தேடித் தேடிக் கொண்டுவந்து நட்டது. எங்கட வீட்டில சமைக்கிற மரக்கீரைகளும் கொடிக்கீரைகளும் இந்த வேலியில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்துதான் நாங்க பிடுங்கி சமச்சநாங்கள்" என்று அழுதுகொண்டே சொல்லிப்போட்டு உள்ளுக்குள் போனா.

"என்ன காந்தன் உனக்குத் தெரியும்தானே. இந்த வேலியில தடி வெட்டி வெட்டித்தான் மாலதியையும் சௌந்தரியாவையும் சுந்தரம் தாத்தா படிப்பிச்சவர். சரி சரி ஆக வேண்டியத பார்ப்போம்" என்று சொல்லிப் போட்டு வேலைகளை செய்யத் தொடங்கினோம். எனக்கு தாத்தாவை எரிப்பதற்கான ஒழுங்குகள் செய்யும் பொறுப்பு தரப்பட்டது.

"டேய் காந்தன் வீட்டில வேலியிலிருந்த தூசி காத்து உன்ர வீட்டுக்குள்ள வராது. நல்ல சுவாசம் கிடைக்கும். வீட்டை சுத்தி எப்பவும் பறவைகள் பாடிக்கொண்டே இருக்கும். வீட்டுக்குத் தேவையான இலை, கீரை கிடைக்கும். நம்மட கால்நடைகளுக்கும் தீனி கிடைக்கும். இத்தனைக்கும் மேல வேலிக்கு நடுவில் நீ வாழ்றது ஒரு சோலைக்குள்ள நீ வாழ்றதைப் போல இருக்கும்" என்று எப்போதோ சுந்தரம் தாத்தா சொன்ன ஞாபகம் எனக்கு வந்தது. வேலியில வெட்டின மரங்களில காஞ்ச தடிகள வெட்டுவதற்கு சில மரங்களை சரித்து வெட்டினன், பல மரங்களில் குருவிக்கூடுகள் சரிந்து கிடந்தன. சில கூடுகளில் முட்டைகள், சில கூடுகளில் குஞ்சுகள். வானத்தை பார்த்தன். இரை தேட போன பறவைகள் தங்கட குஞ்சுகளை தேடிக் கொண்டிருந்தன.

சுந்தரம் தாத்தாவ எரிக்கிறதுக்கு வேலியிலிருந்த காஞ்ச மரங்கள அடுக்கிப்போட்டு சுந்தரம் தாத்தாவ அதுக்கு மேல கிடத்தியிருக்கிறன். வீட்ட கோவிச்சுக்கொண்டு போன குமாரு தூரமா நின்டு "காந்தன் பொடிய கொழுத்திராத சுந்தரம் தாத்தான்ட கையில வச்சிருக்கிற சீதேவிய எடுக்க வேணும். அந்த சீதேவி சாணத்துக்குள்ள போட்டிருக்கிற விதையில வாதாநாராயினியும், இப்பிலியும், ஆடாதோடையும், நொச்சியும் முளச்சி வரும். அது தான் எங்கட அடுத்த தலைமுறையிட வேலிக்கு நான் போடுற விதை" என்று சத்தமாக சொன்னார். அப்பத்தான் தெரிந்தது சுந்தரம் தாத்தான்ர கையில சீதேவி எடுக்க வச்ச விதைகள எடுக்க மறந்துட்டன் என்று. சுந்தரம் தாத்தா எரிந்தாலும் அவற்ர நினைவோட அவர் கொடுத்த இந்த விதைகள் நாளைக்கு எங்கட வேலில வாழும்.

வேலி வீட்டுக்கு காவலாளி இல்ல அது நம்மட வாழ்க்கையின்ர காவலாளி என்று சுந்தரம் தாத்தா எப்பயும் சொல்லுற வார்த்தய நினச்சுக்கொண்டு அவரின்ர சிதைக்கு தீ மூட்டினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவை தட்டும் கதை சொல்லி

# உயிரிலை

நல்ல காலம் பிறந்திருக்கு நல்ல காலம் பிறந்திருக்கு
நீங்க தான் தெய்வம் உங்க வீடு தான் கோயில்

வாங்க சாமி கனகாலம் வரல நல்ல சேதி கொண்டு வந்திங்களா,
சொல்லுங்க கேட்பம், நல்ல செய்தி, கெட்ட செய்தி,

நாலு பேரு கேட்ட செய்தி நீங்க வீட்டில குடியிருக்கு
உங்க உசுறு குடியிருக்கும் கோயிலில
நீங்க கும்புடுர உங்கட உடம்ப காக்க சொல்லி
சேதி கொண்டு வந்திருக்கிறன்.

வந்ததும் வராததுமா என்னத்த தேடுரிங்க சாமி,

நான் போன முறை வரைக்குள்ள
ஒரு புடி சோறு தந்த தாயி,
அந்த சோத்தோடு ஒரு புளிச்ச கீரை தந்த தாயி,
அந்த கீரையோட நம் ஊறு மீனும் தந்த தாயி,
அந்த சோறு திண்ண நாள
நான் மறக்க முடியாம உன்னையே நினைச்சிருந்தேன்,
அந்த கீரைய பார்க்க வேண்டி
என் யக்கம்மாவ நினைச்சிருந்தேன்.

என்ன சாமி அந்த கீரைய நீங்க
ஏன் பாவிக்கனும் அது என்ன பெரிய கீரை,

சொப்பனம் கண்டன் தாயே
அந்த சொப்பனத்தில ஒரு சாமி வந்து
ஒரு கதை சொன்னிச்சி,
அந்த கதைய உனக்கு சொல்லிப்புட்டு
ஒரு வாயு சோறு புளிச்ச கீரையோட சாப்பிட வந்தேன் தாயே...
ஒரு ஊரில ஒரு குளம் அந்த குளத்தில ரெண்டு பேரு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் இந்த மண்ணில கால் பதிச்சி இந்த குளக்கரை காற்றை சுவாசிப்பன் என்று நான் ஒருகாலமும் நினச்சதில்ல. குளமும் இந்த குளக்கரை வாழ்வும்தான் என்ர இமாலய வெற்றிகளுக்குக் காரணமென்று என் சுயசரிதையில் நான் எழுதியத யாருமே எப்பவும் நம்பமுடியாத வர்களாய் இருந்தபடியால்தான் அதற்குப்பிறகு இது குறித்த ஆய்வுகள் ஆரம்பமானது என்று என் மனைவியின் தோள்களை அழுத்தமாக பிடித்துக்கொண்டே கூறினேன். "சுரேன் நீங்கள் இவ்வளவு பெரிய சாதனைகளைப் புரிய காரணமாயிருந்த இந்த குளக்கரைக்கு ஒரு அடையாளத்த பெற்றுத்தானே கொடுத்திருக்கின்றீங்க" என்றா என் மனைவி நளாயினி.

நானும் மனைவி நளாயினியும் பூண்டிக்குளம் கிராமத்திற்கு முப்பது வருசத்திற்குப் பிறகு வந்திருக்கிறம். முப்பது வருசத்திற்கு முன்பு பூண்டிக் குளம் தமிழ் கலவன் பாடசாலையில நடைபெற்ற அந்தப் போட்டி தான் என் வாழ்க்கைக்கான புதிய வாசலைத்திறந்து வச்சிச்சு. எல்லாமே இப்ப நடந்து முடிஞ்ச நிகழ்வுகள் போலிருக்கிறது என்று கதைத்துக் கொண்டே நானும் என் மனைவியும் வீட்ட நோக்கி நடக்க தொடங்கினோம்.

"என்ன தம்பி, எல்லாம் எப்படி இருக்குது" என்று கேட்டா என்ர அக்கா சாளினி. பழய நினைவுகள், பாசமான உறவுகள், மறக்க முடியாத உண்மைகள், மங்கிப்போகாத காட்சிகள், கண்ணெதிரே தோன்றுகின்ற நிதர்சனங்கள் அத்தனையும் மனசில திரும்பத்திரும்ப நிரம்பி வழிஞ்சு கொண்டிருக்கு அக்கா என்றேன்.

அவர் ஆச்சரியத்தோடு என்னைப் பார்த்தா. அவர் ஒருவர்தான் இப்போது எங்கள் குடும்பத்தின் அடையாளமாய் இன்னும் இங்கே பூண்டிக்குளம் கிராமத்தில இருக்கிறா. தம்பி பிரான்சுக்கு போனபிறகு அம்மாவும் அப்பாவும் இங்க இருந்துதான் காலமானவை. இந்த இடத்தில இருக்கிற மரம், செடி, கொடி எல்லாமே அவையின்ர நினைவுகள இப்பையும் பேசிக் கொண்டே இருக்குது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காவின் வீட்டு வாசலில் பெரிய படமாக அப்பாவின் படம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் படத்தின் ஓரத்தில் ஒரு சிறிய படம் அதனோடு செருகப்பட்டிருப்பதை பார்த்த நளாயினி “இதென்ன, ஒருக்கா அந்த படத்த எடுங்க பாப்பம்” என்றா, “ஓ அதுவா அது உள்ளத்த தொடூர படம்” என்று சொல்லிக்கொண்டே படத்தை எடுத்துக் கொடுத்தேன்.

நளாயினி படத்தை உற்றுப் பார்த்துவிட்டு என் முகத்தை பார்க்க அக்காவும் தேத்தண்ணிய கொண்டுவந்தா, “இந்த ஒரு படம்தான் அப்பான்ர படம் இங்க இருக்குது” என்றா அக்கா. “எல்லாம் இந்த இடப் பெயர்வுக்குள்ள காணாம போயிருச்சி, அப்பா எவ்வளவு சிமாட்டா இருக்கிறார் பாரும்” என்றாள் நளாயினி. “நான் சிரித்துக்கொண்டே அவர் சாப்பிட்ட சாப்பாடும், ஓடின சைக்கிளும், அவரிட்ட இருந்த நல்ல மனசும் தான் அவரின்ர சிமாட்டுக்கு காரணம்” என்றேன்.

கதைத்துக் கொண் டிருக்கும் போதே அக்காவின் மகனும் மருமகளும் தோட்டத்திலிருந்து வந்துவிட்டார்கள். முற்றத்தில் அமர்ந்தவாறே பழைய கதைகள் எல்லாம் கதைத்துக் கொண்டிருந்தோம். நளாயினி அப்பாவின் படத்தை இடைக் கிடை பார்த்துக்கொண்டிருந்தா. நளாயினி யாழ்ப்பாணத்தில் பெரிய குளக்கரையும் கடற்கரையும் இல்லாத மானிப்பாய் கிராமத்தில பிறந்தவா. சில விசயங்கள் அவளுக்கு புதுசாத் தான் இருக்குது.

அவள் கையில் இருக்கும் படத்தை வாங்கிய நான் மீண்டும் அப்பாவைப் பார்த்தேன். பொட்டு பொட்டு சேட்டு, வரி வரி சாரத்தை மடித்துக்கட்டிய தோற்றத்தில். பெட்டிய சைக்கில்ல பின்னுக்கு கட்டிக்கொண்டு கையில் வைத்திருந்த கோன அடிக்கிற மாதிரிக்கு தோன்றும் அவரின் தோற்றம் தான் அப்பாவ “ஜப்பான் சண்முகம்” என்று எல்லாரையும் சொல்ல வைச்சது.

பிறகு, பள்ளிக்கூடத்தில அப்பான்ர பட்டப்பேர எனக்கும் வச்சு ஜப்பான் சுரேன் என்றும் ஜப்பான் என்றும் என்ன கூப்பிட்டாங்கள். அந்தப் பட்டப்பேர் தான் இன்றைக்கு அமெரிக்காவின் பல மாகாணங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பாவின் பல நாடுகளிலும் "ஜப்பான் சுவை" (Japan Taste) என்ற மிகப்பெரிய உணவு சாம்ராஜ்யத்தை உருவாக்கியிருக்கு என்றேன். "இன்றைக்கும் மாமா எங்கட ஊருக்குள்ள கனபேர் உங்கட கதைய கதைப்பினம்" என்றான் மருமகன் வேந்தன். "அதெல்லாம் கதைகளுக்கு மட்டுமில்ல தம்பி, கதையோடு கண்ணீரும் கலந்திருக்கு" என்றேன், மருமகள் தேன்மொழி "ஏன் என்றாள்" ஆச்சரியமாக...

"சரி சரி வாங்கோ கதைச்சுக்கொண்டு சாப்பிடலாம். என்றா அக்கா. "வந்து மூணு நாளும் ஜப்பான் மீன் கறியை 30 விதமா செய்து கொண்டே யிருக்கிறா" என்று சொல்லிக்கொண்டே சாப்பாட்டுக்கு அமர்ந்தோம். "நீ செய்யாத வகையா நான் செய்யப்போறேன்" என்றா அக்கா.

"இண்டைக்கு ஜப்பான் மீன் பிரட்டல் வித்தியாசமா இருக்கே" என்றேன். "முருங்கக்கீரையும் குப்பக்கீரையும் அம்மில வச்சு நல்லா அரச்சு நல்லா மீன தீச்சுப்போட்டு அரைச்ச கீரையோட சேத்தது" என்றா அக்கா. "அட அரைக்கிறதுக்கு கடம்பனயெல்லோ கேட்டிருக்கவேனும், கடம்பன் இன்னும் வலந்தலையில இருந்து வரையில்லையோ, இல்ல சிலநேரம் நாளைக்கு வருவாராம்" என்றார் அக்கா. "கடம்பனப் பார்த்துப்போட்டு போறதிற்காகத்தான் நாலாவது நாளும் நாங்க நிக்கிறம். கடம்பனுக்கு நான் வந்திருக்கிற சேதி கிடச்சா கட்டாயம் வந்திருப்பான். கிடச்சதோதோ தெரியயில்லை" என்று சொல்ல, "நீ இன்னும் மாமாவுக்கு சொல்லயில் லையே" என்றான் மருமகன்.

"என்ன என்றேன். "இல்ல கடம்பன்", "என்ன கடம்பனுக்கு என்ன", "கடம்பன் வலந்தலையில இருந்து இங்க வரேக்க எக்சிடன்டாம் என்றா அக்கா". எனக்கு ஒருக்கா அடைக்குமா போல் இருந்தது, சாப்பாட்டை விட்டெழுந்து கைகழுவி விட்டு "இப்ப என்னவாம்" என்றேன். "ஆள் முடிஞ்சு தாம்" என்றா அக்கா. ஒரு முறை தலை சுற்றுவதுமாப்போலிருக்க அந்த கதிரையில் அப்படியே இருந்தேன்".

நளாயினி எழும்பி பக்கத்தில வந்திருந்து என் தோள்களை தடவி "உங்கள பார்க்க வேண்டுமென்று ஆசையாய் வந்திருப்பார்" என்றா. மீண்டும் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகள் பூண்டிக்குளம் பாடசாலை வாழ்க்கையை நோக்கிச் சென்றது.

நானும் கடம்பனும் தான் பூண்டிக்குளம் பாடசாலையில் நண்பர்கள். இருவரும் இந்த கிராமத்தில் இருந்துதான் அந்தப்பாடசாலைக்கு சென்றோம். என்ர அப்பா ஒரு ஜப்பான்மீன் வியாபாரி. அவனின்ட அப்பா ஒரு விவசாயி. பூண்டிக்குளத்தில ஸ்கூல் இருந்தாலும் அயல் கிராமத்து பிள்ளைகள் தான் முழுக்கலும் படிச்சதுகள், எங்கட ஊர் பிள்ளைகள் அஞ்சாம் ஆறாம் ஆண்டுக்குப் பிறகு ஸ்கூலுக்கு வாறதில்ல. குளத்துக்கு தூண்டில் போட போயிருங்கள். சிலபேர் மீன், கருவாடு விக்க போயிருங்கள், நானும் கடம்பனும் மட்டும்தான் இந்த ஸ்கூலில் O/L வரைக்கும் படிச்சம். என் நினைவுகள் அங்குமிங்குமாக பாய்ந்து கொண் டிருந்தது. வீட்டில ஒரே அமைதி. அந்த அமைதியில் ஒரு ஸ்பீக்கரில் சோககீதம் இசைக்க கேட்டேன். அந்த இசையின் இடைக்கிட கடம்பனின் அகால மரணம் தொடர்பான அறிவித்தலோடு ஆட்டோ ஒண்டு எங்கட வீட்ட கடந்து போய்க்கொண்டிருந்தது.

வீட்டுக்கு வெளியே வந்தேன். “தம்பி வாரியே” என்றேன் அக்கா சொன்னா “நாளைக்கு போகலாம் இன்னும் பொடி கொண்டு வரையில்ல. நாளைக்குத் தான் வருமாம்”.

அப்படியே முற்றத்தில இருந்த தென்னங்குற்றியில இருந்துகொண்டு வானத்தைப் பார்த்தேன். மேகங்களே இல்லாத நீல வானத்தில் கும்மிக் கும்மியாக கொட்டிக்கிடந்த நட்சத்திரங்களில் கடம்பனும் இன்று ஒரு நட்சத்திரமாகிவிட்டான் என்று என் மனம் பேசியது.

கடம்பனுக்கும் எனக்குமான உறவு ஒரு சுவையின் சுவை என்று தான் சொல்லனும். இப்ப எல்லாம் பிள்ளைகளுக்கு கூட்டாஞ்சோறு சமைக்கிற பழக்கம் இல்லாமலேயே போயிருச்சி. அந்த நாட்களில நான் கடம்பன், அனிதா, சாம்பவி, சங்கீதன் என்று இந்த ஊரில இருக்கிற ஆலமரத் தடியில கூட்டாஞ்சோறு சமைக்கிறதும் காக்காவுக்கும் மைனாவுக்கும் சாப்பாடு வைக்கிறதும்..... இச்சீ அந்த நாட்கள் திரும்பவும் வருமா, இப்படி எத்தனை கதைய கடம்பனோடு கதைக்க யோசிச்சுக்கொண்டு வந்தனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மாமா, போன வியாழக் கிழமை வலந்தலைக்கு கடம்பன் மாமா போக முதலில எங்க வீட்டுக்கு வந்து போனவர். அப்ப நீங்க வாறத பற்றி கதச்சுப்போட்டு இந்த என்வலப்ப கொடுத்துப்போட்டு போனவர். வந்த பிறகு கொடுக்கச்சொல்லி. நீங்க வந்த பிறகு இதைப் பற்றி கதைக்கிறன் என்று சொல்லிப்போட்டு போனவர்” என்று அந்த என்வலப்ப தந்தான் வேந்தன். “ஏன் முதலயே தந்திருக்கலாமே” என்று என்வலப்பை பிரித்தேன். ஆச்சரியம் நான் கேட்டது போல அதே விதைகள்” அந்த என் வலப்பிற்குள் இருந்தன. “இது என்ன விதைகள்” என்று என் கையில் இருந்த விதைகளை வாங்கி பார்த்தா நளாயினி. “இது என்ன விதை யென்று கேக்கிறீரோ இதுதான் அந்த விதை”. “ஓ இதுதான் அந்த விதையா” என்றாள் நளாயினி. “என்ன விதையென்று தேன்மொழி அக்காவை பார்த்து கேட்க, என்ன இந்த ஊருக்க இருந்தும் இந்த விதைய தெரியாம இருக்கிறாம்மா இதுதான் புளிச்சல்கீரை விதை” என்றேன். அவள் கண்கள் அகலவிரிந்தது.

கடம்பன்ர அப்பான்ர தோட்டத்தின் வரம்புகளின் ஓரங்களில அடர்த்தியா வளர்ந்து அழகாக மஞ்சள் பூ பூத்து சில நேரங்களில சிவப்பு காயும் மஞ்சள் பூவுமாக இருக்கும் காலத்தில் ஒரு பூந்தோட்டத்தில் நடுவில் இருக்கும் உணர்வை அது கொடுக்கும்.

“கூட்டாஞ் சோறு சமைக்க ஒவ்வொருவரும் ஒவ்வொரு சாமான் கொண்டு போக வேணும். எனக்கு ஜப்பான் மீனும், கடம்பனுக்கு புளிச்சல்கீரையும் பொறுப்பாக தருவினம். கூட்டாஞ்சோறு சுவைய தூக்கி கொடுக்கிறதே இது ரெண்டும்தான். இப்ப நினைச்சாலும் வாயூறுது” என்றேன்.

கதைத்துக் கொண்டிருக்கும் போதே ஐயோ ஐயையோ என்று குழறுற சத்தம் கேட்க “பொடி வந்திருச்சு போல இப்ப போக வேணாம் காலையில போங்க” என்றாள் நளாயினி. “தேன்மொழி குழந்தை கிடைக்க இருக்கிறா இரவு நேரத்தில போய் வாறது சரியில்ல” என்று அக்காவும் கூறினா.

“இப்பதான் மூணு மாசம்மாம்” வயிறு பெருசா வெளியே தெரியேல்ல, விதையை தந்த கடம்பன் வேற ஒன்னும் சொல்லலையே என்று கேட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொன்னவர்" என்றாள் தேன்மொழி. "அம்மாச்சி தேன்மொழி புளிச்சகீரை மசியல ஒவ்வொருநாளும் சாப்பிடனும், நீ மாசமாயிருக்கிற என்று கேள்விப்பட்டனான், உனக்கும் வயித்தில இருக்கிற பிள்ளைக்கும் ரத்தசோகை வராம ரத்தத்தில சோர்வு வராம இருக்க மண் சட்டியில சமைச்சு வச்சு சாப்பிடவேணும் என்று சொன்னவர்" என்றாள் தேன்மொழி. "அப்பத்தான் தெரியும் எனக்கு" கடம்பன் மாமா ஊருக் குள்ள இருக்கிற எல்லா கர்ப்பிணித்தாய்மாருக்கும் புளிச்சல்கீரை விதை கொடுத்து வீட்டில வளக்கச்சொல்லி ஊரூரா சொல்லுறவர் என்டு அம்மா சொன்னவா. நான் திரும்பவும் வானத்தைப் பார்த்தன். அகன்ற வானத்தில் சில நட்சத்திரங்கள் மிகப்பெரிதாக ஜொலித்துக் கொண்டி ருந்தன. எனக்கு இப்ப தெரிஞ்சது கடம்பன் எல்லா நட்சத்திரங்களையும் போலல்ல அவன் ஒரு பெரிய நட்சத்திரமென்று. அப்பத்தான் அக்கா சொன்னவா வலந்தலைக்கு கடம்பன் புளிச்சல்கீரை விதை குடுக்கத்தான் போனவன் எண்டு.

கடம்பன் புளிச்சல்கீரைய இந்த மண்ணில பெருக்க படாத பாடுபட்டவன். புளிச்சல்கீரையின்ர பெருமையை அறிஞ்ச பிறகு புளிச்சல்கீரைய பதப் படுத்தி மாசம் மாசம் எனக்கு அவன் அனுப்பாட்டி என்ர ரெஸ்ரோரன்ட் எப்படி கொடிகட்டி பறந்திருக்கும் என்று நான் கூறியவுடன் நளாயினி ஆம் என்று தலை அசைத்தாள். எங்கட பெரிய வெற்றியில கடம்பனுக்கு பங்கிருக்கு என்று நளாயினி அழுத்தமாகச் சொன்னாள்.

கடம்பனின் நினைவுகளுடன் படுக்கைக்கு சென்றேன். நித்திரை வரவில்லை கடம்பனின் நினைவுகளால் மனம் அலைக்களிந்தது.

அது ஒரு வெளி, கடம்பனும் நானும் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறம். அந்த வெளியெங்கும், புளிச்சல்கீரை, கீரைத்தோட்டத்தின் நடுவில் பெரிய வெள்ளக்கட்டிடம். அதுக்கு மேல ஒரு கோபுரம். அந்த கோபுரத்தில "உயிரிலை" என்று எழுதப்பட்டிருந்தது. "மச்சான் இதுதான் உனக்காக நான் கட்டினது" என்று சொல்லிக்கொண்டே என்ர பிளேட்டுக்க புளிச்சல் கீரை மசியலை அள்ளிப் போடுறான். அவன் கண்களில் கண்ணீர். ஏன்டா அழுகுறா சொல்லுடா சொல்லுடா சொல்லுடா, எனக்கு சொல்லாம யாருக்கு சொல்லப்போற.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்னப்பா ஏன் குளறுறியள்” என்றா நளாயினி. விழித்துக் கொண்டு படுக்கையில் எழும்பியிருக்க என்ர வாயில உயிரிலை உயிரிலை உயிரிலை என்னப்பா என்ன கனவா? கடம்பன் கனவில வந்து ‘உயிரிலை’ என்ற அவனின்ர கனவு இலட்சியத்தை சொல்லி போட்டு போறான் என்று அழுது கொண்டே கூறினேன். அதற்குப் பிறகு நித்திரையே வரயில்ல. நினைவோட்டத்தை ஊடறுத்து சேவல் கூவியது, குருவிகள் கூச்சலிட்டன, பூண்டிக்குளம் கடம்பனின் இறுதி யாத்திரைக் காக ஆயத்தப்படுத்தப்பட் டுக்கொண்டிருந்தது.

காலையிலேயே நான் வந்திட்டன். மலை சாய்ந்து கடலில் மிதப்பது போல ஒரு பேழையில் கடம்பன் கிடந்தான். அவனது மனைவி பிள்ளைகள் என்னை கட்டிப்பிடித்து ஒப்பாரி வைத்தார்கள். “உங்கள ஒருக்கா பாக்க வேணும் என்று அடிக்கடி சொல்லுவாரே” என்று திரும்ப திரும்ப சொல்லி அழுதார்கள்.

நேரம் வந்தது. இறுதிக்கிரியைகளுக்கு முன்னால் அஞ்சலி உரைகள் தொடங்கியது. ஒருசிலர் மட்டும் பேசினால் போதும் என்றார்கள், எனக்கு முக்கியமான பங்கு கொடுக்கப்பட்டது.

கடம்பனும் நானும் ஜப்பான் மீன் சுவையின் அடையாளங்கள் என்ற வரிகளோடு எனது பேச்சை தொடங்கினேன், இன்றுவரை ஜப்பான் மீன் வெடுக்கு என்று சொல்லும் பலர் அங்கிருந்தார்கள் என்பது எனக்குத் தெரியும். பூண்டிக்குளம் விவசாயத்திற்கான குளம் என்றாலும் அந்தக் குளம் மீன்களுக்கான தாயகம், ஜப்பான் மீன் இந்த நாட்டில் பூண்டிக் குளத்தில் இருந்துதான் தொடங்கியது. ஜப்பான் வியாபாரியான எனது அப்பா அந்த மீனை விற்பதற்காக ஒரு நாளைக்கு 45 தொடக்கம் 65 மைல்கள் தூரம் ஓடியும் அவரால அந்த மீன விக்க முடியாம இருந்திச்சு, ஏனென்டா அந்த மீன வாங்கி சாப்பிடுபவர்களின் எண்ணிக்கை குறைவு. அந்த ஜப்பான் மீன் தின்பவர்களை சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர் களாகவே சமூகம் பார்த்தது. அந்தநேரத்தில் நானும் கடம்பனும் O/L படித்துக்கொண்டிருந்தோம். எங்கட பாடசாலை நிகழ்வுகளில ஜப்பான் மீன் சாப்பிடுவது தொடர்பான ஒரு அழகான கட்டுரைய நான் எழுதிய போது அது பலருக்கு நகைச்சுவையாக இருந்தது. ஆனால் அந்த நகைச்சுவை நீண்டிருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப செத்தவீட்டில அழுதவங்கள் எல்லாம் அமைதியா என்ர கதையை ஆர்வமாய் கேட்டுக்கொண்டிருக்கினம்.

ஒரு நாள் பாடசாலை அதிபர் ஒரு அறிவித்தலை வாசித்தவர். அதுதான் பண்பாட்டு உணவு கண்காட்சி. அந்த உணவு கண்காட்சியில் O/L மாணவர்கள் 20 டிஸ் செய்ய வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டது. உணவுக் கண்காட்சிக்காக மாணவர்கள் குழுவாக பிரிந்தார்கள். நானும் கடம்பனும் ஒரு குழுவாக பிரிந்தோம். வழமைபோல ஜப்பான் மீன் புளிச்சல்கீரை கறி என்பது தான் எங்கள் ரெசிப்பி. கண்காட்சிக்கு உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட நடுவர்கள் வந்து இருந்தார்கள். எனது ஜப்பான் மீன்கறி முதலாம் இடத்தைப் பிடித்து நானும் கடம்பனும் பத்தாயிரம் ரூபாய் பரிசை பெற்றோம். அதனைத் தொடர்ந்து கொழும்பில நடைபெற்ற சர்வதேச கண்காட்சிக்கு நாம் அழைக்கப்பட்டபோது கடம்பனின் அப்பா கடம்பனை அனுமதிக்கவில்லை, நான் மட்டும் புளிச்சல் கீரையுடன் ஜப்பான் மீன் கொண்டு போய் சமைத்து அங்கேயும் முதலிடத்தைப் பெற்றேன். அதன் அதன் பின்பு மிக குறுகிய காலத்தில் நான் எதிர்பாராத விதமாக சிங்கப்பூருக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்த போது தான் "அவசரமா வீட்ட ஒருக்கா வந்திட்டு போங்கோ" என்றாள் கடம்பனின் மகள். "அப்பா ஒரு கொப்பியில நிறைய எழுதி வைச்சிருக் கிறார்" என்றாள்.

புளிச்சல்கீரை ஜப்பன் மீன் இணைந்த கறியின் மகா போசாக்கு குறித்து உலகம் முழுவதற்குமான அடையாளமாக நான் நிறுத்தப்பட்டேன். எனது இந்த அடையாளத்திற்கு கடம்பன் வழங்கிய பங்களிப்பு பெரிது. கடம்பன் எனது இந்த முயற்சிக்கான வேராக இங்கிருந்துகொண்டு புளிச்சல் கீரையை அழியாது காத்து வந்தவன். புதிய புளிச்சல்கீரை வகைகளை உருவாக்கியிருக்கிறான். அவன் எனக்கு அனுப்பிக் கொண்டிருந்த புளிச்சல்கீரை தான் எனது அனைத்து ரெஸ்டாரன்ட்களுக்கு நாடிவரும் மக்களுக்கான சுவையை கொடுத்தது என்று நான் கூறி வெம்பி வெடித்து அழுதேன். நளாயினி பக்கத்தில வந்து ஆறுதல் படுத்தினா. அதற்கு மேல் பேச முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் பேசினார்கள் இறுதிக்கிரியைகள் முடிந்தது கடம்பனின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

மீண்டும் நாட்டை விட்டு போகும் முன்பு புளிச்சல்கீரை குறித்த கடம்பனின் கனவை நனவாக்க முயற்சிகள் எடுக்கத் தொடங்கிய போது தான் கடம்பன் வீட்டிலிருந்து அந்த தொலைபேசி அழைப்பு வந்தது. ஆச்சரியம். ஒரு அழகான மாலைப்பொழுது. சோகமயமான மனைவி பிள்ளைகளுடன் அமர்ந்து அந்த கொப்பியை நான் திருப்பினேன்.

ஆச்சரியம் முதல் பக்கத்தில் என் கனவில் வந்த அதே உயிரிலை என்ற தலைப்பு. இரண்டாம் பக்கத்தில் புளிச்சல்கீரையும் நமது இனவிருத்தியும், புளிச்சல்கீரையும் நமது பெண்களும், புளிச்சல்கீரையும் இரத்த அழுத் தமும் என 15 தலைப்புகளுடன் கடம்பன் எழுதிய அழகான கட்டுரைகள் அச்சுக்கு போகாமல் அவன் பெட்டிக்குள் கண்டுபிடிக்கப்பட்டது.

பல மனிதர்கள் மரங்களுக்காக வாழ்வார்கள். ஆனால் சில மனிதர்கள் தான் செடிகளுக்காகவும் வாழ்ந்திருக்கிறார்கள் என்று கடம்பன் எழுதிய வரிகள் என் மனதை துளைத்துச்சென்றது. புளிச்சல் கீரை மருந்தல்ல. அது மனிதனுக்கு நாளாந்த உணவு. அந்த உணவு இருந்தால் மனிதனுக்கு மருந்து தேவையில்லை என்று தொடர்ந்தும் எழுதியி ருந்தான். வீட்டில புளிச்சல்கீரை இருந்தால் அது நாளும் உணவில் இருந்தால் ஆரோக்கியமான உடல், இனிமையான குடும்பம், புளிச்சல் கீரையுடன் ஜப்பான் மீன் இணைந்தால் இன்பமும் சுவையும் இணைந்த இல்லறமும் தாம்பத்தியமும் மழலைகள் மலர்வும் மல்லிகைத் தோட்டத்தின் வாசத்தில் வாழும் இன்பம் அது சொர்க்கத்தின் வாசல். இது கடம்பனின் வரிகள்..

உயிரிலை புளிச்சல்கீரை உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கான அத்தனை தரவுகளையும் அவன் தனது கட்டுரைகளில் எழுதியிருந்தான். கொப்பியை வாசித்து முடித்துவிட்டு மேசையில் வைத்தேன். கடம்பனின் இளையமகள் சாரதா எனக்கு முன்பாக அமர்ந்திருந்து நிலத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். "என்ன சாரதா அப்பா போனில கதைக்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ள சொன்னவர் A/L எழுதிப்போட்டு இருக்கிறீர்?" என்டு. "இல்ல மாமா A/L எழுதிப்போட்டு ரிசள்ஸ் வாரதுக்கிடையில செய்து முடிக்கவேணும் என்டு அப்பா சொன்ன வேலய செய்து முடிச்சிட்டன், ஆனா அத அனுபவிக்க அப்பா இல்லாமல் போய்ட்டார்" என்றாள் பெருமூச்சோடு. "என்ன கோஸ் செய்தநீர்" என்டு கேட்டன். "கோஸா" என்று அவள் என்னை திரும்பிக்கேட்டாள். நான் அவளை ஆச்சரியத்தோடு பார்த்தேன். "சாரதா கடம்பன்ர அப்பான்ட காணியில மூன்று ஏக்கர் புளிச்சல்கீரை தோட்டத்த உருவாக்கியிருக்கிறாள்" என்றாள் கடம்பனின் மனைவி. மேசையிலிருந்த கடம்பனின் கொப்பியை மீண்டும் விரித்தேன்.

அதில் கடசிப்பக்கத்தில் எழுதப்படாத ஒரு பேப்பர் இருந்தது. "நட்சத்திரங்கள் இருளில்தான் ஒளிர்கின்றன. இரவில்லாத நட்சத்திரங்கள் வாழ்வதற்கு வழியில்லாதவைகள். ஆனால் பகலில் நடக்கும் மனிதர்கள் குருடர்களைப்போல் விழியின்றி, வழியின்றி தடுமாறும் உலகிற்கு சாரதா பகலிலும் இரவிலும் ஜொலிக்கும் நட்சத்திரம்" என்று எழுதி முடித்துவிட்டு சாரதாவை நோக்கி நீ ஒரு நட்சத்திரம். என் வானத்தில் பகலிலும் இரவிலும் நீ எப்பயும் ஜொலித்துக்கொண்டேயிருப்ப என்று வாழ்த்தினேன்.

"இனியென்ன உலகத்திற்கான உயிர்மூச்சு இந்த உயிரிலையில் தொடங்கட்டும்" என்றேன். கடம்பன் இறந்து 31ம் நாள் நிகழ்வு முடிந்த பின்பு சாரதாவின் புளிச்சல்கீரைத் தோட்டத்தின் நடுவில் நாட்டுக் கீரைகளின் ஆராய்ச்சி நிறுவனத்திற்கான அடிக்கல் உயிரிலை என்ற பெயரில் நடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவை தட்டும் கதை சொல்லி

# "தங்கத்தவசி"

நல்லகாலம் பொறந்திருக்கு
நல்லகாலம் பொறந்திருக்கு
நீ தான் சாமி, உன்ர வீடு தான் கோயில்,
நல்லகாலம் பொறந்திருக்கு நல்லகாலம் பொறந்திருக்கு,

எங்க தான் காலம் பொறந்திருக்கு சாமி
இப்பிடியே சொல்லிசொல்லி காலந்தான் போகுது,
நடக்க முடியல எனக்கு சதய தூக்க முடியல எனக்கு,
எப்பத்தான் விடியுமோ என்ர பிள்ள வாழ்க்கையில

மணமேடை காரைத்தான் தவமாய் தவமிருக்க,
குண்டு பொண்ணு வேணாமென்று நாலுபேரு
காதுபட கதைக்கிறத என்பிள்ள
தாங்காம தவியா தவிக்கிறத,
யாரிட்ட சொல்லி நானும் அழுகுறதோ தெரியயில்ல

அட தாயே உனக்கு ஒரு கத சொல்லத்தானே வந்தன்,
யக்கம்மா அனுப்பித்தான் நானும் இங்க கூடி வந்தன்
நல்லகாலம், நல்லகாலம் பிறக்கத்தானே
நாலுவழி சொல்லி வர யக்கம்மா அனுப்பினத
நானுமெல்லோ சொல்லவந்தன்,

சொல்லுங்க சாமி கேப்பம்

ஒரு ஊரில ஒரு மாப்பிள்ள, மாப்பிள்ளைக்கு ஒரு பொம்பிள....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கலியாணத்த ஒத்திவச்சிருக்கு என்று அவைக்கு எப்படி சொல்லுறது” நீ தான் எனக்கு அத பற்றிச் சொல்லவேணும் என்று தன்ர மனிசிக்கு அழுத்தமாகச் சொன்னார் செந்தாமரை. “அதில ஒண்டும் சொல்லுறதுக்கில்ல, காலம் நேரம் பொருந்தயில்ல என்று சொல்லுங்கோ”. “எத்தன கதைய கதைப்பாங்கள் என்று உனக்குத் தெரிந்துகொண்டும் நீ சாந்தி இப்படி சொல்லக்கூடாது”, “சரி அப்ப என்ன செய்யப்போறியள் என்று சொல்லுங்கோவன், இன்னும் ஏழு நாள் தான் கிடைக்கு. அதுக்குள்ள டிக்கெட்டை வெட்டி வீட்டுக்கு வந்தாலும் வரதனுக்கு எழும்பி நடக்க முடியுமா என்றும் தெரியாது” என்றாள். அழுது வீங்கிய முகத்துடன் வெளிய வந்த சர்மிளா “எனக்கு மட்டும் ஏன் இப்பிடியெல்லாம் நடக்குதோ தெரியயில்ல” என்று மூக்கை வெளிய சீறிப்போட்டு துணியால துடைத்துக் கொண்டே குசினிக்குள் போனாள்.

வாசலில் குந்தியிருந்த செந்தாமரை, “சர்மிளா நீ ஒரு முடிவ சொல்ல வேணும். புள்ள என்ன செய்யிறதென்டு, எனக்கென்டா தெரியாது” என்றார். என்ன செய்யிறது நான் காதலித்துக் கூட்டிக்கொண்டு வந்த மாப்பிள்ளையே நீங்கதான் ஓடித்தேடிக் கொண்டு வந்த சம்பந்தம், அப்பையும் நான் வேணாம் வேணாம் என்றுதான் சொன்னான். அரசாங்க உத்தியோகம், வசதியான குடும்பம், எங்கட சமூகம், சாதி என்று எல்லாரும் சேர்ந்து கொண்டாடிப்போட்டு இப்ப நான் சொன்னாத்தான் இவை செய்வினமாம்”.

“என்னடி தாயும் மகளும் சேர்ந்து படுத்துரியள் பாடு? இப்படி ஆட்டம் போட்டியள் என்றா கிணத்துக்க விழுந்து செத்துப்போவன்” என்றார் செந்தாமரை. “போய் நீர் விழும் பிறகு நாங்களும் வந்து விழுகிறோம்” என்றாள் சாந்தி.

“ஓ ரெண்டு பேரும் விழுங்கோ நானும் வந்து விழுறன், மூணு பேருக்கும் நாளைக்கு இங்க செத்துவீடாவது நடக்கட்டும்”. இந்த உரையாடல் எல்லாவற்றையும் அமைதியாக கேட்டுக்கொண்டிருந்த தங்கம் “அப்ப என்னை யாரும் கிணத்துக்க தூக்கிக்கொண்டுபோட மாட்டியலே, அப்ப நான் சாக முடியாதே” என்று மனசுக்குள் நினைத்து கலங்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தாமரை குடும்பம் உறுதிநகர் கிராமத்தின் எட்டாம் குறிச்சியில் இருக்கிறது. செந்தாமரை உறுதிநகர் போஸ்ட் ஓபீஸில் பியோனாக வேலை செய்து கொண்டிருக்கிறார். சாந்தி உறுதிநகர் பாலர் பாடசாலை ஆசிரியை. இரண்டு மகள்மார், மூத்தவள் தங்கம் நல்லா இருந்தவள் பதினாறு வயசில ஏதோ காய்ச்சல் வந்த பிறகு இடுப்புக்கு கீழே இயங்காமல் நடக்க முடியாதவளாய்ப் போனாள். இரண்டாமவள் சர்மிளா படிச்சு இப்பத்தான் டீச்சர் வேலை கிடைச்சது.

தங்கத்துக்கு இனி கலியாணம் சரிவராது என்றபடியால் சர்மிளாவின்ர கலியாணத்த ஜாம் ஜாமென்று செய்யிறதுக்கு செந்தாமரையும் சாந்தியும் தங்கட சாதிசனத்துக்குள்ளேயே வேங்கையூர் பெருமாளின் மகன் வரதனை சம்பந்தம் பேசி வைகாசி மாதம் 16ஆம் தேதியென்டு எல்லாருக்கும் காட்டும் கொடுத்து முடிச்சிப்போட்டினம்.

இந்த கலியாணம், புரோக்கர் தான் கொண்டுவந்தது. முதல் முதல் வரதன்ர படத்த பார்த்தவுடனேயே சர்மிளா தொடுகிலும் மாட்டனென்று சொல்லிப் போட்டா. நல்ல உயரமான மாப்பிள்ள. உயரத்துக்கேற்ற உடம்பு. ஆனால் வயிறு பெருத்து வண்டி நல்லா தொப்பை விழுந்து கிடந்தது. வரதன் நடக்க கால அகட்டித்தான் நடப்பான். வண்டி வரும் முன்னே வரதன் வருவான் பின்னே என்றுதான் அவன் நடையிருக்கும்.

வரதன் வேங்கையூர் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி உத்தியோகத்தராக வேலை செய்கிறான். சின்ன வயசிலிருந்தே வரதனுக்கு சரியான உடம்பு தான். அதனால எல்லாரும் அவன பண்டி என்று பட்டப் பெயர் வைச்சுத் தான் கூப்பிடுவினம். எத்தனையோ சம்பந்தம் வந்தும் இவனின்ர உடம்ப பார்துப்போட்டு இவன நாங்க தூக்கி சுமக்க எங்களுக்கு என்ன தலவிதியே என்று எல்லாப் பெட்டைகளும் மாட்டன் என்று சொல்லிப்போட்டாளவ. அதற்குப் பிறகுதான் பெருமாளும் மனுசியும் சரி சரி சீதனத்த குறைச்சுப் பேசுவம் என்று சொன்னதாலதான் இந்த சர்மிளா குடும்பம் வரதன் வலையில சிக்கினாதாக்கும்.

"என்னதான் சொன்னாலும் இந்த தடியன எனக்கு தூக்கி சுமக்க ஏலாது" என்று சொல்லி சர்மிளா பல தடவை அழுங்கு பிடியாக இருந்ததால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியா வேணாம் என்று சொல்லிப்போட்டினம், ஆனால் வரதன் சர்மிளான்ர போன் நம்பர எடுத்து "உனக்கு என்ர உடம்புதான் பிரச்சனை என்றா நான் கலியாணத்துக்கு முதலில குறைச்சு காட்டுறன். நீர் ஓம் என்று மட்டும் சொல்லும்" என்று கெஞ்சி கூத்தாடி, நீ உடம்ப குறைச்சி என்டா ....

அதற்குப்பிறகு தான் இரண்டு வீட்டாரும் சம்மந்தம் கலந்து கலியா ணத்துக்கு டேட்டும் வச்சவ. நீ கலியாணத்துக்குள்ள உடம்பை குறைக்க யில்ல என்டா, காட்டு கொடுத்தாலும் என்ர கழுத்தில நீ தாலி கட்டமாட்ட என்று சொல்லிப்போட்டாளே என்றுதான் வரதன் இந்த ரிஸ்க்கெல்லாம் எடுக்கத் தொடங்கினான்.

எல்லா பாமசிகளிலும் ஏறி இறங்கி உடம்பு குறைக்க போடாத குழுசையில்ல. பிறகு யூட்ரியூப்பிலயெல்லாம் தேடி கனக்க மருந்துகளை வாங்கி குடித்தும் சரிவாறதாயில்ல. பிறகு ஜிம்முக்கு போனான். கொஞ்சம் குறையுறமாரி இருக்கும். பிறகு கூடும். சள்ளையிரண்டும் குறைஞ்சாலும் வண்டி ஊதித்தள்ளிக் கொண்டேயிருந்தது. அப்பத்தான் சிங்காரம் வாத்தியார் ஒருக்கா கண்டு "என்னடா கலியாணமா என்று கொப்பர் சொன்னவர்" என்று சொல்ல, "கலியாணம் நடக்குமா இல்லையா என்றத இந்த தொப்பையின்ர கையிலதான் இருக்குது" என்று வரதன் சொல்ல, "டேய் காலையில் எழும்பி வெறும் வயித்தில தண்ணீய குடிச்சுப் போட்டு வேங்கையூர் மைதானத்தில மெதுவா ஓடடா, பத்து நாளைக்கு ஓடினா வண்டி இருந்த இடத்தில உன்ர சர்மிளா சுண்டி விளையாடுவா" என்று நக்கலா சொல்லி போட்டு போனவர்.

அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் காலையில வரதன் மெதுவா ஓடத் தொடங்கினான். ரதி மாதிரி ஒரு பொம்பள கிடைச்சிருக்கு. சர்மிளாவின் அழகும் உடல் கட்டமைப்பும், அவள் சிரிக்கும்போது கண்களில் பாயும் ஒளியும், உதட்டில் நனையும் எச்சிலும், தேவதையே வந்தாள் போலிருக் குதே. இத விடுவேனோ என்று மனசுக்குள்ள நினைத்துக் கொண்டே ஒவ்வொரு நாளும் வரதன் ஓடத் தொடங்கினான். நாலாவது நாள் ஓடத் தொடங்க முட்டிக்கால் ரெண்டும் சரியா வலிக்கத்தொடங்க இடையிலயே விட்டுப்போட்டு வந்த வரதன், கொஞ்சம் நடப்பதற்கு கஷ்டமாயிருந்ததை உணர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டத்தட்ட எல்லாருக்கும் காட் வச்சாச்சு. கலியாண ஏற்பாடு எல்லாம் முடிஞ்சிரிச்சு என்ற நிலையில்தான் அன்று காலை வரதனால் எழுந்து நடக்க முடியல. உடனே ஆசுப்த்திரிக்கு கூட்டிக்கொண்டுபோய் செக் பண்ணிப்பார்த்தா அவரின்ர "ரெண்டு முழங்கால் சிரட்டையும் நல்லா பாதிக்கப்பட்டிருக்கு. ட்ரீட்மென்ட் செய்யவேணும்" என்று ஆசுபத்திரியில மரிச்சுப்போட்டினம்.

வரதன் ஆசுப்த்திரியில என்று சர்மிளா வீட்டுக்காரர் போய் பார்க்கத்தான் தெரியும். தங்கட மாப்பிள்ளைக்கு சிலநேரம் ரெண்டு முழங்கால் சிரட்டையும் மாத்த வேணும் போல கிடக்கு என்று குழம்பிப்போய் வீட்ட வந்தவை. இந்த நிலையில்தான் செந்தாமரையும் சாந்தியும் சர்மிளா சகிதம் குமுறிக் கொண்டிருக்கினம்.

அப்பத்தான் சர்மிளாவுக்கு போனில வரதன் கூப்பிட்டு, "என்ன சர்மிளா ஆசுப்த்திரியில பத்து நாளா இருக்கன் வந்து பாக்கல" என்று கெஞ்சத் தொடங்கினான். "நீ சொல்லித்தானே நான் நடந்தனான் உனக்கு இரக்கமே இல்லை" என்று வரதனும் குமுற, "நீ என்ன என்ர புருசனா உன்ன வந்து நான் பாக்க, உன்ர ரெண்டு சிரட்டையும் கழட்டினா காலம் முழுக்க உன்ன நான் தள்ளிக்கொண்டு திரியவேணும்" என்று திட்டிப் போட்டு அழுது ஒப்பாரி வைத்தாள். இந்த நேரத்திலதான் செந்தாமரை "நான் சாகப்போறேன் கிணத்துக்க பாய போறன்" என்று குடும்பமா செத்துப் போவம் என்று கூச்சல்போட தொடங்கினார்.

வீட்டில நடந்த இந்தப் பிரகண்டத்திற்குள்ள, கலியாணவீட்டுக்கு பந்தல் போடுற பொறுப்பெடுத்த பக்கத்துவீட்டு இராஜன் மாஸ்டர், பந்தல் காரங்கள் அட்வான்சு கேட்க, சர்மிளா வீட்டுக்கு வந்தவர், இவயின்ர நிலைய பாத்துப்போட்டு "என்னடா நீங்கள் ஆளுக்கொரு மூலையில இருந்து கொண்டு முழுசிக்கொண்டிருக்கிறியள்" என்று கேட்க, செந்தாமரை தன்ர சோகக்கதைய சொன்னவர்.

இராஜன் மாஸ்டர் நல்ல கராட்டி எல்லாம் செய்வார். ஊருக்குள்ள கராட்டி பழக்குறவர், நல்ல உடம்புவாசியான மனுசன். உண்மையா அவருக்கு அம்பது வயசிருக்கும். பாத்தா முப்பது வயசுமாதிரி. வயிறெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரும்பு கம்பியால சுத்தினமாதிரி சின்ன சின்ன கோடு போட்ட டயர் மாதிரி நல்ல தட்டையா இருக்கும். அவரின்ர பொடியள் மனிசி எல்லாரும் அப்படித் தான். குடும்பமே இரும்பு கம்பிகள் மாரித்தான். அதாலதான் குடும்பத் தையே கராட்டி குடும்பமென்று உறுதிநகரில எல்லாரும் சொல்லுவினம்.

சர்மிளான்ர சோகக் கதையைக் கேட்ட இராஜன் மாஸ்டர் கொஞ்சம் அதிர்ச்சி அடைஞ்சாலும், "சரி இனி என்ன செய்யிறது டொக்டரோட கதைச்சுப்போட்டு தீர்மானத்த எடுங்கோவன்" என்றார். "டொக்டர் ஒப்பரேசன் செய்யவேணும் என்டு சொன்னவராம், ஒப்பரேசன் செய்தாலும் இந்த தடியனால தன்ர உடம்ப தூக்கிக்கொண்டு நடக்க ஏலாது" என்று சர்மிளா வீட்டுக்குள்ளிருந்து குரல்கொடுக்க, "அப்ப என்ன தான் சொல்லுறடி சர்மிளா என்றார் செந்தாமரை. "எனக்கு இந்த கலியாணம் வேணாம்" வேற யாருக்கும் பார்த்து கட்டிக் கொடுக்கட்டும் என்று சர்மிளா ஒரு போடு போட்டாள்.

சர்மிளாவின் இந்த முடிவுக்கு பின்பு பெருத்த அமைதி. அந்த அமைதியில இராஜன் மாஸ்டர் மெதுவா நடக்கத்தொடங்கினார், "கொஞ்சம் நான் போட்டு திரும்பி வாரேன்" என்று சொல்லிப்போட்டு போனவர், கொஞ்சத்தில கையில ஒரு படத்துடன் திரும்பிவந்து அந்தப் படத்த சர்மிளாட்ட காட்டி "இது யாரென்று தெரியுதா" என்று கேட்க "இந்த தடியனை எனக்கு தெரியாது" என்று படத்தைத் தூக்கி போட்டாள் சர்மிளா.

அமைதியாய் அமர்ந்திருந்த தங்கத்திட்ட கொடுத்து, "இது யாரென்று சொல்லு பார்ப்போம்" என்றார் இராஜன். "இது நீங்கதான்" என்றாள் தங்கம். தொள தொளவென்ற உடம்பு பெருத்த தொப்பையுடன் ஒரு காலத்தில இராஜன் மாஸ்டர் இருந்ததை அந்த படம் காட்டியது.

"இது நான், என்ர போட்டோதான் இது. ஒரு காலத்தில இப்படித்தான் நானும் இருந்தனான்". செந்தாமரையும் சாந்தியும் படத்த வாங்கிப் பார்த்துவிட்டு வாயைப்பிளந்தார்கள். எப்படி எப்படி, என்று எல்லாரும் கேட்கும் பார்வை இராஜன் மாஸ்டர் கண்களில் பாய்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ர வாழ்க்கையிலயும் ஒரு தேவதை வந்தாள். அவள் என்ர மனிசி என்டு நினச்சுப்போடாதேங்கோ" மனுசின்ர அம்மா மலர்விழி தான் அந்த தேவதை. நான் கலியாணம் முடிச்சு வீட்டுக்கு வந்த பிறகு வீட்டுக்கு வந்து போனவை எல்லாரும் என்ர மனுசிய பார்த்து இது என்னடி ஒரு எருமமாட்ட உன்ர தலையில கட்டிப்போட்டினம் போல என்று கதைக்கிற கத என்ர மாமியின்ர காதிலவிழ, ஒரு நாள் தண்ணியெடுக்கிற பைப்படியில பெண்டுகள் இதப்பற்றி கதைக்க, இதென்னடி ஊர் பெண்டுகள் எல்லாம் என்ர மாப்பிள்ளய எருமமாடு, குளுமாடு என்டு சொல்லுவியள், என்ர சொக்கத்தங்கம் மாப்பிள்ளய நான் கெட்டித்தங்கம் மாப்பிள்ளயா மாத்திக்காட்டுறன் என்டு சொல்லி சபதமெடுத்துப்போட்டு வந்த மாமி என்னட்ட கேட்டா. நான் ஒவ்வொரு நாளும் ஒரு சூப் வச்சி கொடுப்பன் தம்பி குடிப்பியளே, "என்ன மாமி இப்பயே இப்படி இருக்கிறன்" "பிறகு சூப்ப கொடுத்து என்னை என்ன செய்யப் போறியள்" என்று கேட்க, "தம்பி நான் தாற சூப்ப ஒரு மாசம் தொடர்ச்சியா குடியுங்கோ" என்று சொல்ல நானும் குடிச்சனான், பிறகு என்ர வண்டியும் வயிறும் வத்தி உடம்பு ஒடுங்கத் தொடங்கியது. "பிறகு நல்ல கராட்டி மாஸ்டர பார்த்து அவையின்ர கிளப்பில சேந்தனான்" என்றார் இராஜன்.

"என்ன சூப்" அது என்றார் சர்மிளாவின் தாய் சாந்தி. "ஒன்னுமில்லை தவசி முருங்கை சூப் குடிச்சு பாருங்க ஊளைச்சதையை ஓடத்துரத்தும்" என்றார் இராஜன். இங்க இராஜன் மாஸ்டர் இந்த புளூடா கதையெல்லாம் யாருக்கும் போய் சொல்லுங்கோ. நான் இங்க ஒன்டும் பட்டிக்காட்டாள் இல்ல, நான் ஒரு டீச்சர். உங்களுக்கு தெரியுமே. எனக்கு எல்லாம் தெரியும். ஊளச்சதையனை கட்டிப்போட்டு டயபட்டீஸ், கொலஸ்ரோல், பிறசர் என்டு மாச மாசம் கிளினிக்குக்க போக இன்னும் பத்து வருசத்தில கைய கால வெட்டிப்போட்டு வீட்ட போடுவினம். பிறகு அந்த அண்டங்காக் கைக்கும் நான்தான் சோறு போடவேணும். அதுமட்டுமே அவருக்கு நான் பிள்ளையும் பெத்துப்போடவேணும் அந்தப்பிள்ளயளும் பண்டிக்கு பிறந்தது உள்ள எல்லா வருத்தத்தோடயும் வந்துவிடும். எது எனக்கு பொருத்தமானது என்று எனக்கு தெரியும். தயவுசெய்து நீங்கள் என்ர விசயத்துல தலை போடாதீங்க" என்றாள். "தங்கச்சி அவனும் பாவம் தானே அவனுக்கும் ஒரு வாழ்க்கை தேவைதானேம்மா" என்றார் இராஜன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய் உனக்கு கண்ணிருக்கா மடையா, என்ர அக்கா தங்கம் நடக்க மாட்டா" அவளுக்கு அவன் வரதன் வாழ்க்கை கொடுப்பானா? "நீ சொல்ல வந்துட்டா என்று மரியாதை இல்லாமல் சர்மிளா கத்தத் தொடங்க, நீயென்ன பொம்பளையே வாய்க்கு வந்தமாரி கதைக்கிற, அவன ஓடு என்டு உசிக் காட்டிப்போட்டு கால முறிச்சி ஆசுப்பத்திரியில போட்டுட்டு அத காட்டி கலியாணத்த குழப்பிப்போட்டு யாரோடு நீ ஓட போற" என்று செந்தாமரை சர்மிளாவுக்கு அடிக்கத் தொடங்க சுத்தியிருந்த சன மெல்லாம் கூடிநிண்டு என்னவாம் என்னவாம் என்று புதினம் கேட்டகத் தொடங்கியது.

கடைசியில சர்மிளாவின் முடிவில மாற்றம் இல்ல என்பதால கல்யாணத்த நிப்பாட்டும் செய்திய மாப்பிள்ள வீட்டுக்கு சொல்லும்படி இராஜன் மாஸ்டருக்கு பொறுப்பு கொடுக்கப்பட்டது.

இராஜன் போக முதல்ல செந்தாமரையுடன் தனிய நின்று ஏதோ பேசிக்கொண்டிருந்தார். சாந்தியும் ஓம் என்று தலையாட்டிக் கதச்சா. பிறகு திடீரென்று ஏதோ தங்கத்திட்ட வந்து ஏதோ கேட்டுப்போட்டு போக தங்கத்தின் கண்களில் ஏதோ மின்னல் வெட்டியது போலிருந்தது. தங்கத்தில் முகத்தில் ஒரு மலர்ச்சி பரவத்தொடங்கியது.

செந்தாமரையும் ராஜனும் நீண்ட நேரம் பெருமாளோடும் வரதனோடும் போனில பேசி ஒரு முடிவுக்கு வந்தவ. குறிச்ச திகதியில கலியாணம் நடக்கும். ஆனா பொம்பள சர்மிளா இல்ல. அவளின்ட அக்கா தங்கம் என்று தீர்மானிக்கப்பட்டது. இராஜன் எல்லாத்தையும் கதைச்சு முடிச்சுப் போட்டு தங்கத்துக்கு முன்னுக்கு செந்தாமரையின் வாசல்படியில நிலத்தில அடிச்சு சத்தியம் செய்ததை வீட்டுக்குள்ளேயிருந்து சர்மிளா எட்டிப் பார்த்தாள். "கலியாணம் முடிஞ்சி நாலு மாசத்தில வரதன்ர உடம்ப மாத்திக்காட்டயில்லை என்றா என்ர வேட்டிய கழட்டி தலையில கட்டிக் கொண்டு ஊருக்க பத்து நாள் நான் தொடர்ந்தும் நடக்கிறன். இது என் தவசி முருங்கையம்மன் மேல சத்தியம்" என்று சொல்லிப்போட்டு இராஜன் வெளிய போறத சர்மிளா பதட்டத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"தவசி முருங்கை தண்ணி குடிச்சா*
*ஊசி போல தேகம் வரும்"*

என்று இதுவரை அமைதியாய் இருந்த தங்கம் சத்தமாய் பழமொழியை சொல்லி சிரித்தாள். வீடே கலகலவென இசைத்தது அவள் சிரிப்பில். அவள் சிரித்துக்கொண்டே முற்றத்தில் நின்ற தவசிமுருங்கையை பார்த்தாள். அந்த தவசிமுருங்கையில் இரண்டு சிட்டுக்குருவிகள் சோடியாய் நின்டு பாடிக்கொண்டிருந்தது. வாழ்க்கை இனி இல்லையென்று வசந்தத்தை தொலைத்தவளாய் எனக்கு தவசிமுருங்கை கொண்டுவந்த தென்றலை அள்ளிப்பருகாமல் இருந்து விடுவேனோ என்று அவள் மனம் அலைமோதியது. நாளும் வந்தது, திருநாளும் வந்தது. வரதனும் வந்தான். தங்கத்திற்கு தங்கம் கொண்டுவந்தான். அதை தாலியாக கொண்டுவந்தான். அன்றும் சிட்டுக்குருவிகள் தவசி முருங்கையில் நின்று கதைபேச அவளும் வரதனும் சிரித்துக் கொண்டே இருந்தார்கள் இல்லற இன்பத்தில்.

*"வீட்டுக்கு ஒரு தவசி இருந்தால்*
*கூட்டுக்குடும்ப குயில் பாட்டு கேட்கும்"*

என்று வரதன் ஊர் முழுக்க தவசி முருங்கை விழிப்புணர்வை செய்து கொண்டிருந்தான். வரதனை எல்லாரும் உறுதிநகர் கராட்டி வரதன் என்றும், ஆணழகன் வரதன் என்றும் அழைக்கும் அழகை கேட்டு தங்கமும் அவள் தாய் சாந்தியும் கொண்டாடி மகிழ்ந்தார்கள். தங்கத்திற்கு மூன்று செல்வங்கள் பிறந்தன. அந்த செல்வங்கள் உறுதிநகர் கட்ட மூகர்களாக வலம்வந்தார்கள், "நாளுக்கொருக்கா தவசியிலை சூப்பு குடிச்சா சஞ்சலம் நீங்கும், இல்லறமெங்கும் மங்களம் பொங்கும்" என்று வாசலில் வசனம் எழுதி போட்டிருந்தாள் வரதனின் மனிசி தங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவை தட்டும் கதை சொல்லி

# நாவலின் காதலன்

நல்ல காலம் பொறக்குது
நல்ல காலம் பொறந்திருக்கு
நீ தான் சாமி உன் வீடுதான் கோயில்
ஊரெல்லாம் காஞ்சி போய்
தெருவெல்லாம் புழுதியாகி,
ஓ முகமெல்லாம் காஞ்சதேனோ.

எப்பத்தான் சாமி ஊருக்கு மழைவந்து
என் வயல்காடு பூக்குமையா
வானமே கோவிச்சி மேகத்த துரத்தினதோ,
நானுந்தான் நாலு நாளா அடுப்பு எரிக்கையில்ல
என் குஞ்சிகளும் பட்டினியா ஊரோடி போனதேனோ.

காடேல்லாம் வெட்டிப்போட்டு கூடுகட்டி போறதென்ன
தின்ன சோறு கொஞ்சம் தாபுள்ள வயிரேல்லாம் பத்துதடி.

சாமி அந்த மரத்திற்கு கீழ இருங்க
வீட்டில ஒன்னுமில்ல அந்த கிணத்தில
தண்ணி கொண்டு வாரன்

மரத்தடிய காட்டுறியே மரமே இல்லையடி
மரத்தையெல்லாம் வெட்டிப்போட்டா
கிணத்தில தண்ணியெங்க இருக்குமுடி
இங்கு வந்து நில்லுதாயே
ஒரு கத உனக்கு சொல்லபோரன்
வீட்டுக்குள்ள மரம் நட்டு ஊருக்குள்ள காடவிட்டு
நீயிருக்க வேனும்புள்ள
யக்கம்மா சொன்ன கத சொல்லிவந்தேன்..

சொல்லுங்க சாமி கேட்கிறன்.

ஒரு ஊரில ஒரு வீடு வீட்டில நாலு பேரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நான் கண்ணன்தான் வந்திருக்கிறன்” என்ன வெட்டுடா ஏலுமென்டா வெட்டுடா, நீ வெட்ட மாட்டா, உனக்கு பயம். நீ தொட மாட்டா உனக்கு பயம். நீ என்ன வெட்டி சரிக்காட்டி நான் இப்ப உன்ன வெட்டி சரிப்பன்” என்று கத்தினான் மயூரன். மயூரனுக்கு இப்ப பதினாறு வயசு” இந்த வருசம் O/L எடுக்க போறான். நல்லா படிப்பான். ஸ்கூலில அவன்தான் சிறந்த மாணவன் என்றும் O/L லில 9A எடுப்பான் என்றும் எல்லாரும் செல்லிக் கொண்டிருக்கினம். ஆனா இப்ப ஒரு கிழமையா இப்படி மாறாட்டமா கதைக்கிறான். என்னதான் செய்யிறது என்று எனக்கு தெரியயில்லை.

நானும் மாலதியும் இந்த வலையூர் கிராமத்திலேயே பிறந்து வளந்தவர்கள். ஒரே ஸ்கூலில படிச்சிப்போட்டு O/L இற்கு பிறகு மாலதி விவசாயத்திலயும் நான் மெக்கானிக் தொழிலிலயும் இறங்கிப் போட்டோம். மாலதியின்ர குடும்பம் எங்கட தூரத்து உறவுக்காரர் என்ற படியால பேச்சுக்கலியாணமாய் எங்கட கலியாணம் நடந்து முடிஞ்சிச்சு, இருபத்தைந்து வருடங்கள் எங்கட இல்லற வாழ்க்கையின்ர செல்வங்களாக மைதிலி மூத்த மகளாகவும், மயூரன் இரண்டாவது மகனாகவும் வலையூர் சித்திவிநாயகர் அருளால் எங்களுக்க கிடச்சதுகள். மைதிலி கெம்பஸில படிக்கிறா. மயூரன் O/L படிக்கிறான். அளவான வருமானம். அளவான ஆசைகளும் கனவுகளும். அழகான குடும்பமாய் வாழ்ந்து கொண்டிருந்த எங்களுக்கு மயூரன் வடிவத்தில புயல் வீசத் தொடங்கியிருக்கு.

“என்னப்பா இப்படியே யோசிச்சுக்கொண்டிருந்தா என்னசெய்யப் போறியள்? இண்டைக்காவது ஒருமாதிரி அவன ஆசுப்பத்திரிக்கு கூட்டிக்கொண்டு போகத்தானே வேணும். அக்கம் பக்கத்தில இருக்கிற சனமெல்லாம் என்ன நடந்திச்சு மயூரனுக்கு இப்பிடி வெறிகாறன் மாதிரி கத்துறான் என்று கேக்குதுகள். என்ன பதில் சொல்லுறது என்றே தெரியயில்ல எனக்கு” எண்டு புலம்பிக்கொண்டிருந்தாள் மாலதி.

மாலதி உறுதியான பெண் என்றத இந்த ஒரு கிழமை மயூரனை அடக்கி வச்சிருக்கிறதில தெரியுது. ஆனா அவனின்ர மனசு சுக்குநூறா உடஞ்சி போச்சு என்றது தான் உண்மை. “நீ மாலதி, முதலில சொன்ன மாதிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசுப்பத்திரிக்கு போக முதலில எங்கட கந்தவேல் ஐயாட்ட கூட்டுக் கொண்டு போவமே",

"சும்மா தேவையில்லாத வேலை பாக்காம ஆசுப்பத்திரிக்கு கூட்டிக் கொண்டு போங்க. பூசாரி, சூனியம் என்று தேவையில்லாத வேல பாத்து என்ர பிள்ளய கொல்லப்போறியளே" என்று மாலதி அழத்தொடங்கினாள்.

"எடியே நீ என்ன கொல்லுவியே, உன்ன நான் கொல்லுவன்டி" என்று மாலதியின் தலையைப்பிடித்து சுவரோட மோதப்போனான் மயூரன். மாலதி தடக்கி கீழ விழுந்து மயங்கினாள். மாலதிய நான் பார்த்தவுடன வந்த ஆத்திரத்துக்க ஓங்கி மயூரன ஒரு உத உதச்சன். அவன் மல்லாக்கா விழுந்தான். விழும்போது பின்பக்கமாக விழுந்தான். தலை பலமாக அடிபட்டது என்று எனக்கு தெரிந்தது. ஒரு பக்கம் மாலதியும் ஒரு பக்கம் மயூரனும் மயங்கிக் கிடக்க ஐயோ என்று குழறி அழுத சத்தத்திற்கு அயலில் இருந்த எல்லாரும் ஓடி வந்தவ.

வந்தவேன்ர உதவியோடு ரெண்டு பேரையும் ஆசுப்பத்திரிக்கு கொண்டுவந்து சேத்தனான். ரெண்டுபேரையும் அவசர சிகிக்சைப்பிரிவில வச்சிருந்தவ. இப்ப என்டாலும் மகள் மைதிலிக்கு வீட்டில நடந்த பிரச்சனய லேசா சொல்லாட்டி அந்தப்பிள்ள என்னத்தான் தப்பா நினைக்கும் என்று நினைச்சிப்போட்டு அவாவுக்கு போன் பண்ணி வரச்சொன்னன்.

காலையில 8 மணிக்கு கொண்டுவந்த ரெண்டு பேரும் இப்பத்தான் கண் முழிச்சருக்கினம் என்று நேர்ஸ் வந்து சொன்னவுடன எனக்கு நின்மதிய கொடுத்தாலும், மயூரனின் பிரச்சனைக்கு எப்படி தீர்வுகாணுறது என்றதிலயே யோசனை ஓடிக்கொண்டிருந்தது.

மாலதிய பெண்கள் வார்ட்டுக்கு முதலில மாத்திப்போட்டதால போய் அவள பாத்தன். அவளுக்கு பெரிசா ஒரு பிரச்சனையும் இல்லையென்று டொக்டர் செல்லிப்போட்டார். சும்மா அதிர்ச்சியில் ஏற்பட்ட மயக்கம் வேறொன்றுமில்ல என்றதால பிரச்சனையில்ல. ஆனா மயூரன் பற்றித் தான் டொக்டர் என்னோட கதைக்கவேணுமென்று சொன்னவராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்னப்பா தம்பி எப்பிடி இருக்கிறான்” என்றாள் மாலதி. “அவனையும் ஆசுப்பத்திரிக்கு கூட்டிட்டு வந்திருக்கிறன். அவன் ஆம்பிளைகள் வார்ட்டில இருக்கிறான். எல்லாம் நோர்மல் ஒரு பிரச்சனையும் இல்லை” யென்று சொல்லிப்போட்டு, டொக்டர சந்திக்க போனன்.

டொக்டர் வேலவன் என்று போட்டிருந்த அறைக்கு முன்னுக்கு அந்த நேர்ஸ் என்ன இருத்திப்போட்டு உள்ளுக்கு போட்டா. எனக்கு முன்னுக்கும் பின்னுக்கும் கனபேர் குந்தியிருந்தவ. “ஏய் மச்சான் என்ற குரல் கேட்டு பின்னுக்கு திரும்பினேன். ஒரு நடுத்தர வயசு பொம்பள என்னப்பார்த்து கண்ணடித்தாள். நான் திடுக்கிட்டு போனேன், திரும்பவும் ஏய் என்ன உனக்கு தெரியலயா” என்று கொஞ்சம் சத்தமாகவே கூப்பிட்டாள். நான் தெரியாதவன் போலிருந்தேன். இது என்னடா புதுப் பிரச்சனை மனம் பதைபதைத்தது. பக்கத்திலிருந்த ஒருவர் “நான் ஆமிக் காரன் ஒப்பிசுல வேலைசெய்யிரன், நீர் பொலிசுக்காரன் ஒப்பிசிலயே வேலை செய்யிறீர்” என்று என்னைப்பார்த்து கேட்டுவிட்டு அமைதி யானார். அப்போது தான் வந்திருந்த இடத்திற்கு மேலே கொழுவியிருந்த போட்ட பார்த்தன். அதில மனநலப்பிரிவு என்று எழுதியிருந்தது. “யாரு மயூரன்ட அப்பா” என்று உள்ளுக்கிருந்து வந்த நேர்ஸ் கேட்டாள். “நான் தான்” என்று எழும்பினன் ”உள்ளுக்கு வாங்கோ” என்றாள் அந்த நேர்ஸ்.

டொக்டர் வேலவன் என்னை நல்லா பார்த்திட்டு “குடிக்கிறநீரே” என்று கேட்டார். “நான் குடிக்க பழகாதவன்” என்றேன், “அப்ப ஏன் மகனுக்கு உதைச்சநீராம்” என்று கோபத்துடன் கேட்டார்.

“இல்ல டொக்டர் அவன் என்ர மனிசிய கொல்லப்பார்த்தான்” என்றேன். “அதற்கு நீர் அவன கொல்லப்பாத்தீரோ, இப்ப பொலிசுக்கு கேஸ் கொடுத்திட்டம், தல பலமா அடி பட்டதால அவன் பிழைக்குறதுக்கு வாய்ப்பு இருக்குமோ என்று இப்ப ஒண்டும் சொல்ல ஏலாது, நீர் குடிச்சுப்போட்டு மகனயும் மனிசியையும் அடிச்சநீர் என்றுதான் இங்க பதிஞ்சிருக்கினம் என்றார் கோவமாக”, நான் அமைதியாக கீழே பார்த்துக்கொண்டிருந்தன். என் கண்களில் கண்ணீர் தாரை தாரையாக ஓடியது. “என்ன இண்டைக்கு உமக்கு ரிமாண்ட் தான், வீட்டில வேறயார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கினம்” என்று கேட்டார். “ஒரு மகள் என்றேன்”. “என்ன அவளயும் கொண்று புதைச்சுப்போட்டீரே” என்றார், “இல்ல கம்பஸில படிக்கிறா” என்றேன். “என்ன படிக்கிறா” என்றார், “டொக்டருக்கு படிக்கிறா” என்றேன். டொக்டர் வேலவனின் முகத்தில் ஆச்சரியம் தெரிந்தது. “என்ன டொக்ருக்கு படிக்கிறாவா எந்த கம்பஸ்” என்றார், “யாழ்ப்பாணம்” என்றேன். “எங்க அவா வந்திருக்கிறாவோ” என்றார். “வருவா விடிய தான் போன் பண்ணி சொன்னான்” என்றார்.

“எக்ஸ்கியூஸ்மி டொக்டர்” என்று சத்தம் கேட்டு திரும்பிப்பார்த்தேன். மைதிலி வாசலில் நின்றாள். “நான் தான் இவரின்ர மகள்” என்றாள். “வாரும்” என்று அழைத்த டொக்டர் வேலவன். கதிரையை காட்டினார், மைதிலி பரபரப்பான முகத்துடன் அமர்ந்தாள். “எந்த பெச்” என்றார். “16வது பச் டொக்டர். இந்த வருசம் பைனல் இயர்” என்றாள்.

கொஞ்ச நேரம் அமைதி நிலவியது. “அப்பா எங்களுக்கு தெய்வம், நான் அப்பாவத்தான் கடவுளா கும்பிடுறனான்”. என்று மைதிலி சொன்னவுடன், “அப்ப எப்படி உம்மட அம்மாவையும் தம்பியையும் இப்பிடி அடிச்சிருக் கிறார்” என்றார் டொக்டர் வேலவன். ஆனால் அவரின்ர குரலில ஒரு அமைதியும் ஏக்கமும் இருந்தது.

“என்னப்பா நடந்தது, பயப்படாம சொல்லுங்கோ” என்றாள் மகள். “நான் ஒரு நாள் கூட என்ர பிள்ளைகளுக்கு அடிக்கிறது இல்ல டொக்டர், இண்டைக் குத்தான் முதலில மயூரனுக்கு அடிச்சனான்” என்றேன்,

மைதிலியின் முகத்தில ஆச்சரியம் தெரிந்தது. “என்னதான் நடந்தது அப்பிடி மயூரன் அடிக்க அவன் ஒரு குழப்படிக்காரன் இல்லையப்பா. “நீங்கள் ஒரு நாளும் அவனுக்கு அடிச்சிருக்க மாட்டியள்” என்றாள் மைதிலி எனக்கு நிறைய பேசன்ஸ் இருக்கினம் மைதிலி. நான் இந்த கேஸ்ச பொலிச டீல் பண்ண சொல்லப்போறன்” என்று சொல்லிப்போட்டு டொக்டர் வேலவன் மளமள வென ஏதோ எழுதினார்.

மைதிலியும் நானும் ஏதுமறியாதவர்களாக நின்றோம். “ஒரு நிமிசம் டொக்டர்” என்று மைதிலி சொன்ன சொல்லைக்கேட்க வேலவன் நிமிர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைதிலியைப் பார்த்தார். "பொலிசுக்கு கொடுக்கத்தான் வேணும் கொடுங்கோ, ஆனா நீங்க ஒரு மனநல மருத்துவரா ஒரு அழகான குடும்பம் எப்படி சிதறிப்போகுது என்ற கதைய கேக்கனும் டொக்டர்" என்றாள். எழுதியதை நிறுத்திய டொக்டர் தன் மணிக்கூட்டைப் பார்த்துப்போட்டு "நாலு மணிக்கு அப்பாவ கூட்டிக்கொண்டு வாங்கோ. அது கொஞ்சம் பிறியா இருக்கும்" என்டு சொல்லிப்போட்டு பைல மூடி ஒருபக்கம் வைத்தார்.

மைதிலி என்ன நேர கென்டினுக்கு கூட்டிக்கொண்டு போய் எல்லாத் தையும் ஒன்றுவிடாமல் கேட்டாள். நான் ஒன்றுவிடாமல் சொல்ல சில விசயங்கள ஒரு சின்ன கொப்பியில எழுதினா, பின்னேரம் 3 மணிக்கு மயூரனையும் வார்ட்டுக்கு மாத்திப்போட்டினம் என்று சொன்னவுடன் வாட்டுக்கு போனோம்.

மயூரன் கட்டிலில் நன்றாக நித்திரையிலிருந்தான். வார்ட்டிலிருந்த நேர்ஸ் "நீங்களே மயூரன் அப்பா" என்றார், ஓம் என்றேன், "பெடியன் அடிக்கடி உங்களத்தான் கேட்டுக்கொண்டிருந்தான். நாவல்பழம் வேணும் என்று கேக்கிறான்" என்றார். "என்ன இது நாவல்பழ காலம் இல்லையே என்று அவரே சொன்னார். "ஓம் என்று தலையசைத்த நான் நாவல்பழ யூஸ். கொடுக்கலாமா" என்று கேட்டேன், ஓ எந்த யூசும் கொடுக்கலாம் என்றார்.

திரும்பவும் கென்டினுக்கு வந்து ஒரு நாவல் யூஸ் பக்கட் வாங்கிக் கொண்டு வந்தன். மயூரன் கண்விழித்து மைதிலியுடன் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தான். என்னைக்கண்டதும் அழுதான். அந்த மேள் நேர்ஸ் அழ வேண்டாம் என்றார். மெதுவாக எழுந்து சாய்ந்திருக்கச்செய்து விட்டு அந்த நாவல்பழ யூசை குடிக்கக் கொடுத்தார். அவன்ர தலையில பலமான காயம் என்பதற்கு ஆதாரமாக தலைமுழுவதும் பன்டேஜ் சுத்தப்பட்டி ருந்தது. யூஸ் குடிக்கும் போதே "இவனுக்கு என்ன பேர் மயூரனா இல்ல கண்ணனா" என்று கேட்டார். நான் மயூரன் என்றேன். "ஓ அப்படித்தான் ரெக்கோட்டில இருக்கு ஆனா தன்ர பேர் கண்ணன் என்டுறான்" என்றார். மைதிலி மயூரனைப் பார்த்தாள், நான் கண்ணன் என்றான். அப்ப ரெண்டு பொலிஸ்காரங்கள் யார் மயூரன் என்டு கேட்டுக்கொண்டு வார்ட்டுக்குள்ள வந்தாங்கள், "வாக்குமூலம் எடுக்க வந்திருக்கிறாங்கள் நீங்க வெளிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போங்கோ" என்றார் அந்த மேள் நேர்ஸ். மணிக்கூட்டைப்பார்த்தாள் மைதிலி. 4 மணியாகியிருந்தது. ரெண்டுபேரும் டொக்டர் வேலவனை சந்திக்க வந்தோம். அவர் எங்களுக்காக காத்திருந்தார்.

"சொல்லுங்கோ எப்படியிருக்கிறார்" தம்பி என்றார். "ஓகே டொக்டர் கதைக்கிறான்" என்றார் மைதிலி. என்ன நடந்தது என்று கேட்டார் டொக்டர். என்ர அப்பா ஒரு மெக்கானிக் அம்மா ஒரு விவசாயி. ரெண்டு பேரும் கஸ்ரப்பட்டுத்தான் எங்கள படிப்பிச்சவை. அப்பா ஒருவிதமான போதையும் பாவிக்கிறதில்ல. எங்கட ஊருக்குள்ளயே அப்பாவ தூயவன் என்று பட்டப்பேர் வைச்சி கூப்பிடுற அளவுக்கு மிக நேர்மையானவர், குறிப்பா அம்மா விவசாயம் செய்யிறதால எப்பையும் மரம், செடி, கொடி, பறவைகள், மிருகங்களோடதான் எங்கட வாழ்க்கை. சின்னவயசில இருக்கும்போதே மரங்களையும், செடிகளையும், கொடிகளையும் பற்றி அப்பா நிறைய கத செல்லுவார். ஒவ்வொரு மரத்தையும் அப்பா தன்ர சகோதரங்கள் என்று சொல்லுவார்" என்றாள் மைதிலி.

மைதிலி இதை சொல்லும்போது டொக்டர் வேலவன் லேசாக சிரித்தார், அந்த சிரிப்பு மைதிலியின் கதையில் அவர் ஆர்வமாக இருப்பதை வெளிப்படுத்தியது. "ஓ அப்படியா என்றவர் என்னைப்பார்த்தார்" நான் ஜன்னலுக்கு வெளியில் நின்ற மரங்களில் சில குயில்கள் வந்துநிற்பதை பார்த்துக்கொண்டிருந்தேன்.

வல்லையூர் சித்திவிநாயகர் கோயில் வளவில ஒரு நாவல் மரம் இருந்தது, அந்த மரம் நாங்க சின்ன வயசில இருக்கேக்க சின்ன மரமா இருந்திச்சு, நாங்க கோயிலுக்கு போகைக்குள்ள அந்த நாவல் மரத்த அப்பா எனக்கும் தம்பிக்கும் காட்டி இந்த மரத்திற்கும் உனக்கும் ஒரு வயசு என்று தம்பிய பார்த்து சொன்னவர், அப்பா எப்பிடி மரங்கள, செடிய, கொடிகள தன் உறவு என்று நினைச்சாரோ நாங்களும் அப்பிடித்தான் நினைச்சோம்.

எங்கட வளவு நிறைய மரங்களும் செடிகளும், கொடிகளும் இருந்ததால ஊரில இருக்கிற எல்லா பறவைகளுக்கும் எங்கட வீட்டில இருக்குற மரத்திலதான் நிறைய கூடுகள், சில பறவைகள் பரம்பரை பரம்பரையாக இந்த மரங்களில குடும்பமாக வாழுதுகள் "என்று மைதிலி சொன்னதும் இன்றஸ்ரிங்" என்றார் டொக்டர் வேலவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இப்போது ஜன்னலுக்கு வெளியில் பறந்துவந்த ஒரு குயில் மரத்தில் நின்று தன் சோடிக்குயிலுக்கு குரல்கொடுக்கும் சத்தத்தைக் கேட்டுக் கொண்டிருந்தேன். ஒரு பெருமூச்சுடன் என்னைப்பார்த்துவிட்டு சொல்லுங்கோ என்று டொக்டர் மைதிலியை ஊக்கப்படுத்தினார்.

"நானும் தம்பியும் எங்கட நண்பர்களும் வல்லையூர் கோவில் நாவல் மரத்தில ஏறி விளையாடாத நாட்களில்ல. அழகான மரமாக அது சடைத்து வளர்ந்தது. நிறைய பூக்கும், நிறைய காய்க்கும், காய்க்கும் பழங்கள் அத்தனையும் இனிக்கும் கனியாக சுவைத்த நாட்கள் அருமையான நினைவுகளாக இப்பையும் இருக்கு.

எங்கட வயசுப்பிள்ளைகளுக்கு அந்த நாவல் மரம் எங்கட தாய்மடியாகவே இருந்திச்சு. பழம் இல்லாத காலத்தில அதில மூன்று ஊஞ்சல்கள் கட்டி ரெண்டு ஊஞ்சலில பெட்டைகளும், ஒரு ஊஞ்சலில பொடியளும் மாறி மாறி விளையாடுவம். அந்த மரத்தில ஏறிவிளையாடாத பிள்ளைகளே எங்கட ஊரில இல்ல. அப்படி எங்களோட விளையாடினதில கண்ணனும் ஒருத்தன். ஆனா எங்களவிட அவன் மூத்தவன், அவன் எங்களுக்கு பெரிய அண்ணா மாதிரி வழிநடத்துவான்.

ஓ... ஓ... சரி என்று கதிரையில நிமிர்ந்து முன் சாய்ந்து அமர்ந்தார் டொக்டர் வேலவன். "பிறகு" என்றார். "அந்த நாவல் மரத்தில இருக்கிற குருவிக்கூடு எத்தனை, வந்துசெல்லும் பறவைகள் எத்தனை, எத்தனை வகையான தேனீக்கள் அங்கு வந்து செல்லும்" இதையெல்லாம் எண்ணி விளையாடுவோம். எங்கட எண்ணிக்கையில் கணக்கும் பெருக்கலும், கழித்தலும், கூட்டலுமாய் இருக்கும்.

தம்பி மயூரன் அந்த மரத்தில "என் அன்பே" என்று ஒருக்கா எழுதியிருந்தான், அப்ப அவனுக்கு 14 வயசிருக்குமென்று நினைக்கிறன். அத வந்து நான் அம்மாட்ட சொல்ல, என்னடா மரத்தில எல்லாம் பேர் எழுதிறியாம் என்டு பகிடி பகிடியாக கேட்டா, ஓ அதுவா என்று சிரித்தான். அப்பா வெளியில மோட்டார் சைக்கிள கழட்டிப்பூட்டிக் கொண்டிருந்தவர. பூட்டிய அந்த சாவியோட உள்ளுக்கு வந்து என்னவென்று கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் அமைதியாயிருந்தோம், என்ன மரத்தில எழுதினவன் என்றார் திரும்பவும். "என் அன்பே" என்று எழுதினேன் என்றான் துணிவோட மயூரன். அப்பா சிரித்துக்கொண்டே திரும்ப போயிட்டார். அம்மா மயூரனை ஒருக்கா முறைத்துப்பார்த்து யாருடா என்றா, யாரு, அவள் தான் என்றான். யாரு என்றா அம்மா, அவள் தான் என் காதலி நாவல் என்றான். அப்பா வெளியிலிருந்து அவன் என்ர பிள்ளையென்றார்.

நானும் தம்பியும் பாடசாலைக்கு செல்லுற காலத்தில தம்பி அந்த மரம் மறையிற வரைக்கும் அத பாத்துக்கொண்டே வருவான். எனக்கே ஆச்சரியமாக இருக்கும். அவ்வளவு தூரம் அந்த மரத்தில அவனுக்கு ஒரு காதல்.

டொக்டர் வேலவன் ஆச்சரியத்தோடு பார்த்தார், அவர் கண்களினோ ரத்தில் ஈரம் கசிந்திருந்ததை நான் பார்த்தேன். மைதிலி தொடர்ந்து சொல்லத்தொடங்கினாள்.

"ரெண்டு கிழமைக்கு முதலில கண்ணனுக்கு வருத்தமென்று கேள்விப்பட்ட நாங்கள்", "ஓ அந்தக்கண்ணனா" என்றார் டொக்டர், "மைதிலி யாரென்றாள்", "அவன் இப்ப இல்லயெல்லோ" என்றார் வேலவன் "நான் ஓம் என்றேன்", "அட அதுவா விசயம்" என்றார். எனக்கு தெரியும் கண்ணனை என்னட்டத்தான் ரீட்மென்டுக்கு வந்தவன், நல்லா டர்க்ட் அடிக்டட்டா போனான், ஏழி ஸ்டேஜில வந்திரந்தா காப்பாத்தியி ருக்கலாம் என்றார், ச்சா முடியாமல் போட்டு என்று சரி சொல்லுங்கோ என்றார்,

"அன்றைக்கு அதிகாலை மூனு மணி இருக்குமாம்" கண்ணன் தாய எழுப்பி தேத்தண்ணி கேட்டிருக்கிறான். தாய் போட்டுக்குடுக்க குடிச்சப்போட்டு, நீ படு நான் வெளிய போய்படுக்கிறன். என்று சொல்லிப்போட்டு வெளிய பாய போட்டுபடுத்தவனாம். காலையில ஐயோ ஐயோ என்று ரோட்டில யாரோ சத்தம் போட்டு குழறுறத கேட்டு கண்ணன்ர தாய் வெளிய வந்தா. கண்ணன்ர மச்சாள் ரேவதி அழுது புரண்டு ஐயோ எங்கட கண்ணன் எங்கள விட்டு போட்டானே என்று குழறியிருக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரே வல்லையூர் சித்திவிநாயர் கோயில சுத்தி நிற்க அந்த நாவல் மரத்திலிருந்து கீழ பொலிஸ்காரர் கண்ணன்ர பொடிய இறக்கினயைாம். அதிகாலையில கண்ணன் அந்த மரத்தில தூங்கி செத்திருக்கிறான். என்றாள் மைதிலி. "நானும் கேள்விப்பட்டு போனேன்" என்றார் டொக்டர் வேலவன், "அநியாயமான சாவு" என்றார். "நீர் வந்தனீரே" என்றார், "இல்ல டொக்டர் எக்சாம் நடநடததால நான் வரயில்ல" என்றாள் மைதிலி. பிறகு நடந்ததை சொல்லுங்கோ அப்பா என்றாள் என்னைப்பார்த்து மைதிலி.

"கண்ணன அடக்கம் செய்துபோட்டு சுடலையிலிருந்து வெளிக்கிடைக் குள்ளயே கனபேர் கதைக்க தொடங்கி போட்டினம், நான் அதற்கு கடுமையா என்ர எதிர்ப்பை தெரிவிச்சனான் டொக்டர், ஆனால் அடுத்தநாள் காலையில ஸ்கூலுக்கு போனவன் திரும்பி வரயில்ல என்றுபோட்டு தேடிப்போகத்தான், சந்தியில நின்ற கந்தசாமி அண்ணன் உங்கட பொடியன பிள்ளையார் கோயில்ல கண்டனான் என்று சொல்ல நேர அங்க போனனான். வெட்டி வீழ்த்தப்பட்ட நாவல் மரத்திற்கு மேலே மயூரன் குந்தியிருந்தான்..., அவன் என்னைப் பார்த்தான். ஆனால் அவனின்ர பார்வை வித்தியாசமாக இருந்தது. நான் பக்கத்தில விளையாடிக்கொண்டிருந்த பொடியள பாத்து யாருடா நாவல் மரத்த வெட்டினது என்று கேட்டன், அது நேற்றிரவே ஊராக்கள் எல்லாரும் சேர்ந்து வெட்டிப்போட்டினமாம் என்றார்கள். நான் நின்று கதைப்பதைப் பார்த்துக்கொண்டிருந்த கந்தசாமி அண்ணனும் வந்திட்டார். ஏன் மரத்த வெட்டினவங்கள் என்று கேட்டன். இந்த மரத்தில கண்ணன்ர ஆவியிருக்குதாம். அது ஊருக்கும் கோயிலுக்கும் கூடாதாம் என்று வெட்டிப்போட்டாங்கள் என்றார் கந்தசாமி அண்ணன்".

"டேய் மடயனுங்களா ஏன்டா மரத்தை வெட்டினீங்கள் என்று கந்தசாமி அண்ணனை நோக்கி சத்தமாய் கேட்டான் மயூரன். நான் அதிர்ந்து போனேன். சாந்தமான மயூரன் ஒரு வெறிகொண்டவனாக மாறியி ருந்தான். இந்த மரத்தில எத்தனை வீடு, எத்தனை கூடு, எத்தனை வாழ்வா தாரம், எத்தனை கூடுகை எத்தனை கொண்டாட்டம், எத்தனை இனிமை எல்லாத்தையும் வெட்டி சரிச்சுப்போட்டியளே" என்று குழறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டிக்கிடந்த மரத்திற்கு மேல தாய்ப்பறவைகள் குஞ்சுகள தேடுறத என் கண்கள் கண்டது. ஊரில எங்கட தோட்டத்துக்கு உதவி செய்யிர தேனீக்களின் வாழ்வாதாரம் இந்த மரத்தில இருந்தது உண்மைதான். எல்லாருக்கும் இந்த புரிதல் இல்லை. நீ வா மயூரன் வீட்ட போகலாம் என்று கிட்ட வந்து தூக்கினன்".

"அவன் எழுந்து நின்றான். கந்தசாமி அண்ணன் தூரத்தில நின்று சற்று கோபமாக மரத்தில செத்தவனின் ஆவி நின்று முனியாக வளர்ந்து நாளைக்கு ஊருக்க பிரச்சனை நடந்தா யார் பொறுப்பு என்றார். நான் தான் கண்ணன், நான்தான் அந்த முனி, ஏலுமென்டா என்ன வெட்டு பார்ப்பம் என்று கத்திக்கொண்டு மயூரன் ஓடி வந்தான். ஒரு மாதிரி அவன தடுத்து வீட்டுக்கு கூட்டிக்கொண்டு வந்தன். ஆனா மயூரனின்ர பிரச்சனை தீரயில்லை" என்று சொல்லத்தொடங்க, அந்த மேள் நேர்ஸ் எங்கட அறைக்குள் நுளஞ்சு மைதிலியை வெளியே அழைத்தார். நானும் டொக்டரும் வெளிய வந்தோம். மைதிலி வெளிய வாங்கில அப்படியே உறைந்து அமர்ந்திருந்தாள்.

"மயூரன் மயூரன்" என்றாள். அதற்கு மேலொன்றும் அவளால் சொல்ல முடியாமலிருந்ததை உணர்ந்தேன். என் கைகளைப்பிடித்த மைதிலி, அப்பா மயூரன் எங்கள விட்டுப்போட்டு போயிட்டான் என்றாள், ஆசுப்பத்திரியோ அதிர்ந்ததை நான் உணர்ந்தேன். என் அலறுதலை எல்லாரும் சுற்றிநின்று பார்த்தார்கள்.

மயூரனின் உடல ஆசுப்பத்திரியிலிருந்து கொண்டுவரும் பொழுது அந்த மரத்தில இருந்த குயில்களைப் பார்த்தன். அந்த ரெண்டு குயில்களும் இப்பொழுதும் கூவிக்கொண்டிருந்தன, அதில் ஒரு குயில் மயூரன் என்று எனக்கு தெரியும். மற்ற குயில் யாரென்று மயூரனுக்கு தெரியும்.

அன்று மாலை மயூரன் நேசித்த மரங்களின் நடுவே மயூரனின் உடல் இறுதி நிகழ்வுக்காக கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவன் உடல் இப்போது நன்றாக வெட்டப்பட்ட கட்டைகளின்மீது வைக்கப்பட்டிருந்தது. அந்த கட்டைகள் அவன் ஆழமாய் நேசித்து "என் அன்பே" என்று காதலித்த அந்த நாவல்மரத்தின் குற்றிகள். மயூரனின் உடல் அன்புக் காதலியுடன் தீயில் சங்கமமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தோள்களை பிடித்த டொக்டர் வேலவன் "இந்த மரணம் கொலையல்ல இது தற்செயலானது என்பதை அனைவரும் ஏற்கிறோம். ஏனென்றால் இன்னுமொரு மரத்தின் காதலன் நீங்க மட்டும்தான் இங்க இருகிறீங்க. உங்கட மயூரனுக்காக ஆயிரமாயிரம் மரங்களின் காதலர்களை இந்த மண்ணில உருவாக்கும் பணியில நானும் உங்களோட கைகோர்க்கிறன்" என்றார்.

இடுகாட்டிலிருந்து வீட்டிற்கு வந்தவன். வாசலில் நின்று வரவேற்ற மைதிலி ஒரு நாவல் மரத்தை முற்றத்தில் மயூரனின் பேரில் நடும்படியாக என்னை அழைத்தாள்.

*மரங்களே எங்கள் சுவாசத்தின்*
*மூச்சுக்களை சுமக்கும் கருவறைகள்*

என்ற நினைவுகளோடு அந்த மரத்தை நட்டேன். வாசலில் பாலை மரத்திலிருந்த ஒரு கூட்டம் புளுனி பறவைகள் ஒன்றாக கீச்சிட்டன. அந்த சத்தம் மயூரனே எங்கள் காதலன் அவன் எங்கே என்று கேட்டது போலிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவை தட்டும் கதை சொல்லி

# ஆடாதோடையும், ஆட்டுக்கல்லும்

நல்ல காலம் பொறந்திருக்கு
நல்ல காலம் பொறந்திருக்கு
நீ தான் சாமி உன்ர வீடு தான் கோயில்

நல்ல காலம் பிறந்திருக்கு நல்ல காலம் பிறந்திருக்கு.
வீட்டோட வந்து நிற்கும் உன் குஞ்சுகள கூப்பிடும்மா,

குஞ்சுகளா சாமி அதுகள் ஊர விட்டு
நெடுந்தூரம் போச்சுதுகள்
காலு வருத்தமுனு காலிக்கு போயாச்சி
முதுகு வருத்தமுனு மூதூருக்கு போயாச்சி
இடுப்பு வருத்தமுனு இளவாளைக்கு போயாச்சி.

நிறுத்து தாயே என்ன!
வருத்தமெல்லாம் வீட்டுக்குள்ள கூட்டி வச்சி
கும்மாளம் அடிப்பதென்ன
ஊரே கூடி இப்படி இடிந்துரைஞ்சி போனதென்ன

வீட்டில மருந்தெடுத்து
ஊருக்க உடம்பெடுத்து
கம்பீரம் காட்டியெங்கும்
தெம்பாக திரிஞ்சி நீங்க
வம்பாக மாட்டி புள்ள
தெம்ப இழந்ததென்ன

ஆட்டுக்கல்ல காட்டுப்புள்ள
அதில ஒரு கத இருக்கு நம்ம
நாட்டுகல்ல காட்டுபுள்ள
அதில ஒரு மருந்திருக்கு

அப்படியா சொல்லுங்க சாமி...

ஒரு ஊரில ஒரு வீடு வீட்டில
நாலு பேரு அந்த வீட்டில
ஒரு கல்லு அதற்கு பேரு ஆட்டுகல்லு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன்டா இப்படி அநியாயம் செய்யுறீங்க? கடவுளே உனக்கு கண்ணே இல்லையா?" என்று பாட்டி கத்த கத்த அந்தக் கல்லை பாட்டியோடு சேர்த்து தூக்கினார்கள் விஜயனின் ஆட்கள். இன்றைக்கு காலையில இருந்து பாட்டி அந்தக் கல்லைவிட்டு எழும்பவேயில்லை. நானும் அம்மாவும், தம்பியும், எத்தனையோ தடவை சொல்லிப்பார்த்திட்டோம். பாட்டி விடுங்க தூக்கிக்கொண்டு போகட்டும் என்று. "உங்களுக்கு என்னடி தெரியும் இந்த கல்லப்பற்றி, என்ர பிச்சைக் காசில மாச மாசம் நான் தந்து முடிக்கிறன். கல்லை தூக்க வேணாம்" என்று பாட்டி கெஞ்ச கெஞ்ச கல்லை தூக்கினார்கள்.

பாட்டியின் அழுகையை பார்த்து எனக்கு மனம் பதைபதைத்து போயிருக்கு. நான்தான் என்னதான் செய்யிறது? அம்மா ஊத்துற கஞ்சிய குடிச்சுப் போட்டு படித்து கொண்டிருக்கிற எனக்கு என்னதான் செய்ய முடியும்? 17 வயசில பார்க்காத துன்பமெல்லாம் பார்த்தாச்சி. கடைசியா இந்த துன்பத்தையும் பார்க்கிறன். என்ர பாட்டிய தள்ளி விழுத்திப்போட்டு அந்தக் கல்ல நாலு ஆம்பளைகள் தூக்கிக்கொண்டு போறாங்கள். ஐயோ யாருக்கும் கண்ணில்லையா? "என்ர கல்லுபோகுதே என்ர கல்லுபோகுதே" என்று என்ர பாட்டி கத்தி கதறி அழுகிறத என்னால தாங்க முடியல.

"ஆட்டுக்கல்ல தரயில்லை என்றா, அப்ப வேறெதுவும் தந்து கழிக்க போறியளே" என்று அம்மாவை பார்த்து அசிங்கமா கேட்டான் விஜயன். பொறுமையிழந்த நான் "உனக்கு இன்றையிலிருந்து சரியா ஒரு மாசத்தில அந்தக் காச நான் தருவன். தராட்டிப்போனா நானே அந்தக் கல்லை எடுத்துக் கொண்டு வந்து உன்ட வீட்ட கொண்டுவந்து தாறன்" என்றேன். "இண்டையோட ஆறு மாசம் ஆகுது. ஒரு மாசத்துல தாரன் என்று இந்தக் கிழவியின்ர புருசன்ட செத்த வீட்டுக்கு வாங்கின 15,000 ரூபா காச கொடுக்க வழியில்ல வக்கில்ல" என்னடி உனக்கு கோபம்வருது என்றான் விஜயன். இவன் இந்த ஊரில எல்லாருக்கும் வட்டிக்கு காசு கொடுக்கிறவன். என்ர தாத்தான்ட செத்தவீட்டு செலவுக்கு ஒருத்தரும் உதவி செய்யயில்லை. கடைசியா பெட்டி எடுக்க இவனிட்ட 15000 ரூபா காசு வாங்கித்தான் செத்தவீடு செய்தநாங்க, 15000 காசுக்கு வட்டியோட 20000 இப்ப வைக்கவேணும் என்றான் விஜயன். "நான்தான் காச தாறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்டு சொன்னானே பிறகு என்னத்துக்கு எங்கட வளவுக்க நிக்கிறயள் தயவுசெய்து வெளிய போங்கோ, காச தராட்டி ஒரு மாசத்தில வந்து கல்ல தூக்குங்கோ" என்று அதட்டினேன். என் அதட்டலை கேட்டு ஒவ்வொரு வராக வெளியேறினார்கள்.

எல்லாரும் போய்விட்டார்கள். அம்மா வாசலில் இருந்து அழுது கொண்டிருந்தா. பாட்டி விழுந்த இடத்திலிருந்து மெதுவாக எழும்பிவந்து "எப்படி அமுதா ஒரு மாசத்துல 20000 ரூபா காச அவனுக்கு கொடுக்கப்போறா. உங்கட அம்மாவுக்கும் காலும் கையும் ஏலாதுடி எண்டு சொல்லிப் புலம்பினா". "நீ அழாத பாட்டி. நான் எப்படியாவது இந்த 20,000 காச அவனின்ர மூஞ்சில தூக்கி வீசாட்டி பாரு" என்றேன்.

"தூக்கின கல்ல கேட்டடியிலேயே போட்டுவிட்டு போயிட்டாங்கள். தூக்கிக் கொண்டு வையுங்கோ" என்றா அம்மா. நாலு ஆம்பளைகளாலயே தூக்க முடியாத அந்தக்கல்ல எப்படி நாங்க தூக்குறது? என்று கூறிக்கொண்டே நானும் கீதனுமாக அந்தக்கல்ல ஒருமாதிரி புரட்டி அந்த வேலிக்கரையில போட்டுவிட்டோம்.

பாட்டி போய்த்திரும்பவும் அந்தக்கல்லுக்கு மேல குந்தியிருந்து வெற்றிலை போடத் தொடங்கினா. என்ர மனம் இருபதாயிரம் எப்படி கட்டப்போறன் என்று யோசிக்கத் தொடங்கியது. எத்தனையோ முறை கடன் வாங்கியிருக்கிறோம். ஆனா கன்ணியமா சொன்ன தேதிக்கு அம்மா எப்படியோ கொடுத்திடுவா. இந்த முறைதான் இப்படி இழுபட்டு கடைசியில இந்தத்கல்லத் தூக்கிக் கொண்டு போற நிலைக்கு வந்துடுச்சி. அம்மா சொன்ன மாதிரி பாட்டி இந்தக்கல்ல கொடுத்திருக்கலாம், ஏன்தான் பாட்டி இவ்வளவு ஆவேசமா இந்தக் கல்ல விடமாட்டேன் என்று சொன்னிச்சோ தெரியலை.

இலையூர் கிராமத்துல இருக்கிற கனபேர் இங்கதான் வருவினம். தங்கட உளுந்து, கடலை ஆட்டிக்கொண்டு போறதுக்கு. அப்பா செத்த பிறகு ஊரில் இருக்கிற கனபேர் இங்க வாரதில்ல. ஆம்பளை இல்லாத வீட்டப்பற்றி வழக்கமா ஊரில ஆக்கள் கதைக்கிற கதை, கட்டுற கதை, எல்லா கதையும் அம்மாவுக்கும் கட்டினதால இந்த ஆட்டுக்கல்லுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப வேலையில்லாம போயிருச்சி. வீட்டுக்கு பால்காரன், தபால்காரன், மீன் விக்கிறவன், கரண்ட் பில் கொடுக்கிறவன் எண்டு ஒரு ஆம்பிளையும் வந்துட்டு போக ஏலாது. எப்படித்தான் அம்மா தனிப் பொம்பளையா மிச்சம் மீதி இருக்கிற வாழ்க்கைய வாழப் போறாவோ தெரியலை.

அப்பா செத்தாலும் தாத்தா இருக்கும் வரைக்கும் கொஞ்சம் ஆறுதலா இருந்திச்சு. இப்ப மூணு பொம்பளைகள். ஒரு சின்ன ஆம்பள. யாருமில்லாத அநாதைகள் மாதிரி இருக்கிறம்.

பத்துப் பதினைந்து வீட்டுக்கு ஏறியிறங்கி எல்லாரையும் கெஞ்சி காலில விழுந்து மன்றாடி இன்சூரன்ஸ் கட்டுறதற்கு சேர்த்து விட்டு பிறகு அவங்கள காசக்கட்ட பண்ணி அதில் கிடைக்கும் வருமானத்த வச்சுத்தான் அம்மா எங்கள காப்பாற்றிக்கொண்டு வாரா. எத்தனையோ முறை அம்மாட்ட கேட்டுட்டன். பள்ளிக்கூடத்த விட்டுப்போட்டு ஏதாவது வேலைக்கு போறன் என்று. ஆனா "நீ நல்லா படிப்ப அமுதா. படிச்சு கெம்பசுக்கு போனியென்றா தம்பிய படிப்பிச்சு நீயும் தம்பியும் நாங்க இல்லாத காலத்திலாவது நல்லாயிருக்கலாம்" என்று சொல்லுவா.

காலும் கையும் ஏலாது என்றாலும் ஊரெல்லாம் சைக்கிள்லதான் ஓடி ஓடி இன்சூரன்ஸ் கம்பெனிக்கு காசு சேர்கிற வேலை அம்மா செய்கிறா. எல்லாரோடையும் வளவளவென்று அம்மா கதைக்கிறதால நல்ல பிரண்ட்ஸ் ஆகிடுவா. அதுதான் அவாவின்ட இன்சூரன்ஸ் தொழிலுக்கு பெரிய உதவி. ஆனால் அதாலதான் அம்மாவுக்கு பிரச்சனையும்.

என்னதான் இருந்தாலும் என்ர பாட்டின்ர பிடிவாதம் எனக்கு பெரிய ஆச்சரியமாய் கிடக்கு. ஒரு பழைய ஆட்டுக்கல்லுக்கு இவ்வளவு பிரச்சனை படனுமா, "ஏன் பாட்டி, இந்த ஆட்டுக்கல்லு என்ன ஒனக்கு சிங்காசனமா, இறங்கவே மாட்டேங்கிற" என்றேன். "அமுதா ஆட்டுக்கல்ல தூக்க யாரும் வரும் வரைக்கும் அதின்ர பெறுமதி நமக்கு தெரியலடி. இன்னைக்கு அத தூக்கவந்த பிறகுதான் அதின்ர பெருமை அடிமனசில இருந்து வெளிய வருது" என்றா பாட்டி.

"என்னதான் கிடக்குது இந்தக்கல்லில? இத கொடுத்துட்டு நான் கெம்பசுக்குப்போய் உத்தியோகம் பார்க்குள்ள ஒரு ஆட்டுக்கல்ல வீட்டுக்கு வாங்கி போடுறதுதானே பாட்டி" என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்க வா அமுதா" என்று என்னை அழைத்த பாட்டி, "ஆட்டுக்கல்ல திருப்பு" என்று சொல்ல நானும் அவாவும் சேர்ந்து அதன் அடிப்பக்கத்தை மேலே திருப்பினோம். திரும்பின பிறகு "கொஞ்சம் தண்ணி கொண்டு வந்து கழுவு பார்ப்பம்" என்றார். நானும் ஆட்டுக்கல்லின் அடிப்பக்கத்த நல்லா கழுவினேன். "இதில பாரு அமுதா அடியில எண்ணமோ எழுதியிருந்துச்சு உங்கட தாத்தா அடிக்கடி சொல்லுவாரு" என்றார்.

"அட பாட்டி இவ்வளவு நாளா இதை நீ சொல்லவேயில்ல. இங்க பாரு இதுல எழுதித்தான் கிடக்குது" என்று அதை வாசிக்கத் தொடங்கினேன். ஆச்சரியம், ஆச்சரியம், பெரிய ஆச்சரியம். ஒரு வரலாறே இந்த ஆட்டுக்கல்லில இருக்குது. "என்னடி எழுதியிருக்கிறாங்க" என்றார் பாட்டி. நான் பாட்டிய பார்த்தன். என் கண்களில் மளமளவென கண்ணீர் ஓடியது. "ஏண்டி அழுகிற" என்றா பாட்டி. அடக்க முடியாமல் வீட்டுக்குள் ஓடி முகத்தை துடைத்து விட்டு சைக்கிள எடுத்துக்கொண்டு நேராக சங்கர் மாமா வீட்டுக்கு போனேன். அவர் ஒருவர்தான் எங்கட ஊரில எங்களுக்கு ஏதும் கஸ்டம் என்றா உதவி செய்யிறவர்.

சங்கர் மாமா இலையூர் டவுனில் ஒரு சிறிய புடவைக்கடை வைத்திருக்கிறார். இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை என்றதால வீட்டிலதான் நின்றார். போய் அவரிட்ட நடந்தது எல்லாம் கூறி எனக்கு பார்ட் டைம் வேல வேணும். பள்ளிக்கூடம் இல்லாத மாலை நேரத்தில சனி ஞாயிறு ஒழுங்கு பண்ணி தாங்கோ என்று கேட்டன். "என்ன அமுதா வாரவருசம் A/L எடுக்க போறா ரீசனுக்கு போகாம வேலைக்கு போனா எப்படி பாஸ் பண்ண போறா" என்று கேட்டார். "இல்ல மாமா கிழமையில மூணுநாள் பின் நேரத்தில வேலை செஞ்சா காணும்". "மணித்தியாலத்துக்கு எவ்வளவு சம்பளம் என்று சொல்லி கேட்டு பாருங்க" என்றேன்.

இலையூர் டவுனில் ஒரு நல்ல புடவைக்கடையில மாமா வேலை ஒழுங்கு பண்ணித்தந்தாவர். நம்மட வீட்டில இருக்கிற இந்த பொக்கிசத்த பாதுகாக்க எத்தனை ஆயிரம் ரூபா வேணுமென்றாலும் உழச்சுக் கொடுக்கலாம் என்று நினைத்துக் கொண்டே வீட்டுக்கு வந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலில் வரும்போதே அம்மாவின் சத்தம் பெரிதாகக் கேட்டது. "நான் அவள வேலைக்கு விடமாட்டன். அந்த விஜயன வந்து கல்ல தூக்கிக்கொண்டு போறதென்றா தூக்கிக் கொண்டு போகட்டும்" என்று புறுபுறுத்துக் கொண்டிருந்தா. நான் சைக்கிள நிப்பாட்டிப் போட்டு முத்தத்திற்கு வர "அமுதா விஜயன வந்து இந்த ஆட்டுக்கல்ல தூக்கிக் கொண்டு போகச்சொல்லுமா" என்றா பாட்டி. "என்னால உன்ர படிப்பு குழம்பக்கூடாது அமுதா நீ ஒருத்திதான் இந்த குடும்பத்திற்கு எல்லாம், போய் சொல்லிப்போட்டு வா. வந்து விஜயன ஆட்டுக்கல்ல தூக்கிக் கொண்டு போக சொல்லு" என்றா பாட்டி.

"எல்லாரும் பேசாம இருக்கணும் நான் படிப்பை விட போறதில்ல. ஆட்டுக்கல்லயும் விடப்போறதில்ல. இந்த ஆட்டுக்கல்லில ஒரு வரலாறு இருக்கு, ஒரு வாழ்க்கை இருக்கு, இது உங்களுக்கு வேனுமென்டா ஒரு ஆட்டுக்கல்லு. ஆனா இது எனக்கு ஒரு பொக்கிசம். நான் ஒரு மாதத்திற்கு அவனின்ர காச கொடுப்பன் அதற்குப் பிறகு கம்பசுக்கும் போவன், "அம்மா நான் இப்படிப் பேசுறத ஒருநாளும் பார்த்ததில்ல, என்றபடியால் என்ன அமுதா நல்லா கதைக்கத் தொடங்கிட்டா" என்றா. "கல்லு பேசினா நான் பேசாம இருக்கேலாது, வந்து ஆட்டுக்கல்ல திருப்பி வாசிச்சுப்பார், என்ன எழுதி கிடக்கு" என்றேன். இப்ப நானும் அம்மாவும் தம்பியும் வாசித்தோம். பாட்டி அமைதியா கேட்டுக்கொண்டிருந்தா.

அம்மாவுக்கு ஆச்சரியம். "ஏன் இத எங்களுக்கு இவ்வளவு காலமா சொல்லல" என்று பாட்டிய பாத்துக் கேக்க "எனக்கு இது தெரியும். ஆனா காலம் வரும்வரைக்கும் காந்திருந்தன்" என்றா பாட்டி. நான் இந்த வீட்டுக்கு மருமகளா வரக்குள்ள உங்கட அப்பாவோட அப்பா இந்த ஆட்டுக்கல்லு நம்மட குடும்பச்சொத்து. இத எந்த கட்டத்திலும் விட்டுறாதம்மா என்று சொல்லி என்னட்ட தந்தாரு" என்றா பாட்டி.

நான் சங்கர் மாமா ஒழுங்கு பண்ணின புடவை கடையில பள்ளிக்கூடம் முடிச்சுப்போட்டு மாலையில ரெண்டு மணித்தியாலம் வேலை செய்யத் தொடங்கினேன். ஒரு நாளைக்கு 500 ரூபா படி ஒரு கிழமைக்கு 1500 ரூபாய் மாசம் ஆறாயிரம் ரூபாய் கிடத்தது. கடைக்கார ஐயா மாசிலாமணி மிகவும் நல்லவர். என்ர குடும்ப கஸ்டத்தையும் தாத்தாவின் செத்தவீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடனை அடைக்கத்தான் படித்துக்கொண்டே வேலை செய்கிறேன் என்பதையும் அறிந்திருந்தபடியால ஒரு மாத வேல செய்து முடிக்கும் போதே நான் கேட்டபடி இருபதாயிரம் ரூபா அட்வான்சா தந்தார்.

இருபதாயிரம் ரூபா காசையும் வாங்கிக் கொண்டு நேர விஜயன் வீட்டுக்கு போய் காச கொடுத்துப்போட்டு வீட்டுக்கு வந்தன். என்னை பின்தொடர்ந்த விஜயன் ரோட்டில வச்சு சைக்கிள மறிச்சு நிப்பாட்டி "ரோட்டில வச்சுத்தான் உனக்கு கேட்கவேணும். நாலு சனம் கேட்கவேணும் உன்ர கதைய" என்று ஏதோ சத்தமா வெறிகாரன் பேசுற மாதிரி பேசத் தொடங்கினான். படிக்கிற பிள்ளைக்கு இருபதாயிரம் காசு கிடைக்குது என்றா அது எப்படி கிடைச்சிருக்குமென்று ஊரு உலகத்துக்கு தெரியாட்டியும் எனக்கு தெரியும் என்றான். ரோட்டில போறவை எல்லாரும் "இதற்கு அந்த ஆட்டுக்கல்ல கொடுத்து போட்டு பேசாம விட்டிருக்கலாம். ஆட்டுக்கல்ல கொடுத்திருந்தா ஏன் இந்தத் தொழிலுக்கு எல்லாம் போக வேணும்" என்றா முன் வீட்டு இராசாத்தி. அம்மாவும் சத்தம் கேட்டு வெளிய வந்திட்டா. பெரிய சண்டை நடக்குது. "ஆட்டுக்கல்லு கேட்டா கொடுத்திட்டு போறது தானே. அது என்ன ஒரு ஐயாயிரமும் வராது அத வைச்சுக் கொண்டு இருபதாயிரம் கடனடைக்க என்ன தொழிலெல்லாம் செய்ய வேணுமே" என்றா பின்வீட்டு பாக்கியம் பாட்டி. எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டேன். அம்மா பொறுமையிழந்து அந்த ஆட்டுக் கல்லின்ர பெருமை உனக்கு தெரியுமாடா என்றா. நான் அம்மாவின் வாயை பொத்தினேன். வீட்டுக்குள் வந்தோம். ஊர்ச் சனங்கள் பெரிதாக சத்தம் போட்டுக் கொண்டேயிருந்தார்கள்.

இன்று மாலை நேரத்தோட இருட்டத் தொடங்கியது. கொஞ்ச நேரத்தில மழை பெய்யத் தொடங்கி இடியும் இடிக்க தொடங்கியது. நான் பாட்டியின் மடியில் படுத்திருந்தன். ஆட்டுக்கல் மழையில் நனைந்து கொண்டி ருந்தது. வேலியோரத்தில் நடப்பட்டிருந்த ஆடாதோடை செடிகளில் விழுந்த நீர், சொட்டு சொட்டாக ஆட்டுக்கல்லின் மீது விழுந்து கொண்டிருந்தது.

என் தலையை தடவி "ஏம்மா அமுதா ஆட்டுக்கல்லில எழுதியிருக்கிறத எப்ப அமுதா செய்யப்போறா? சொல்லுமா எனக்கு" என்றா பாட்டி. நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத சொல்ல முதலில "இந்த ஆட்டுக்கல்ல என்னத்துக்கு எல்லாம் பாவிப்பினம் சொல்லு" என்றேன். "நான் இந்த வீட்டுக்கு மருமகளா வரைக்குள்ள உங்க தாத்தாவோட அம்மா இந்த ஆட்டுக்கல்லில தான் உளுந்தாட்டும், அரிசி இடிக்கும், கடலை ஆட்டும் "வேறென்ன செய்வாங்க, வேற என்னதான் புள்ள இதுல செய்வாங்க" "இல்ல வேற ஒன்னு அவங்க செய்திருப்பாங்க சொல்லு" என்றேன்.

"ஆமா இந்த ஆட்டுக்கல்லில ஆடாதோடைய ஆட்டி அதிலயிருந்து அந்த சக்கய எடுத்து இலுப்பை எண்ணெயில போட்டு காய்ச்சி எடுப்பாங்க. அந்த என்னைய யாரோ வந்து வாங்கிட்டுப் போவாங்கனு சொல்லு வாங்க. நமக்கெல்லாம் அது தெரியாது" என்றார். பாட்டியின் கதையைக் கேட்டுக் கொண்டே அப்படியே நித்திரையாகிவிட்டேன்.

காலை எழுந்தவுடன், அம்மாட்ட சொன்னன் "இன்றைக்கு பள்ளிக்கூடம் போட்டு வந்த பிறகு நானும் நீயும் ஒரு முக்கியமான இடத்திற்கு போக வேணும்" என்று சொல்லிப்போட்டு பள்ளிக்கூடம் போனன். இன்று A/L விஞ்ஞானத்தில் பாக்டீரியாக்களின் உடலியல் தாக்கங்கள் குறித்த பாடத்தில் புதிய மைக்ரோ பாக்டீரியாக்களின் வகைகள் அவை உலகத்தில் ஏற்படுத்தப்போகும் தாக்கங்கள் குறித்து மகேசன் ஆசிரியர் தெளிவாக பல படங்கள், கூற்றுக்கள், உதாரணங்களை வைத்து விளங்கப்படுத்திக் கொண்டிருந்தார். அப்போது புதிய வைரஸ்கள் புதிய பக்டீரியாக்கள் உலகத்தில் வரும்போதெல்லாம் மனிதர்கள் கண்டு பிடித்த மருந்துகள் குறித்த ஒரு ஆய்வுக் கட்டுரையை எழுதிக் கொண்டு வரவேண்டும் என்றார். நான் மகேசன் ஆசிரியரிடம் "சேர் நான் பக்டீரியாவுக்கான ஒரு மருந்தை உங்களுக்கு அறிமுகப்படுத்த போகின்றேன், கட்டுரையையும் மருந்தையும் அறிமுகப்படுத்த ஒரு கிழமை தேவை" என்றேன். அனைவரும் ஆச்சரியத்தோடு என்னை பார்த்தார்கள். நான் மிகவும் உறுதியானவளாக பாடசாலையை விட்டு வெளியேறினேன். மாலை 5 மணிக்கு நானும் அம்மாவும் இலையூர் வைத்தியசாலையின் பிரதம டொக்டர் செல்வநாயகத்தை சந்தித்தோம்.

நான் செல்வநாயகத்திடம் ஆட்டுக்கல்லில் எழுதியிருக்கும் வரலாற்றுக் குறிப்பையும் அதன் அம்சங்களையும் விளங்கப்படுத்தினேன், அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சரியப்பட்டு "மத்திய அரசாங்கத்தின் தொல்லியல் மற்றும் மருந்து பிரிவுக்கு இதை அறிவிக்க முன்பு இந்த மருந்தை நீ அறிமுகப்படுத்து" என்று ஆலோசனை வழங்கினர்,

வீட்டுக்கு வந்து என் வேலியோரத்தை நோக்கினேன். எங்கள் வீட்டு வேலியோரம் எல்லாம் செழித்து வளர்ந்து கிடந்த ஆடாதோடை என்னோடு கதை பேசுவது போலிருந்தது. ஊரில எல்லாருடைய வீட்டிலயும் ஆடாதோடை இருந்தாலும் எங்கட வீட்டு ஆடாதோடையின்ர இலை நல்ல நீளமா பச்சையாய் இருக்கு. அது என்றைக்கோ ஒரு நாள் ஒரு அமுதா வருவாள் என்று அவளுக்காய் காத்திருந்தோம் என்றது போல தலையசைத்தது,

மகேசன் ஆசிரியரும், வைத்தியர் செல்வநாயகம் வழங்கிய ஆலோசனைப்படி ஒரு அழகான கட்டுரையை எழுதி முடித்தேன், நவீன பாக்டீரியாக்களும் நமது கீரைகளும் என்ற தலைப்பில் அந்த கட்டுரை இருந்தது.

ஆட்டுக்கல்லில எழுதியிருந்த யாவற்றையும் ஒன்று தவறாமல் பிரதிசெய்தேன். அதில் எழுதியிருந்ததாவது,

"இது கலியாண பரிசு" என்று தொடங்கும் அந்த குறிப்பில், இந்த ஆட்டுக்கல் திருவாளர் ராஜகுப்பத்தூர் மகாராஜா அவர்களினால் திருவாளர் வெங்கடசலாபதிக்கு பரிசாக வழங்கப்படுகிறது. வெங்கடாசலாபதி மனிதருள் செல்லும் கிருமிகளை அழிக்கக் கூடியதும், மனித தோள்களில் தங்கும் கிருமிகளை அழிக்கக் கூடியதுமான ஆடாதோடைய இலுப்பை எண்ணெயுடன் சேர்த்து இந்த ஆட்டுக்கல்லில இடித்து பின்பு பதமாக காய்த்து மகாராஜாவுக்கு வழங்க வேண்டும். இது அன்புக் கட்டளை. என எழுதியிருந்தது.

கட்டுரையை எழுதிமுடித்த பின்பு "பாட்டி உனக்கு வெங்கடாசலபதிய தெரியுமா" என்று கேட்டேன். "ஓ அவரா அவர்தான் உங்கட தாத்தாவோட தாத்தா, அவரின்ர கலியாண வீட்டுக்கு பரிசாதான் ஆட்டுக்கல்ல மாகாராஜா கொடுத்தாராம், அவரு ஆடாதோடய வெட்டி அத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலுப்பெண்ணையில கலந்து ஆட்டுக்கல்லில ஆட்டிக் கொடுத்த எண்ணைய மகாராணிக்கு கொடுத்ததால தான் அவங்கட மார்பில இருந்து கட்டி மறைஞ்சி போச்சாம், அது வரைக்கும் அந்த கட்டியால மகாராணி தப்பமாட்டாங்க, இறந்திருவாங்க என்று சொன்னாங்களாம். அதற்கு பிறகுதான் மகாராணி உயிர் பிழச்சாங்களாம். அந்த நன்றிக் கடனா தான் மகாராஜா இந்த ஆட்டுக்கல்ல பரிசா கொடுத்தாராம்" என்று கதய சொல்லி முடித்தார்.

"ஏன் பாட்டி இதுவரைக்கும் இந்த கதைய நீ எங்களுக்கு சொல்லல" ஆனா "கத சொல்லுறதுக்கு ஒரு நேரம் வரும், அதுவரைக்கும் சொல்லக்கூடாது என்று பரம்பரை பரம்பரையா சொல்லித்தந்திருக்கிறாங்க, அதுதான் இப்பத்தான் நேரமும் காலமும் வந்தது சொல்லிட்டன்" என்றா பாட்டி.

காலை விடிந்ததும் ஆடா தோடை இலையும் இலுப்பை எண்ணையும் கலந்து அந்த ஆட்டுக்கல்லில் நானும் பாட்டியும் ஆட்டினோம். பச்சை கலருக்கு மிக வாசமாக ஒரு எண்ணை வந்தது. அதை அப்படியே வடித்து எடுத்து ஒரு போத்தலில் எடுத்துக்கொண்டு எனது கட்டுரையுடன் பாடசா லைக்கு சென்றேன். பாடசாலை வாசலில் மிகப்பெரிய வரவேற்பை டொக்டர் செல்வநாயகம் ஆயத்தப்படுத்தியிருந்தார் பல உள்ளூர் மருத்துவர்கள் ஆராய்ச்சி மாணவர்கள் வந்திருந்தார்கள்.

அன்றைய பொது நிகழ்வில் டொக்டர் செல்வநாயகம் தலைமைத்தாங்கி பேசினார். விஞ்ஞானம் இல்லாத காலத்தில் மனிதர்கள் ஆரோக்கியமாக வாழ்ந்த கதை ஒன்றையும் ஒரு வாழ்க்கை முறையும் அமுதா கண்டுபிடித்துள்ளாள். அந்த கதையை இப்போது அவள் சொல்லுவாள் என்றார்.

"இராஜகுப்தூர் மகாராஜாவின் மனைவி மகாராணியின் மார்பகத் திலிருந்த கட்டிக்கு வேலியிலிருந்த ஆடாதோடை சுகம் கொடுத்தது. ஆடா தோடையும் இலுப்ப எண்ணையும் ஒன்றாக கலந்து ஆட்டுக்கல்லில் ஆட்டி என் பூட்டன் அந்த எண்ணெயை மகாராணிக்கு வழங்கி வந்தார். மகாராணி அதை பூசி வர சுகம் பெற்றார். அதற்கு பரிசாக இராஜகுப்தூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாராஜா என் தாத்தாவுக்கு ஆட்டுக்கல்லில் அந்த மருந்தின் வரலாற்றை எழுதி அந்த ஆட்டுக்கல்ல வழங்கியிருந்தார். அந்த ஆட்டுக்கல் இப்பொழுது என் வீட்டில் இருக்கிறது" என்று சுருக்கமாக கூறி முடித்தேன்.

நான் பேசி முடிந்ததும் சபையில் இருந்த ஒரு மாணவன் "எங்கட அம்மாவுக்கு போன கிழமை தங்கச்சி பாப்பா பிறந்திச்சி. அப்பா வேலியில இருந்த ஆடாதோடைய பிடிங்கி அவிச்சவர் அம்மம்மா அம்மாவுக்கு அந்த ஆடாதோடையில உடம்பு முழுக்க ஒத்தரம் கொடுத்தத நான் பார்த்தேன்" என்றான். "ஆடாதோடையில பெண்களின் மார்புகளுக்கு ஒத்தடம் கொடுக்கும் வழக்கம் இருந்ததாலத்தான் வீட்டில ஆட்டுக்கல்லும் வேலியில ஆடாதோடையும் இருந்ததென்றார்" அதிபர் தணிகாசலம்.

கூட்டத்தில் இருந்தவர்கள் எல்லாரும் யாரையோ திரும்பி பார்த்தார்கள். என் பாட்டியை அம்மா கூட்டிக்கொண்டு பாடசாலை மண்டபத்திற்குள் வந்தார். மேடைக்கு அழைக்கப்பட்ட என் பாட்டிக்கு "ஆட்டுக்கல்லை பாதுகாத்த ஆச்சிம்மா" என்ற விருது வழங்கப்பட்டது.

பாட்டியை ஏதாவது பேசும்படி டொக்டர் செல்வநாயகம் கேட்டார். என்னத்த பேசுறது பொம்பள பிள்ளைய வைச்சிருக்கிறவங்க கிழமைக்கு ஒருக்கா ஆடாதோடைய அவிச்ச சுடுதண்ணிய இளஞ்சூடா ஆறவச்சு பொம்பள பிள்ளைகள அதில குளிப்பாட்டினா பிறகெதற்கு பிள்ளை களுக்கு மார்பகத்தில கட்டியெல்லாம் வரப்போகுது என்றார். கூட்டத்தின் முடிவில் வேலிகளில் நட ஆடாதோடை தடிகளை எல்லாருக்கும் நான் வழங்கினேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவை தட்டும் கதை சொல்லி

# தேங்காப்பூ

நல்ல காலம் பொறக்குது
நல்ல காலம் பொறந்திருக்கு
நீ தான் சாமி உன் வீடுதான் கோயில்
நல்ல காலம் பொறந்திருக்கு
நல்ல காலம் பொறந்திருக்கு
வெயில்லேறி போனதென்று
நிழலுக்கு ஒதுங்க வந்தேன்
சூடேறிபோச்சிதெண்டு கூட்டுக்குள்ள வந்தேனம்மா.

ஐயோ என்ன சாமி வயிறெரிஞ்சி
போனவள நிழல் கேட்டு வந்தனியோ...
காடேரி புகுந்தவள குளிர்கேட்டு வந்தீரோ!

வயிருறஞ்சி போனதிற்கு
குடிநீரை தொலைச்சதென்ன
குடிநீரை கொண்டுவந்த அந்த
பூவெள்ளாம் எங்கபுள்ள?

எந்த பூவ கேட்டீங்க சாமி? அந்த பூவா?

அந்த பூ இல்லா வீட்டிலா
நீயிருந்தா எரியுமடி
உன் மடியுமல்லோ கொதிக்குமடி.

அப்படியா சாமி எங்க ?
அத ஒருக்கா சொல்லுங்களேன்சாமி .

நல்ல காலம் பொறந்திருக்கு நல்ல காலம் பிறந்திருக்கு
ஒரு ஊரில ஒரு கிணற்றடி
அந்த கிணற்றடியில ஒரு காஞ்சவாழையும்
குருத்தோலையும் ஒன்னா நிக்குதம்மா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பார்வதி அம்மா கொஞ்ச நாளா, இந்த வெயிலுக்க எப்படித்தான் தண்ணி குடிச்சாலும் சலம் சரியா போகுதில்ல, சில நேரத்தில அப்படி போனாலும் சரியான எரிச்சலாத்தான் போகுது” என்றாள் இராசாத்தி. “எனக்குத்தான் 85 வயசாகுது. சலம்போகைக்குள்ள எரிச்சலா போகுது போகுதில்ல என்றெல்லாம் நான் போய் யாருக்கும் இதுவரைக்கும் ஒரு கதையும் சொன்னதில்ல இராசாத்தி. உனக்கென்னடி ஒரு 45 வயசு வருமா? இந்த வயசில என்னாடி உனக்கு இல்லாத பொல்லாத வருத்த மெல்லாம் வந்திட்டுன்னு சொல்லுரா! போங்கடி நீங்களும் உங்கட வருத்தமும்” என்று சொல்லிக் கொண்டே பார்வதியம்மா தண்ணீர் குடத்தை தலையில் வச்சு நடந்துகொண்டேயிருந்தார்.

பார்வதியம்மா இப்ப தனியாத்தான் இருக்கிறா. ரெண்டு பெடியங்களும் ரெண்டு பெட்டைகளும் அவான்ட பிள்ளைகள். ஒரு பொடியன் யுத்தத்தில குண்டடிப்பட்டு செத்துப்போனான். ஒரு பெடியன் கலியாணம் முடிச்சி குடும்பமா வன்னியூரில் இருக்கிறார். மூத்த பொம்பிள பிள்ளையும் அதே யுத்தகாலத்தில இறந்துபோச்சி. ஒரு பொம்பிளபுள்ள நொச்சி ஊரில குடும்பமா இருக்குது. பார்வதி அம்மான்ர வீட்டடுக்கார ஐயா பத்து வருசத்திற்கு முதலில செத்துப்போனார்.

ஆயிரத்து தொழாயிரத்து எண்பத்து மூன்றாம் ஆண்டு காலத்திலயிருந்து பார்வதியம்மா குடும்பமா வள்ளுவர்புரத்தில தான் இருக்கிறா. ஊருக்குள்ள பெரிய மிளகாத்தோட்டம் செய்தவ என்றா இவையளின்ர குடும்பம்தான். காலப்போக்கில ரெண்டு பிள்ளைகளும் செத்துப் போக, புருசனும் செத்து போக பார்வதி அம்மா எந்த பிள்ளைகளுக்கும் கரச்சல் இல்லாம என்பத்தஞ்சு வயசிலும் தனிய இருக்கிறா. ஆனா சுகமா யிருக்கிறா. எப்படித் தான் மனுசி இப்பிடி இருக்குதோ என்று இராசாத்தி யோசித்துக் கொண்டே முன்னே நடந்து கொண்டிருந்த பார்வதியம்மாட்ட, “அம்மா கொஞ்சம் மெதுவாத்தான் நடங்களேன்” என்றாள்.

“என்னடி, நீங்க இந்த எண்பத்தஞ்சு வயசு கிழவியோட உனக்கு ஒரு குடம் தண்ணிய தூக்கிட்டு நடக்க முடியல. அந்த காலத்தில எங்கட அம்மா எல்லாம் என்பத்தஞ்சு வயசில தலையில நாலு குடம் தண்ணிய வைச்சி கொண்டு கைய வீசி வீசி நடக்கும்” என்று தன்னுடைய வழக்கமான கதைய சொல்லத்தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சரி பார்வதியம்மா என்ன செய்ய? காலம் செய்த கோலம். நாங்க எல்லாரும் நாப்பது வயசிலேயே கிழவியா போனோம். சலம் போகைக் குள்ள எரிஞ்சுக்கொண்டு போகுது எண்டதிற்கு இத்தனை கத சொல்லுறிங்க என்னதான் செய்றது! “என்னடி இது பொல்லாப்பா போச்சி ஒரு கதைக்கு சொன்னா இப்படி கோவிக்கிற” என்றா பார்வதியம்மா.

பார்வதியம்மாவும் இராசாத்தியும் தண்ணி எடுக்கும் இடத்திலிருந்து தங்கட வீட்டு ஒழுங்கைக்கு வந்திட்டினம். முந்திச்சென்ற பார்வதியம்மா கொஞ்சம் நின்று இராசாத்திய திரும்பிப்பாத்தா. இராசாத்தி பின்னுக்கு மெதுவா நடந்து கொண்டிருந்தா. “ஏய் புள்ள இங்க பாரு. இது என்னண்டு தெரியுதா? இது தெரியாதா? இது தேங்காப்பூ கீரை” என்றாள் இராசாத்தி.

“எங்கட ஒழுங்க முழுக்க எல்லா காலத்திலயும் அழகா பூத்து சின்ன இலையா பச்சை இலையா பசுமையா கிடக்கிற இந்த தேங்காப்பூ கீரைய சிங்கள ஆக்கள் “பொல்பலா” என்றுதான் சொல்லுவினம். கிழமைக்கு ஒருக்கா இன்னைக்கு வரைக்கும் தேங்காப்பூ கீரைய அவிச்சி குடிக்கிற வழக்கம் எனக்கு இருக்குது” என்றா பார்வதியம்மா.

“எங்கட அம்மா கூட எனக்கு இத அடிக்கடி சொல்லும். தேங்காப்பூ கீரைய கிழமைக்கு ஒருக்கா அவிச்சி குடியெண்டு சொல்லும். நான்தான் கேக்கிறதில்ல” என்றாள் இராசாத்தி, “நம்ம ஊரில இதுக்கு இன்னொரு பேரும் இருக்குதுடி” என்று பார்வதியம்மா சிரித்துக்கொண்டே சொல்லு பார்ப்போம்” என்றார். இராரசாத்தியிடம். “நீ வேற இத மூத்திர கீரை என்றும் சொல்லுவாங்க” என்றா வெட்கத்தோடு இராசாத்தி. “அதுதான் அதுதான் இதற்கு சரியான பேர்” என்று கூறிய பார்வதியம்மா “ஒரு கிழமைக்கு ஒருக்கா அவிச்சி குடி நல்லா சலம் போகும் “பிறகு எரிச்சல் வயித்துக் குள்ள குத்துது, குடையுது, நோகுது என்று சொல்லமாட்டா”.

இரண்டு நாளைக்கு பிறகு பார்வதியம்மா அதே ஒழுங்கையில இராசாத்தியுடன் தண்ணிக்குடத்துடன் நடந்து வந்தா. “எங்கடி இந்த தேங்காப்பூ கீரைய ஒன்னையும் காணல. மாட்ட வச்சி மேச்சிட்டிங்களா? என்றா. “ஓ.. அதுவா, நீங்க சொன்னத பத்து போருக்கு சொன்னன்” என்றா இராசாத்தி. “ஓ! அப்ப எல்லாருக்கும் இப்ப இதுதான் வருத்தமா?” என்று சொன்ன பார்வதியம்மா ஒரு பழமொழியும் சொன்னா..

“வாரத்துக்கு ஒருக்கா தேங்காப்பூ கீரை வீட்டில கொதிச்சா வயித்தில ஏண்டி மூத்திரம் கொதிக்குது...” என்று சொன்னபடியே பார்வதியம்மா தண்ணிக்குடத்துடன் வீட்டுக்குள் சென்றா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்பறவை

வைதேகியின் இறுதி தீர்மானம் அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்தது. அவள் தனது தீர்மானத்தைச் சொன்ன பின்பு ஒருவரும் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அப்போது தொடங்கிய அமைதி இப்போது காலை வரை தொடர்கிறது. அப்பா அம்மா சின்னவள் ஆச்சி எல்லாரும் காலையிலேயே எழுந்து தங்கட தங்கட வேலையை செய்ய தொடங்கி போட்டினம். ஆனா ஒருத்தரும் தங்களுக்குள்ள பேசிக்கொள்ளவே இல்ல என்ன நடந்திச்சி? அப்படி என்னதான் வைதேகி பாரதூரமா சொல்லிப் போட்டா? என்று ஒரு பக்கம் மனசு சொன்னாலும் வைதேகிய போன்ற ஒரு படிச்ச பொம்பள இவ்வளவு பிற்போக்குத்தனமா இதையெல்லாம் இப்படி கதைப்பா என்று நானும் கூட எதிர்ப்பார்க்கயில்ல.

நானும் வைதேகியும் கலியாணம் முடிச்சி இப்ப மூணு மாசம்தான். வைதேகி ஒரு தனியார் நிறுவனத்தில் கணக்காளரா வேலை செய்யீரா. நான் கோழிக்கடை வச்சிருக்கிறன். இந்த வருமானங்களோட தோட்டம், அப்பாட பெட்டிக்கடையின்ர வருமானம் எல்லாமே ஒரு கூட்டுக்குடும்பத்தின்ட பெரிய முன்னேற்றத்திற்கு அடித்தளமாயிருக்குது. இந்த மூணு மாச காலத்தில வைதேகியின்ற மனநிலை, அவள் மனசில வைச்சிருக்கிற கனவுகள், எதிர்கால திட்டங்கள் எல்லாத்தையுமே கொஞ்சம் கொஞ்சமாக வெளிக்காட்டிக்கொண்டே வந்தவா, அவளின்ட சில கனவுகள் அடையக் கூடிய எல்லைகள் மிக அண்மையில இருக்குமாப்போல தெரியும், சில கனவுகள் கற்பனை பண்ண முடியாத தூரங்களை கடந்து இருக்குமாப் போல தெரியுமா போல இருக்கும். ஆனா அவளின்ட கனவுகள் இந்த மானுடத்திற்கானது, இந்த மண்ணுக்கானது. இனி பிறக்க போகிற ஒவ்வொரு உயிர்களுக்கானது என்றதுதான் உண்மையிலே மகிழ்ச்சியானது.

என்னடா தம்பி இப்படியே யோசிச்சுக்கொண்டிருந்தா வேலைக்கு போறதில்லையே என்று அம்மா போட்ட சத்தத்தில என் நினைவுகள் மணிக்கூட்டை திரும்பி பார்க்க வைச்சது. காலை 9 மணியாகுது. எழுந்து அறைக்குள் சென்றேன். வைதேகி வேலைக்கு போக வெளிக்கிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்தி ருந்தாள். அவளது பார்வைகள் ஏதோ ஒன்றைத் தேடுவது போலிருந்தது. எனக்கு தெரியும் அவள் எதனைத் தேடுகிறாளென்று, "என்னப்பா அந்த புத்தகத்த பாத்தியலே இதிலதான் வைச்சனான். கண்டநீங்களே" என்றாள் வைதேகி நான் நினைக்கிறன் இரவு அப்பா வாசிச்சி கொண்டிருந்தவர், முன் விராந்தையில ஒருக்கா பாருங்கோ என்றேன், அமைதி சற்று கலையத்தொடங்கி வீட்டில கொஞ்ஞசம் கதை சத்தம் கேட்கத்தொடங்கியிருந்தது. வைதேகி புத்தகமே தேடுறியள். இங்க இருக்கம்மா இது அப்பாவின் குரல். "சாப்பாடு எல்லாம் முடிஞ்சிருச்சி. வைதேகி சாப்பிட்டு போட்டு போம்மா. என்றார் அம்மா. "என்ன இன்னும் வைதேகி சாப்பிடலயா" இது சின்னவள் ஆச்சியின் குரல்.

காலை விடிந்தவுடன் இரவின் பக்கங்கள் மெதுவாக கலையத் தொடங் கியிருந்தன என்பதை என் மனது உணரத்தொடங்கியது. நான் கோழிக் கடைக்கும் வைதேகி அவளுடைய அலுவலகத்திற்கும் ஒரே நேரத்திற்கு தான் வழமையா வெளிக்கிடுவோம். ஆனால் ஏதோ இன்றைக்கு பிந்தி விட்டது. "நான் போட்டு வாரன்" என்ற வைதேகி சைக்கில எடுத்துக் கொண்டு வெளிக்கிட அம்மா வழமை போல கேட் வரை வைதேகிய வழி யனுப்பியது. போட்டு வாரன் அத்தை என்று அவள் வழமையாக புன்ன கைத்து கூறி விடைபெறுதலும் என்றும் போல இன்றும் நடைப்பெற்றது.

நான் குளித்துவிட்டு வந்து அவசர அவசரமாக சாப்பிடத் தொடங்கினேன். அப்பா கடையின் பின் கதவை திறந்து கொண்டு வெளியில வந்தவர் என்னை உற்றுப்பார்த்து "ஓ... நிக்கிறியே, நான் நினைச்சன் வைதேகி யோட வெளிக்கிட்டு போட்டாய் என்று. என்ன செய்ய போர ஒரு முடிவ சொல்லிப்போட்டு போ, நீங்கள் புதுக்குடும்பம். என்னதான் இருந்தாலும் வைதேகிய போல ஒரு மருமகள் எங்களுக்கு கிடைச்சதிற்கு நாங்கள் கொடுத்து வைச்சிருக்கிறம், என்றார் அப்பா. சின்னவள் ஆச்சி தன் பங்கிற்கு இதில என்ன பெரிய பிரச்சனையிருக்கு பேசாம ஓம் என்று சொல்லுங்கோ என்றா. யார் வேண்டாம் என்று சொன்னது நீ உன்ர முடிவ சொல்லன் தம்பி என்றா அம்மா. "கொஞ்சம் பொறுங்கோ இன்டைக்கு பின்னேரத்திற்கு என்ர முடிவ நான் சொல்லுரன்" என்ற வார்த்தைகளுடன் நான் வேலைக்கு புறப்பட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரும் ரோட்டில மோட்டர் சைக்கிலில என்ன முந்தி முந்தி ஓடிக்கொண்டிருக்கினம். ஆனா நான் மட்டும் தான் இந்த ரோட்டில சைக்கில போர ஒரு ஆம்பிள. இதுகூட வைதேகியின் வேண்டுதல். அவளின்ர விருப்பம். எத்தனை தியாகங்கள் அவளுக்காக இந்த மூணு நாலு மாசத்தில நாங்க செய்து போட்டம். ஆனா இன்னும் அவள் எங்களிடம் அதிகமா கேட்கிறதில என்ன நியாயமிருக்குது என்றதுதான் என் கேள்வி.

என் சைக்கிள் சில்லுகள் மட்டுமல்ல, என் மனசும் உருளத்தொடங்கியது. ராணி நகரின் ஒரே ஒரு கோழிக்கடை என்னுடையது தான். நிறைய பணம். நிறைய முன்னேற்றம். எல்லாம் இந்த கோழி கடையாலத்தான் வந்தது. வீடு, கார், இத்தனை வசதிகளும் கடந்த 7 வருசத்தில இந்த கோழிக்கடை தந்த வரப்பிரசாதங்கள். ஆனால் கலியாணத்திற்கான பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும் போதே நான் வைதேகியை காதலிக்க தொடங்கி விட்டேன் என்பதை அப்பா அறிந்த பின்பு கொஞ்சம் கோபப்பட்டார்.

அப்பாவும் அம்மாவும் மிகச்சிறந்த பண்பாளர்கள். அந்த சிறிய பெட்டிக்கடைய வைச்சி மிக நேர்மையா உழைச்சி என்னை வளர்த்தவை. உண்மையா வாழுறதைவிட இந்த உலகத்தில நமக்கு வேற ஒரு கடமையும் இல்லை என்றது தான் அப்பாவின் தாரக மந்திரம். இந்த அழகான பண்பான குடும்பத்திற்கு வைதேகிய போல ஒரு மருமகளை அப்பா கனகாலம் தேடிக்கொண்டிருந்தவர். பல இடங்கள்ள பார்த்து சின்ன சின்ன பிரச்சனைகளால கலியாணப் பேச்சு குழம்பியிருந்த நிலையில வைதேகியின்ட வீட்டிலயும், சில விசியங்களில குழப்பம் இருந்ததால அப்பாவுக்கு கொஞ்சம் தடுமாற்றம் இருந்திச்சி. ஆனா நான் வைதேகிய காதலிக்க தொடங்கிட்டன் என்று தெரிந்ததும் அப்பா அப்படியே அமைதியானார். ஆனால் அந்த காதலுக்காக நான் செய்த முதலாவது தியாகத்தை அப்பாவால அவ்வளவா ஏற்றுக்கொள்ள முடியல. கலியாணத்திற்கு முதலில புரையிலர் கோழிக்கடைய நாட்டு கோழிக் கடையா மாத்த வேணும் என்ற வைதேகியின் பிடிவாதத்தை சின்னவள் ஆச்சியை தவிர வேற ஒருத்தரும் ஏற்கயில்ல. ஆனால் அவள் மீது நான் கொண்ட காதலால் அதை செய்யிறதிற்கு ஓம்பட்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ட கடை வாசலில் வந்து நான் கார் நிறுத்தும் அதே இடத்தில என்ட சைக்கில நிப்பாட்டி போட்டு கடைக்குள் நுழைந்தேன். புரையிலர் கோழிக் கடை நாட்டுக்கோழிக்கடையாக மாறின பிறகு ஏற்பட்ட நட்டங்களில் இருந்து கடை இப்ப தான் மாறத்தொடங்கியிருந்தது.

புரயிலர் கோழி பெண்களுக்கு ஏற்படுத்தும் பாதிப்பு குறித்த வைதேகியின் கருத்து உண்மை என்று எனக்கு தெரிந்த பிறகு அவளின் கோரிக் கைகளின் பெறுமதியை நான் உணர்ந்து கொண்டேன்.

"அண்ணன் இண்டைக்கு இருநூற்றி ஐம்பது கிலோ கோழி கொழும்புக்கு அனுப்புற ஓடர் ஆயிரம் கிலோவா அனுப்பட்டாம் என்று போன் பண்ணி னவை என்றான் ராஜ். இருக்கென்ரா அனுப்புங்கோ என்றேன். "அனுப் புரதில ஒரு பிரச்சனையும் இல்ல, கோழி நிறைய இருக்கு" என்றான் ராஜ். ராஜ் மாதிரி 6 பேர் இந்த கடையில் இப்ப வேலை செய்யினம். நாட்டுக் கோழிய புரையிலர் விலைக்கே கொடுக்க கூடிய மாதிரி ஒழுங்குகளை வைதேகி செய்ய தொடங்கக்குள்ள எனக்கே ஆச்சரியமா இருந்திச்சி. அது தான அவளின்ர "ஊர்ப்பறவை" திட்டம். இந்த திட்டத்தில இப்ப எங்கட பிரதேசத்தில நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளில ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாட்டுக்கோழிகள் வளர்க்கினம். எல்லா கோழிகளும் தேடித்தின்னும் கோழிகளாக வளர்க்கிற பழக்கத்தையும் வசதியையும் வைதேகி ஒவ் வொரு வீட்டுக்கும் சென்று வழங்கியிருந்தா. அதால இன்றைக்கு நாட்டுக் கோழிய மாவட்டத் கடந்து வெளி மாவட்டத்திற்கும் அனுப்புற நிலை வந்திருக்கு.

"*என்ன அண்ணன் ஒரு மாரி இருக்கிறியல்*" *என்றான் ரரம்.* "இல்லையடா என்று நான் சொன்னதை அவன் நம்புர மாதிரி என் முகம் இல்லை என்பதும் எனக்கும் தெரிந்தது. என்ன சொல்லப்போறன், ஒரு முடிவ இண்டைக்கு சொல்லியே ஆக வேணும் என்று மனம் அங்கலாய்த்தது. யார் அந்த புத்தகத்த அவளின்ட கையில கொடுத்திருப்பினம்! அந்த புத்தகத்த படிச்சி போட்டு தான் இந்த தீர்மானத்திற்கு அவள் வந்திருக் கிறாள் என்று நினைத்துக்கொண்டு ராஜ் உனக்கு குறிஞ்சாளினியை தெரியுமா என்று கேட்டேன், குறிஞ்சாளினியா, அது யார் என்றான் ராஜ் அதுவா அது ஒரு ஆள் இல்ல அது ஒரு புத்தகம் என்றேன், என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகமா நல்ல பேரா கிடக்கு" என்றான் ராஜ். "சில நேரத்தில புத்தகங்கள் தான் மனித வாழ்க்கையின் திசைகளை திறந்து விடுகின்றன" என்றேன். ராஜ்கு அது புரிந்திருக்க வாய்ப்பில்லை என்று என் மனசு சொல்லிக் கொள்ள எனது தொலைபேசி அடித்தது வைதேகி தான் அழைப்பில.

"என்ன என்னோட
கோபமா,
என்ன செல்லம்
நெடுகளும்
தியாகங்கள்
செய்ய வேண்டியிருக்கா"
என்றாள் வைதேகி.
இல்ல வைதேகி
நான் மட்டுமில்ல
அப்பா அம்மா
சின்னவள் ஆச்சி
எல்லாரும்
உன்னை மருமகளா
இல்ல, ஒரு
மகாலட்சுமியா
நினைக்கினம்.
கலியாணம் கட்டுறமா
புள்ள பெத்தமா
வீடு கட்டினமா
கார் வாங்கினமா
ஊர் சுத்தினமா
பிறகு பிள்ளைய
படிக்க வைச்சமா
அவைய கலியாணம்
கட்டி வைச்சமா
பிறகு பேர பிள்ளைய
பார்த்தமா, பிறகு
செத்து போனமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வாழுர
குடும்பங்களில
இந்த உலகத்தில
நமக்கு இருக்கிற
கடமைய கண்டு புடிச்சி
அதற்காக
உழைக்க தூண்டுர
நீ ஒரு மகாலட்சுமி
என்றேன் நான்.

"இல்ல சின்னவள் ஆச்சி
என்ன நினைச்சிருப்பாவோ
தெரியல. அவ பாவம்
உங்கட வீட்டில
அவாவுக்கு இருக்கிற
அந்த மரியாதைய
நான் இல்லாமலாக்க
போரேனோ தெரியல"
என்றாள் வைதேகி.

சின்னவள் ஆச்சி எங்கட ஊரில இருக்கிற ஆக்களில பழயை ஆள். அவா கலியாணம் கட்டாததால தனி மரமா போட்டா. ஒரு கட்டத்தில அப்பா வோடயும் அம்மாவோடையும் வைச்சிருந்த உறவால எங்கட வீட்டுக்கே குடியிருக்க வந்திட்டா. அவாவுக்கென்று இருந்த ஒரு ஏக்கர் காணியும் ஒரு சின்ன கல் வீடும் போன வருசம் என்ர பேருக்கு எழுதிப்போட்டா. செத்தா என்ன எடுத்து புதைச்சி போடுங்கோ என்று தான் அவா எங்களுக்கு விதிச்சிருக்கிற ஒரு நிபந்தனை. என்ர நினைவுகள் என் மனக் கண் முன்பு ஒருக்கா ஓடி மறைய, "என்ன சத்தத்த காணயில்ல" என்றாள் வைதேகி,

ஒன்றுமில்லை, என்றேன். அப்ப என்ன முடிவு எடுத்திருக்கிறியல் "என்று கேட்டா வைதேகி". என்ன முடிவா இப்படி எத்தனை தடவை நீ கேட்டிருப்ப வைதேகி? செல்லம் காரில கடைக்கு போக வேணாம். சைக்கிலில போங்க உங்கட உடம்புக்கும் நல்லம், இந்த பூமியில இருக்கிற செடி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடி, மரம், பறவைகள், மிருகங்கள் எல்லாத்திற்கும் நல்லம் என்று நீ சொன்னதை கேட்டு நான் கடைக்கு மட்டுமில்ல இப்ப எங்கேயும் காரில போரதில்ல, சைக்கிலில போரது என்ற மகாலட்சுமிக்கு பிடிக்கும் என்றா அததான் நான் செய்ய வேணும். இப்படி எத்தனை முடிவுகள் எடுத்தாச்சி இது என்ன பெரிய முடிவா?" என்றேன்,

"சரி சரி எனக்காக இனி ஒரு தியாகம் செய்யத்தேவை இல்ல. இத மட்டும் செய்யுங்கோ என்றா வைதேகி. "பார்ப்போம்" என்றேன். ஓகே என்று போனை வைத்தாள் வைதேகி.

வேலை முடிந்தவுடன் மீண்டும் சைக்கிலில் வழமையான பயணம். ஆனால் இந்த பயணம் சில மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது போல ஒரு காட்சியை என்ர கண் கண்டது,

எங்கட கடைக்கு பக்கத்து கடை சுகுமார் அண்ணனும் சைக்கில்லதான் வந்திருக்கிறார். அட என்ன இன்றைக்கு சைக்கிலே என்றேன். "என்ன மோகன், உனக்கு தெரியாதே இப்ப கனபேர் உன்ன பார்த்து சைக்கிலில வரத்தொடங்கி போட்டினம்" என்றார் சுகுமார். சில மாற்றங்கள் எப்போதும் மிகச்சிறிய புள்ளியில் இருந்து தான் ஆரம்பிக்கிறது. ஆனால் அந்த சிறிய புள்ளி ஒன்று மிக அரிதாகத்தான் உருவாகுது என்ற நினைவுகளுடன் வீட்டுக்கு புறப்பட்டேன்.

வீதியெங்கும் அமைதி. அந்த அமைதி குறிஞ்சாளினியை திரும்பவும் எனக்கு ஞாபகப்படுத்தியது. குறிஞ்சாளினி புத்தகத்தை வைதேகி வீட்டுக்கு கொண்டு வந்ததிலயிருந்து சின்ன சின்ன மாற்றங்கள். சின்னவள் ஆச்சிய தவிர எல்லாரும் வாசிச்சு போட்டோம்.

எங்கட வீட்ட மட்டும் இருபத்திரண்டு வகையான கீரைகள் இருக்கு என்றா ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு கீரைய சமைக்கலாம். கீரைய பற்றிய ஒரு புதிய பார்வையை குறிஞ்சாளினி ஏற்படுத்த போகுது. ஆனால் வைதேகி போன்றவர்கள் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த குறிஞ்சாலினி ஆதிக்கம் செலுத்தான போகிறது. இப்புத்தகத்தின் சிறிய விசைத்தாக்கம் பெரிய தாக்கங்களை உருவாக்கத்தான் போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு போற ஒழுங்கையை நான் கடந்த போது இப்படியும் உலகத்தில ஆக்கள் இருக்கினம். "புடுங்கி போட்டு துரத்தி போட்டினம்" என்று சந்தனம் ரோட்டில இருந்து என்னை பார்த்ததும் பார்க்காததுமாக சொல் லிக் கொண்டு போனான். ஏன் இவன் என்னை பார்த்து இப்படி கதைக் கிறான் என்பது நான் வீட்டு வாசலுக்கு வந்தவுடன் தெரிந்தது. வழமையாக முற்றத்தில் இருந்து எல்லாரையும் வரவேற்கும் சின்னவள் ஆச்சி அங்க இல்ல.

அப்பா ஒரு மூட்டைய சைக்கிளில கட்டிக்கொண்டு என்னை கடந்து போனார். "எங்க சின்னவள் ஆச்சி என்றேன்". "அவா காலையிலேயே அவான்ர வீட்டுக்கு போட்டா" என்றா அம்மா.

திரும்பி பார்த்தேன். சின்னவள் ஆச்சியும் வைதேகியும் சிரித்த முகத்துடன் கேட்டுக்கு வெளியிலே நின்றார்கள். "என்ன மோகன் வாவென்டா என்ற வீட்டுக்கு ஒருக்கா" என்றா எனக்கு ஆச்சிரியம் நான் எடுத்த முடிவ சொல்ல முதலில இங்க எல்லாம் மாறி போயிருந்தது.

"இரவு சாப்பாடு அங்கதான் வாங்கோ" என்றா வைதேகி. நான் குளித்துவிட்டு சின்னவள் ஆச்சியின் வீட்டுக்கு வந்தேன்.

கடந்த ஒரு வருசமா பாழடைந்து கிடந்த வீடு தூசு தட்டி சாணி போட்டு மொழுகி தூய்மையாக்கப்பட்டு சாம்ராணி புகையுடன் மங்கலம் பொங்கி யது. வாசலில் அந்த பழைய விளக்கு மீளவும் எரிந்து கொண்டிருந்தது.

வைதேகியும் சின்னவள் ஆச்சியும் ஏதோ அந்த சின்ன குசினியில் சமைத்து கொண்டிருந்தார்கள்.

அந்த மாலை மங்கிய வெளிச்சித்தில் சின்னவள் ஆச்சியின் முற்றத்தில் நின்ற சித்தா மரத்தில் இரண்டு குயில்கள் குந்தியிருந்தன. அவை எரிந்து கொண்டிருந்த அந்த விளக்கை பார்த்தவண்ணம் அமைதியாயிருந்தன.

"என்ன மோகன்" என்று என் தோள்களை தொட்ட வைதேகி வானத்தை காட்டினாள். அங்கே ஒரு மெல்லிய நூல் வட்டம் போல் ஒரு நிலவு. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேய்பிறையா வளர்பிறையா என்று தெரியாது எரிந்து கொண்டிருந்தது. நிலவை காட்டிய வைதேகி “பௌர்ணமிக்கு முதலும் பிறகும் இப்படியான மெல்லிய வளைந்த கோடு போல நிலா வலம் வரும்போது யாரும் அதை இரசிப்பதில்லை. அப்படித்தான் சின்னவள் ஆச்சியின் வாழ்வு ஒரு தேய்பிறையின் கடைசி பகுதியாக இருக்கலாம். ஆனால் இந்த காலத்திலும் அவாவின்ர இந்த அழகிய வாழ்க்கைப் பக்கங்களை யாரும் இரசிக்காமல் விட்டு விடக் கூடாது என்பதற்காகத் தான் இந்த முடிவ எடுத்தனான் என்றாள்” வைதேகி.

எனக்கு ஆச்சரியம். “சின்னவள் ஆச்சிக்கு கிடைக்கிற அந்த மாதாந்த அரசு உதவி இரண்டாயிரம் ரூபாயில் இந்த முற்றத்தில் இருக்கும் இலை குழையுடன் அவள் சமைத்து சாப்பிடும் அந்த பொன்னான உணவை, அதன் சுவையை அவா எங்கட வீட்டுக்கு வந்த பிறகு இழந்து போனா? நாம அவாக்கு உதவி செய்றோம் என்றுசொல்லி, அவாவின்ர உடலுக்கு கிடைக்க கூடிய இந்த உயர் ஆரோக்கிய உணவை தட்டி பறிச்சிட்டோம் ஆனபடியாலதான் சின்னவள் ஆச்சி அவ சமைச்சி சாப்பிடக்கூடிய காலம் வரைக்கும் அவாவின்ட வீட்டிலேயே இருந்து சமைச்சி சாப்பிடட்டும் என்ற முடிவுக்கு வந்தனான்” என்றாள் வைதேகி.

என்ன வைதேகி “சாப்பிட வாரியலே” என்ர சின்னவள் ஆச்சியின் குரலில் ஒரு கம்பீரமும் கௌரவமும் இணைந்திருந்தது. அந்த ஓலைக் கொட்டில் குசினியில் கீரை ரொட்டியும் தூதுவளைக் கீரை சம்பலும் சமைத்து வைக்கப்பட்டிருந்தது.

நடுவில அந்த விளக்குடன் மூன்று பேரும் நிலத்தில குந்தியிருந்து சாப்பிடத்தொடங்கினோம். “எத்தனை ஆயிரம் ரூபா கொடுத்தாலும் இப்படிப்பட்ட ஒரு சுவையான உணவை எந்த ஓட்டலும் எங்களுக்கு தர முடியாது” என்றா வைதேகி.

“இனி ஒவ்வொரு இரவும் ஒரு பிறை நிலாவின் கூட்டுக்குள் இரை தேடுவோம்” என்றேன் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை சொல்லிய பின் கதை கேட்டவர்கள் பகிர்ந்தவை

### நாவலின் காதலன்

நாவலின் காதல் என்ற சிறுகதையில் ஈழத்து மக்களின் பேச்சுவழக்கை அதிகம் பயன்படுத்தியுள்ளார் கதையாசிரியர். இக்கதையானது மனிதன் இயற்கையோடு பின்னிப்பினைந்திருந்த வாழ்கையை, நாவல் மரத்தின் மீது மயூரன் கொண்ட காதல் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.

முதலாவது பந்தியிலே கொடுக்கப்பட்ட கவிதையில் இயற்கையின் சீற்றம் மனிதனால் தான் வருகின்றது என்பதையும் அதனால் மனிதனுக்கே அழிவு என்பதையும் பின்வரும் அடிகள் ஊடாக சித்திரித்துக் காட்டி யுள்ளார்.

*"ஊரெல்லாம காஞ்சி போய்*
*தெருவெல்லாம் புழுதியாகி,*
*ஓ முகமெல்லாம் காஞ்சதேனோ.*
*எப்பதான் சாமி ஊருக்கு மழைவந்து...."*
*"நாலு நாளா அடுப்பு எரிக்கையில்லை.."*
*"மரத்தடிய கட்டுறியே மரமே இல்லையடி...."* என்ற கவிதை தொடர்கள் என் மனதை தொட்டு நிற்கின்றது..

கதை சொல்லி கதையை எடுத்து சொல்லும் பாணியானது மிகவும் எளிமையாகவும் கிராம வாழ்வியலை சிறப்பாகவும் வெளிப்படுத் தியுள்ளது. குறிப்பாக அக்கதையில் வரும் பாத்திரங்களுக்கு தமிழ் பெயரிட்டு தமிழ் உணர்வோடு கொண்டு செல்கின்றார் ஆசிரியார். அவ்வப்போது பாத்திரங்களின் உணர்ச்சிகளை உயிரோட்டத்துடன் வெளிக்காட்டியுள்ளார். அதாவது "ஏய் மச்சான் என்ற குரல் கேட்டு... இது என்னடா புதுப்பிரச்சனை...." வாசகர்களின் மனதை தூண்டக்கூடிய வகையில் அமைந்துள்ளது. குறிப்பாக பாத்திரங்களுக்கு இடையே ஆன கேள்வி உரையாடலின் பதிலை சிறப்பான பானியில் "நான் குடிக்க பழக்காதவன்.." என்று கூறுவதற்கூடாக மயூரனின் தந்தை ஒரு சுத்தமான மனிதன் என்பதை நிரூபித்துக்காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பவும் ஒருவர் முகத்தைப்பார்த்து தப்பா எடைபோடும் பழக்கம் நமது சமூகத்தில் தொன்று தொட்டு இருப்பதை இக் கதையில் வைத்தியர் வேலவன், மயூரனின் தந்தையின் முகத்தைப்பாத்து "நீ குடிச்சியா" என்று கேட்பதும் பின்னர் அவரின் மகள் ஊடாக தந்தையின் குணங்களை அறிந்து வைத்தியர் மனம் நெகிழ்வடைவதையும் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

"இந்த மரத்துக்கும் உனக்கும் ஒரு வயசு...." என்ற தொடர்கள் எவ்வளவு ஆழமாக மரங்களை மனிதர்களோடு ஒப்பிட்டு காட்டியுள்ளார். குறிப்பாக பிள்ளையார் கோவிலில் உள்ள நாவல் மரத்தின் மீது மயூரன் கொண்ட காதல் ஆழமானவை, என்பது நம் வாழ்கையில் பேசும் கதையாகும். கண்ணன் நாவல் மரத்தில் தூக்குப்போட்டு இறந்ததையும் அதனால் அவன் ஆவி அந்தமரத்தில் இருக்குமென மூடநம்பிக்கை கொண்ட மனிதர்கள் அம் மரத்தை வெட்டி சாய்த்துவிடுவதும் அதனால் மயூரன் ஏங்கி பைத்திய காரனாகி இறப்பதையும் ஆசிரியர் தற்கால மனிதர்களுக்கு எடுத்துக் காட்டியுள்ளார். இது உண்மையில் நடந்த கதை என்பதை என்னால் உணர முடிகின்றது.

**மோ.திபாகர்.**

## தேனிலை

தேனிலை கதையானது என் மனதை கவர்ந்துள்ளது. அக் கதையில் வரும் பாத்திரங்கள் நிஜத்தில் என்னோடு உரையாடியதை உணர்ந்தேன். பார்வதி அம்மாவை மனதில் வைத்து நான் வாசித்த போது கதை சொல்லி தின்னும் உண்ணி என்னும் இவ் அழகிய தலைப்பை முதலாவது பிரதிபலித்து நிற்கின்றது. அத்தோடு அவர்கள் நேராக நின்று பேசும் பேச்சு வழக்கும் மண் வாசனையும் கவர்ந்து நிற்பதால் வாசகரின் மனதை கதை ஈர்த்து நிற்கின்றது.

அத்தோடு தற்காலத்தின் தேவைக்கும் மனித வாழ்வியலுக்கும் பாடம் புகட்டி நிற்கின்றது. அத்தோடு கிராமிய பின்னணி வாழ்வியலை நிய வாழ்வின் கதை மூலம் மானிட சமூகத்திற்கு புரிய கூடிய வகையிலும் பல சுவை நிறைந்த பாணியிலும் படைக்கப்பட்ட இச் சிறுகதையானது எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றோரை வாசிக்க மட்டுமல்லாது எழுதுவதற்கும் தூண்டி நிற்கின்றது.

அத்தோடு பார்வதி அம்மா நிஜத்தில் எப்படி நடந்தார். என்று நான் பார்த்தேனோ அந்த செயற்பாட்டை கதை வாசித்த போது என்னால் உணர முடிந்தது.

இக் காலத்தில் உலகம் முழுவதும் வந்து மூலிகை, கீரை என நோய் எதிர்ப்பு சக்தியை தேடிக் கொண்டு ஓடும் பயணத்தில் எதிர் நீச்சல் போட்டு ஊர் எல்லாம் வாழ்க்கை நிஜத்தை பார்வதி அம்மா கூறி நிற்பதை இவ் கதை சுமந்து வந்துள்ளது. எனவே இக் கதையானது பலரது வாழ்வில் மாற்றத்தை கொண்டு வருவது மட்டுமன்றி என்னையும் ஒரு மாற்றத்தின் பாதைக்கு வழிகாட்டியுள்ளது.

**கு.டெபோரா..**

**பாலிலை**

பாலிலை என்னும் இக்கதையானது என் மனதைதொட்டது. உண்மை யான வாழ்க்கையுடன் தொடர்புகொண்டுள்ளது. உடலழகு குறைந்து விடும் என்று பலபெண்கள் தாய்ப்பால் பிள்ளைகளிற்கு கொடுப்ப தில்லை. இது ஒரு புது வழக்கமாக நம் மத்தியில் உருவாகி வருகிறது.

தாய்ப்பால் கொடுக்காததினால் தான் பிள்ளைகள் நோயெதிர்ப்பு சக்தி இன்றி பல்வேறுபட்ட நோய்களுக்கு ஆளாகின்றனர். சாந்தி போன்ற வர்களின் வாழ்க்கை அதை வெளிப்படுத்துகின்றது. சங்கவி என்கின்ற பாத்திரத்தின் ஊடாக பசளிக்கீரையின் மகத்துவத்தையும் பயன் பாட்டையும் உணரக் கூடியதாகவுள்ளது.

இறைவனின் படைப்பில் பசளிபோன்ற பசுமையான உணவுகள் எப் போதும் உடலாரோக்கியத்தை தந்து இளமை அழகை குறையவிடாமல் உடலை பாதுகாக்கும். அங்கர், சறலைக் தேடி ஓடத்தேவை இல்லை. பசளிவகையான கீரைகளைதேடி உணவில் சேர்போம். இக் கதையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தாய்மாருடைய வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது எனது நம்பிக்கை.

**நந்தினி மனோகரன்**

## தேங்காப்பூ

*மனக் கல்லறையில்*
*எண்ணிறைந்த*
*வர்ணங்களால்*
*காலத்தின் தேவை*
*உணர்ந்து*

*மனிதனுக்காய் இறைவனால்*
*படைக்கப்பட்ட ஒவ்வொரு*
*இயற்கைக் கீரைகளின் மருத்துவ*
*குணாம்சங்களை*

*மண்ணின் வாசனைகளோடு*
*மனிதர்களுக்கு மனதில்*
*செதுக்கிய ஆசானுக்கு*
*அகமதில் வாழ்த்தி*
*ஆரம்பிக்கின்றேன் என்*
*கருத்தை*

"தேங்காப்பூ" என்ற கதை நூலின் முதல் தலைப்பாக அமைந் திருப்பது மிகவும் சிறப்பு,. காரணம், நாலுவரிக் கவிக்கூடாக தேங்காப்பூ எனும் கதையை நாசுக்காய் ஆசிரியர் நயம்படச் சொல்லிவிட்டார் போல தென்படுகிறது.

அதாவது "எந்தப் பூவ கேட்டிங்க சாமி அந்த பூவா? அந்த பூவு இல்லா வீட்டிலா நீயிருந்தா எரியுமடி, உன் மடியுமல்லோ கொதிக்குமடி." என்ற ஆழ் மனக் கருத்தைச் சிந்திக்க வைத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கதையில் இரண்டு கதாபாத்திரங்கள். ஒன்று பார்வதி அம்மா, அடுத்து ராசாத்தி. இவர்களின் உரையாடல் மூலமாக தேங்காப்பூ கீரையின் மகத்துவத்தின் மருத்துவக் குணத்தை அறிந்தும் அதனை அலட்சியப் படுத்தி ஆரோக்கியத்திற்கு பயன்படுத்தாமல் அவசர உலகில் அலைந்து திரியும் இளைய சமுகத்தினருக்கு பார்வதி அம்மாவின் பாத்திரம் பக்குவ வயதுடன் சுட்டிக்கட்டுகிறது.

ஏனெனில் வீட்டின் முற்றத்தில் கைமருந்து இருப்பதை அறியாமல், விலை கொடுத்து ஆங்கில மருந்தை வாங்க நாடுகின்ற ராசாத்தி போன்றவர் கலுக்கு மூத்திர கீரை முகம் சுழிக்க வைக்கின்றது.

எனவே இன்று, மறந்து மருவிப் போகும் மருந்தாக்கம் மிக்க தேங்காப்பூ கீரை ஒன்றை வெளிச்சத்திற்கு கொண்டு வரும்போது அதனுடைய மகத்துவத்தை பல பத்துப்பேர் பயன் பெற்று ஆரோக்கியமாக வாழ, ஆசிரியரின் தேங்காப்பூ, பார்வதி அம்மாவின் பழமொழியாகிய "வாரத்துக்கு ஒருக்கா தேங்காப்பூ கீரை வீட்டில் கொதிச்சா வயத்தில ஏண்டி மூத்திரம் கொதிக்குது?" என்ற சிந்தனையுடன் என் மனைவி மற்றும் கூடியிருக்கும் என் உறவுகளுக்கும் இக் கதையின் கருப்பொருளைக் கூறி என் கருத்தை முன் வைக்கின்றேன்.

அருட்பணி.ஏ.எஸ்.ரூபன்.

## தங்கத் தவசி

தங்கத்தவசி கதையினை வாசித்து கருத்து கூறுவதற்கு கிடைத்த நேரத் திற்கு இறைவனுக்கும் கதை ஆசானுக்கும் முதற்கண் நன்றியினைக் கூறிக்கொள்கின்றேன். இந்த தங்கத் தவசி கதையினை திரும்பத் திரும்ப வாசிக்க வேண்டும் எனும் ஆர்வத்தை கொடுப்பதோடு வாசகரை ஒரு எதிர்பார்ப்பிற்கு இழுத்துச் செல்வது போன்று அமைந்துள்ளது. அதாவது ஒரு மனிதனின் வாழ்க்கையின் முக்கியமான நிகழ்வே திருமணம். அவ்வாறான திருமணத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கும் வரதனது நிலையினை கதையாசிரியர் அழகாக கூறுகிறார். அதாவது குடும்பமாக கிணற்றில் வீழ்ந்து செத்துப்போனம் என்று பேசியதிற்கு காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவாக இருக்கும் என்பதை பார்க்கும் போது ஒரு குடும்பத்தின் வேதனை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தங்களுக்கு திருமணம் வரும் பொழுது தங்களை அழகுபடுத்துவதற்கும், உடல் நிறையினை குறைப்பதற்கும் பல்வேறுபட்ட அழகுசாதனப் பொருட்களை பயன்படுத்துவதையும் பல்வேறு வகையான மருந்துகளை எடுப்பதையும் இந்தக்கதை சுட்டிக்காட்டுகிறது. "வீட்டுக்கு ஒரு தவசி இருந்தால் கூட்டுக்குடும்பத்தில குயில்பாட்டுகேக்கும்" அதாவது இறுதியில் அரிதாக காணப்படும் "தவசி முருங்கை" இதனை எமது உணவில் சேர்த்துக்கொண்டால் எந்தவொரு அழகுசாதனப் பொருட்களையோ மருந்துகளையோ பயன்படுத்த தேவையில்லை. எமது உடல் நிறையினை குறைத்துக்கொள்வதற்கு செலவே இல்லாத கீரை மருந்தாக "தவசி இலை" உண்டு என்ற உண்மையினை மிகத்தெளிவாக இந்தக் கதை எடுத்துக்கூறியுள்ளது. நண்பர்களே இனி துளி கூட கவலை வேண்டாம். "நாளுக்கொருக்காதவசியிலை சூப்பு குடிச்சா சஞ்சலம் நீங்கும், இல்லறமெங்கும் மங்களம் பொங்கும்" இக்கூற்றிற்கு இணங்க எம் இறைவன் எமக்களித்த சொத்துக்களாகிய இயற்கை கீரைகளை எமது வீடுகளில் வளர்த்துப்பயன் பெறுவோம். ஏனெனில் "உணவே மருந்தாய் இருந்தகாலம் போய் மருந்தே உணவான காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மிகவும் இக்கட்டான காலம் இது.

"கொரோனா" இதுகூட எம்மை இயற்கை கீரைகள் உண்ணும் படி வலியுறுத்தியுள்ளது. இக்கதையாசிரியருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

**தேன்மொழி**

**பச்சரசி**

இச் சிறு கதையானது அழிந்து வருகின்ற பச்சரசி காளான் வகையை மையமாக கொண்டு எழுதப்பட்டதாகும். சாதாரண ஒரு மனிதன் தனது சொந்த காணியை நேசிப்பது மட்டுமல்ல தனது ஊரையே நேசித்து அழிந்து செல்கின்ற நம் நாட்டு பச்சரசி காளான் வகையை பாதுகாப்பதற்காக பாடுபடுகின்றான் என்பதற்கூடாக பச்சரசி காளானின் பெருமையை எடுத்து கூறுகின்றது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகம் என்ற பெயரில் வெளிநாட்டு திண்பண்டங்கள் எம்மை சூழ்ந்து காணப்பட நம் கால்களுக்குள் இருக்கும் உணவுகள் கண்களுக்கு தெரியாமல் அதனை மிதித்து கொண்டு சென்றால் நம் நாட்டு செல்வங் களை மறந்துவிட வேண்டியது தான். இதனையே...

*"எல்லாமே காணா போச்சே*
*என்று நீங்க ஏங்கி கொண்டிருக்கிறீங்க*
*நாம தொலைச்சது*
*நம்மட்ட நாலு பேர் தட்டி பறிச்சது*
*எல்லாமே காணா போச்சி*
*என்று நாம தேடிக்கொண்டிருக்கிறோம்,*
*இப்பக்கூட நேற்று கண்டத இன்னைக்கு காணாம்,*
*முத்ததில நின்றத காணாம்,*
*தெரிவில பூத்து கிடந்தத காணாம்,*
*வேலியோர செல்வங்கள காணாம்..."*
*"வீட்டில இருக்க வேண்டிய செல்வங்கள்*
*இல்லாட்டி நீயிருந்து என்னத்திற்கு..."*

இந்த வரிகள் மிகவும் என்னை கவர்ந்துள்ளது. எம்மை சுற்றி உள்ளதை தொலைத்து விட்டு, அழித்து விட்டு வேறெதையோ நாடி செல்கின்றோம்..

இக்கதையில் "அவர் இருக்ககுள்ள இந்த நிலத்தில் ஒரு விக்ஷத்தையும் போட விட மாட்டார். நிலம் என்ர அம்மா, அவள நஞ்சாக்க விட மாட்டன்" என்ற சொல்லிலிருந்து மண்ணின் புனிதத்தை ஆசிரியர் எடுத்து கூறுகின்றார். மண்ணானது எவ்வளவுக்கு இயற்கையாக காணப்படு கிறதோ அந்தளவிற்கு நம் நாட்டு செடிகளும் முளைக்கும் திறன் கொண்டிருக்கும் என்பதை அறியக்கூடியதாகவுள்ளது.

"பச்சரசி காளான்" பெண்கள் கருவுறுவதற்கு பெரிதும் பங்காற்றுகின்றது என்பது பலரும் அறியாத விடயமே. இன்று இதனைப்பற்றி எழுதுவது மிகச் சிறந்ததாகும். எனவே இச்சிறு கதையானது இன்று சிலரது கைகளில் சென்றடைந்தாலும் பின்னர் பலருக்கு தேவையானதாக காணப்படும்..

**கோகிலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலி

வேலி என்பது ஒருசமூகத்தின் பண்பாட்டை வெளிப்படுத்துவதும், ஆரோக்கியமாக வாழவைப்பதும், இயற்கையோடு இணைந்து வாழ வைப்பதும், வருமானம் ஈட்டிதருவதும், சுத்தமான காற்றைத் தந்து சூழலில் குளிர்ச்சியை ஏற்படுத்தும் என்பதை சுந்தரம் தாத்தாவின் கதை மூலம் அழகாக வெளிப்படுத்தியுள்ளார். கதைஆசான்.

வேலியில் கைவைத்தபோது அவர்பட்ட வேதனையும் வேலியை சரித்தபோது அவர் உயிரும் பிரிந்தது என்பதும் என்னை மிகவும் கவர்ந்த உன்னத இடமாகும். அது கண்ணீர் வரவைத்த தருணம். இக்கதையை வாசித்த போது இடையே நிறுத்தி விட்டு தனிமையில் அமர்ந்து நீண்ட நேரம் மௌனமாக இருந்து பின்பே வாசித்துமுடித்தேன்.

சுந்தரம் தாத்தாவின் மூலம் வேலியின் பெருமையை உணர்த்தியதோடு ஒருவேலி அழிந்து போகுமானால் அந்த இனமும் அழிந்து போகும் என்பதை இக்கதை தாங்கி நிற்கிறது. மற்றும் உயிர் வேலிகளை அழிக்க துடிக்கும் குமார் போன்ற நபர்களுக்கு இதுகுறித்து யோசிக்க தோன்றும்.

எல்லோருடைய வாழ்க்கையிலும் பலகதைகள் உண்டு. அதை வெளிப் படுத்தும் தன்மை சிலருக்கு மட்டுமே உண்டு. சிலசமயங்களில் கற்பனை கதை கூட சிலரது வாழ்க்கையின் நிஜமாகும்.

சுந்தரம் தாத்தாவின் கதை மூலம் அதே கொள்கையில் வாழ்ந்த எனது சுப்பிரமணியம் தாத்தாவை ஞாபகப்படுத்திய உங்கள் சிறுகதைக்கு நான் தாழ் பணிகிறேன். என் தாத்தாவின் காலத்தோடு முடிந்துவிட்டது தோட்ட வேலைகளும், வேலி பராமரிப்பும் என்று நினைத்தேன்.... இல்லை யோசுவா என்னும் நாமம் கொண்ட ஒரு மனிதர் இருக்கிறார். நாம் மறந்து போன எமது பண்பாட்டை ஞாபகப்படுத்தி எம்வாழ்க்கைப் பயணத்தில் எம்மோடு பயணிக்க.......

**S.மதிவதனி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலி

கதையாசிரியர் வண.யோசுவா அவர்களின் குறிஞ்சாளினி என்ற சிறுகதை தொகுப்பு வசிக்கின்ற வாய்ப்பு கிடைத்தது. இத்தொகுப்பு ஆசிரியரின் அனுபவங்களில் இருந்து ஒவ்வொரு கதையும் பிறந்திருப்பதை வாசிக்கும் போது உணர்ந்து கொண்டேன். அத்தோடு மொழி நடை வாசிக்க வேண்டும் என்கிற ஆர்வத்தை தூண்டுவதோடு எவருக்கும் இலகுவாக புரிந்து கொள்ளுமளவிற்கு இருக்கிறது. இதுவே அவருடைய கதைகளுக்கு பலமாக இருக்கிறது. இதில் "வேலி" என்கிற சிறுகதை என்மனதை மிகவும் தொட்டதாக இருக்கின்றது. இந்த கதையினை படிக்கும் போது கதையின் நாயகன் வேலிக்காக உயிர்கொடுத்த உத்தமன் கதையின் முடிவில் காற்றோடு கலந்தாழும். சுந்தரம் தாத்தா சீதேவி சாணத்துல போட்டவிதை அவர் உயிரா நினைக்கிற வேலியில விருட்சமாக எப்போதும் வாழவேண்டும் என்று எனக்கு தோன்றுமளவிற்கு உணர்வு பூர்வமாக இருக்கின்றது.

வேலியே பயிரைமேயலாமா? என்பது முதுமொழி ஆனால் இக்கதையில் கதாசிரியர் சொல்லாமல் சொல்கிறார் இப்போது வேலியே விவசாயிகள் பொருளாதாரத்தை மேய்கிறது என்று.

மரம், செடி, கொடி என்று உயிருள்ள தாவரங்களால் அமைக்கிற உயிர் வேலி நிலத்திற்கு எவ்வளவு முக்கியம் என்பதை சுந்தரம் தாத்தாவின் மௌனமான மரணம் உணர்த்துகிறது.

எல்லாம் முடிந்தது என்பதை உணர்ந்த சுந்தரம் தாத்தா என்னடா காந்தா எல்லாத்தையும் வெட்டி சரிக்கிறியா??? என்கிற ஏக்கம் நிறைந்த வார்த்தை என் மனதை மிகவும் உணர்வு ரீதியாக தொட்டிருக்கிறது.

நாகரீகம் என்கிற போர்வையில் சிக்கிக் கொண்ட நாம் மீண்டும் வர வழியிலிருந்து அந்த வாழ்க்கைக்கு நம்மை பழக்கப்படுத்திக் கொண்டதால் அந்த பாதை தவறாமல் உறவுகளை இழந்தும் நடக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாராக இருக்கின்றோம் என்று நினைக்கும் போது சற்றுநகைப் பாகத்தான் இருக்கின்றது எனக்கும்.

P. உதயசாந்தினி

## ஆடாதோடையும் ஆட்டுக்கல்லும்

இக்கதையின் கதை ஆசிரியருக்கு ஒரு மிகப்பெரிய றோயல் சல்யூட் அடித்தவராக எனது கருத்துரையை தொடங்குவதில் பெரும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இக்கால இளம் தலைமுறையை சார்ந்த நான் இக்கதையின் தலைப்பைப் படிக்க ஆரம்பிக்கும்போது" நுனிப்புல் மேய்வது போல" படித்துவிடலாம் என்றே ஆரம்பித்தேன். ஆனால் ஆசிரியர் இக்கதையில் ஐந்தாம் வரியில் ஏதோ ஒன்றை குறிப்பிட்டு நிச்சயித்து கூறும் போது ஆகா இதற்குள் ஏதோ ஒன்று இருக்கின்றது என்று ஆர்வத்துடன் ஆரம்பித்தேன். ஆக்கப் பூர்வமாய் படிப்பதற்கு

*"ஆட்டுக்கல்ல காட்டுபுள்ள*
*அதில ஒரு கத இருக்கு நம்ம*
*நாட்டுக்கல்ல காட்டுபுள்ள*
*அதில ஒரு மருந்திருக்கு"*

ஆகா! எத்தனை அழகு? ஆசிரியர் கிராமிய வாசனையுடன் மண்வாசனை ததும்பிய இலகு நடையில் இளைய தலைமுறைக்கு பழையகால ஆரோக்கிய வாழ்க்கைமுறை, பெண் தலைமை தாங்கும் குடும்பம், வறுமையில் வாடித்தவித்து கடனுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் குடும்பத்தின் நிலைமை, வறுமையில் படித்துக் கொண்டிருக்கும் இளம் சமூதாயத்தின் எதிர்காலத்திலும் மூதாதையாரின் அன்பும் அரவணைப் பும் ஆணில்லா குடும்பத்தில் சமூதாயத்தின் பார்வை என்ற ஒரு மிகப்பெரிய வாழ்கை சவாலையே ஆசிரியர் இச் சிறுகதையின் ஊடாக விளக்கி காட்ட முனைவதன் மூலமாக அவரின் எழுத்தாற்றலும் மொழித் திறனும் எல்லோருக்கும் புலனாகின்றது. கிராமப்புற ஆரோக்கிய வாழ்க்கை முறையில் மறைக்கப்பட்ட மர்மத்தை சொல்லியிருப்பது எனக்குள் விடுபட்டுப் போன பழைய நினைவுகளை கண்முன்னே பளீர் என்று குறுக்கிட செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காலங்களில் வீட்டுக்கு வீடு தாத்தா, பாட்டிகள் இருப்பார்கள். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை யாருக்கு எந்த நோய் என்றாலும் அதற்கான மூலிகைகளைக் கொண்டு கை வைத்தியம் செய்தே குணப்படுத்தி விடுவார்கள். ஆனால், இன்று அநேக வீடுகளில் தாத்தா பாட்டிகளே இல்லை. பணம், வேலை என்று பிள்ளைகள் நகர வாழ்க் கையைத் தேடிச் சென்றுவிட்டதால் தாத்தா, பாட்டிகளின் முக்கியத்துவம் இன்றைய குழந்தைகளுக்கு தெரியாமல் போய்விட்டது.

இன்று 60 சதவீத குழந்தைகளுக்கு தாத்தா பாட்டியின் பாசம், அரவணைப்பு கிடைப்பதில்லை. சின்னத் தும்மல், தலைவலி வந்தால் கூட இன்று உடனே டாக்டரிடம் தூக்கிச்சென்று விடுகிறார்கள். ஆனால், அந்தக் காலத்தில் தலைவலி முதல் பிரசவம் வரை வீடுகளிலேயே கை வைத்தியத்தால் பார்த்திருக்கின்றனர்.

வீட்டில் வளரும் கீரைகளைப் பறித்து உரல், அம்மியில் அல்லது *ஆட்டுக்காலில் வைத்து அரைத்து கசாயம்* போட்டு கொடுக்க இன்று பாட்டிமார்கள் இல்லை. கஷாயம் குடிக்க மறுக்கும் பேரனை ஓடிப் போய் பிடித்து மடியில் உட்கார வைக்க தாத்தாக்களும் இல்லை. பாட்டிகளும் இல்லை. ஆனாலும் அவர்கள் குறையைப் போக்க அதிசய மூலிகை இருக்கிறது நம்மிடம். அரிய மூலிகைகள் ஆயிரம் உண்டு அதிலும் அரிதானதே ஆடாதோடை

*"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்*
*வளிமுதலா எண்ணிய மூன்று".*

என்ற வள்ளுவன் மேற்கூறிய வாதம், பித்தம், கபம் போன்ற அனைத்து நோய்களுக்கும் மூலமருந்தே ஆடாதோடை." ஆடாதோடை இலையும் ஐந்து குறுமிளகும் சாப்பிட்டால் ஆடாத உடலும் ஆடும் பாடதகுரலும் பாடும்" என்ற பழமொழி உண்டு" இது முற்றிலும் உண்மை. சிகரம் தொட்ட சித்த வைத்தியம் ஆடாதோடை இதயநோய், நுரையீரல் மார்பக புற்றுநோய், கபம் சார்ந்த அத்தனை நோய்க்கும் அருமருந்தே ஆடா தோடை. விஞ்ஞான அசுரவேக வளர்ச்சியால நாம் நமது சமையலுக்கு பயன்படுத்தி வந்த ஏராளாமான பொருட்களை மறந்து விட்டோம். அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மையானதே இந்த ஆட்டுக்கல். இந்த மறைக்கப்பட்ட பொருளையே ஆசிரியர் தலைப்பாக பயன்படுத்தியது வியப்பூட்டச்செய்கின்றது. ஆரோக்கியத்தை காத்திட ஆட்டுக்கல்லே முதன்மையானது என்று ஆசிரியர் கூறுவதில் ஐயமில்லை. கதையில் காணப்படும் விடா முயற்சியும் பாட்டியின் அழுகையுமே இவ் ஆட்டுக்கல்லின் முக்கியத் துவத்தை காட்டுகின்றது. தினம் தினம் குழவியிடம் இடிபட்டாலும் விதம் விதமாய் ருசியான ஆரோக்கிய உணவு, மருந்து வழங்குவதில் ஆட்டுக் கல்லுக்கு இணையாக ஒன்றுமில்லை. அது மட்டுமில்லாமல் இளைய தலைமுறையான அமுதா, ஆடாதோடை ஆட்டுக்கல்லின் முக்கியத் துவத்தை அறிந்தவுடனே அவள் உள்ளத்தின் குமுறலை ஆசிரியர் கூறியிருப்பது வியப்பூட்டுகிறது. அமுதா அதற்காகவே கடன் பட்ட விஜயனிடம் தன் நிலமை அறிந்து வீரமாகப் பேசுவதும் அதற்காக பாடசாலை விடுமுறை நாட்களில் வேலைக்கு போனதும் மனதினை உருக்குலைத்து விட்டது. இக்கதையின் மூலமாக ஆடாதோடையையும் ஆட்டுக்கல்லின் முக்கியத்துவத்தையும் ஆசிரியர் சிறப்பாக கூறியிருக் கின்றார்.." ஆட்டுக்கல் மருந்துக்கு மட்டுமல்லாது ஆரம்ப காலங்களில் "மழைமானியாகவும்" பயன்பட்டது என்பது சிறப்பம்சமே.

*" அசைபோட்டு பார்க்கும் மணம்*
*உன்னை நினைத்து*
*அந்நாளும் வரும் அதுவரையில்*
*அமைதி காத்திடு*
*அன்புடனே உனை தூக்கி*
*அடுக்களை வைப்பர் அவமதியாய் நினையாதே*
*என்றும் வெகுமதி நீயே"*

உங்களுக்கு பயன் இல்லை என்றாலும் பகிருங்கள். காரணம் பலருக்கு இவையெல்லாம் என்னவென்று தெரியாது.

**சுபாகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரிலை

ஆசிரியரின் உயிரிலை எனும் கதையினை வாசிக்கும் வாய்ப்பு பெற்றதை எண்ணி என் மனம் நெகிழ்வடைகின்றது. இக்கதை ஆசிரியர் தனது வாழ்க்கை அனுபவத்தை கதை மூலமாக எம்முடன் பகிர்ந்துள்ளார் என்பதை இக்கதையை வாசித்ததன் மூலம் என்னால் உணரமுடிகின்றது. தனது வாழ்க்கையில் கிடைத்த ஒருமிகப் பெரிய வெற்றிக்கு ஒரு குளமும் அக்குளத்துடனான வாழ்க்கையும் தான் காரணம் என அவர்கூறியுள்ளார். சிலருக்கு தமது வாழ்க்கையில் மறக்கமுடியாத நிகழ்வுகள் நடந்திருக்கும். அதேபோல் தான் இக்கதை ஆசிரியரும் தன்னால்மறக்கமுடியாத நிகழ் வொன்றை நம்முடன் பகிர்ந்துள்ளார். உயிரிலை என்னும் இக்கதை உண்மையாகவே என் உயிரின் உணர்வுளை தட்டி எழுப்பியுள்ளது. எமக் காக இந்த கதையை தந்து எம்மை உயிருள்ளவர்களாக மாற்றிய இக் கதை ஆசிரியருக்கு எனது மனமார்ந்த நன்றிகளும் வாழ்த்துக்களும்.

**சோபிகா**

## பாலிலை

திருமணம் செய்யவேண்டும் என நினைக்கும் நாம், அழகிய குழந்தையை பெற்றெடுக்க விரும்பும் நாம் ஒன்றில் மாத்திரம் தவறு விடுகின்றோம். அது என்ன தவறு? குழந்தையை பெற்றெடுத்த பின்பு தாய்ப்பால் கொடுப்பதை விரும்புவதில்லை அநேகர். கூறும் காரணம் தாய்ப்பால் வரவில்லை என்பது தான். ஆனால் மனுஷன் இருக்கும் வீட்டில் நல்ல செடி, கொடி இருந்தால் அது தானாக ஊரும் தாயே என முனிவர் கூறுகிறார்.

சாந்தி, சங்கவி என இரு நண்பிகள் பிறந்தது முதல் திருமணம் முடித்து தற்போது வரை நல்ல உயிர் நண்பிகள். சங்கவிக்கு மூன்று பிள்ளைகள், சாந்திக்கு 2 பிள்ளைகள். சங்கவி தனது மூன்று பிள்ளைகளுக்கு 2 வயது வரை தாய்ப்பால் மட்டுமே கொடுத்தாள். சங்கவி மிகவும் அழகானவள், மெல்லிய உடல், மூன்று பிள்ளைகள் பிறந்தும் சிக்கென்ற எடுப்பான தோற்றம். சாந்தியோ தனது இரண்டு பிள்ளைகளுக்கு மூன்று மாதத்திலே தாய்ப்பாலை நிறுத்தினாள். காரணம் சங்கவியின் அழகின்மேல் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறாமை தாய்ப்பால் கொடுப்பதால் தான் தனது அழகு கெட்டு விட்டது என்ற முட்டாள் தனமான சிந்தனை. சங்கவி மூன்று பிள்ளைகள் பெற்றடுத்தும் அழகில் குறையவே இல்லை. நான் மட்டும் எப்படி கிழவி போல் மாறிவிட்டேன் என்ற கோபத்தினால் தாய்ப்பாலை நிராகரித்தாள்.

உண்மையில் நடந்தது என்ன? சங்கவியின் அழகிற்கு காரணம் பல வகையானது. பசளி + கீரைகளை தனது சிறுவயது முதல் எடுத்து கொண்டமையே ஆகும். பெண்கள் பருவம் அடைந்தது முதல், பீரியட் வரும் ஒவ்வொரு மாதமும் பசளி + கீரையை உட்கொள்ள வேண்டும். எல்லா பசளியிலும் பொதுவாக ஒரே சத்துதான். கர்ப்ப காலம் முதல் பிள்ளைக்கு பால் கொடுக்கும் போது எல்லாம் பசளி + கீரையை உணவாக எடுக்கும் போது பிள்ளைக்கு எம்மால் நிறைவான பாலை கொடுக்கவும் முடியும். எமது உடலையும் நாம் அழகாகவும் எடுப்பாகவும் இளமையாகவும் வைக்க முடியும்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த பசளி + கீரையை வீட்டில் வைக்காமல், சாப்பிடாமல் பாலில்லை என்றும் இரண்டு பிள்ளையோடு கிழவி ஆகிவிட்டேன் எனவும் கூறுவது தவறு. நம் உடலுக்கு பொருத்தமற்ற உணவுகளை உட்கொண்டு உடலை கெடுப்பதை விட பசளி போன்ற இயற்கையாக கிடைக்கும் சிறப்பான + கீரையின் நன்மையை இனிவரும் நம் சந்ததிக்கும் கொண்டு செல்ல வேண்டும் எனும் சிந்தனையை இக் கதையை வாசிக்கும் போது எமக்கு உண்டு பண்ணுவது இக் கதையாசிரியரின் சிறப்பம்சம். "மனுஷன் இருந்த வீட்டில் நல்லசெடி இருந்தா அது தானாக ஊறும் தாயே, வற்றாம பாயும் தாயே" சிறப்பான வரிகள்.

*"பாலும் பாலழகும் தேனாய் பிறக்க*
*இனிக்க உன்னை இரசிக்க நானும்*
*பசளி கடை மணக்க இடை சுருங்கி*
*குருதி சுருதியாய் இசைக்கும் உடலழகு"*

**திருமதி.எஸ்.ரூபன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிஞ்சாளினி

குறிஞ்சாளினி எனும் கதையினை வாசித்து எனது விமர்சனத்தை கூறுவதில் ஓர்வாசகனாக பெரும் மகிழ்வடைகின்றேன். மேலும் வாசிக்கின்ற ஆர்வத்தை தூண்டுகின்ற கதை. ஆசிரியருக்கும் என்னை வாசகனாக வழிநடத்தி வருகின்ற இறைவனுக்கும் நன்றி சொல்கின்றேன். என்ன, கதையினைப் பற்றிபேசுவன் என எதிர்பாக்க நான் வேறு எதையோ பேசுகின்றேன் என்று நினைக்காதீங்கோ! கதைக்கு வருகிறேன். குறிஞ்சாளினி எனும் காரண பெயரிலான கதையினை வாசிக்கும் போது தொடர்ந்து வாசிக்க வேண்டும் என்ற விருப்பத்தை தருவதாக இக்கதை அமைந்துள்ளது. ஒருபெண் குழந்தை பிறந்தால் அதனை எவ்வாறு எதிர்காலத்தில் ஒரு வலுவுள்ள பெண்ணாக ஒருவாக்க வேண்டும் என்கின்ற மையக் கருத்தையே தன்னகத்தே கொண்டு பினைக்கப் பட்டுள்ளது. இக்கதையில் வருகின்ற சுரேசினுயுடைய தாயாகிய சிவனேஸ்வரி அம்மாளே பிரதான கதாபாத்திரமாக அமைந்துள்ளார். அவருடைய ஆர்வம் உடைய உரையாடலானது வாசகனை தன்னகத்துக்குள்ளே வைத்திருப்பதாக அமைந்துள்ளது. மேலும் இக் கதையில் வருகின்ற நந்தினியின் தாயாரை கொஞ்சம் கோபக்காரியைப் போன்று ஆரம்பத்திலே கூறினார். இறுதியில் எல்லோரோடும் இணைந்து போகும் கதாபாத்திரமாக ஆசிரியர் கையாள்வது இக்கதையின் முடிவிற்கு சிறப்பானதாக அமைந்துள்ளது. மேலும் இக் கதையின் முக்கிய செய்தியாக குறிஞ்சா கீரையினை சீனிநோய்களில் மட்டுமல்ல ஒவ்வொரு பெண்களும் வாரத்தில் ஒருதடவை உணவில் சேர்த்துக் கொள்வதால் அவர்களுடைய கர்ப்பப்பை தொடர்பான எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையும் என்பதே முக்கிய செய்தியாக அமைந்துள்ளது. இச் செய்தியை கூறுவதற்கு ஆசிரியர் ஒருபெண் குழந்தைக்கு நிகாராக குறிஞ்சா கொடியினை ஒப்பீடுவதையும் ஒவ்வொரு வீட்டிலும் துளசியை பாதுகாப்பது போன்று குறிஞ்சாவையும் பாதுகாத்து அதனை உணவில் சேர்த்துக் கொண்டால் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" எனும் முதுமொழிக்கு அமைவாக வாழமுடியும் என்பதையும் இறைவன் கொடுத்த இயற்கைக்கு இனையற்ற மருந்துவேறோன்றும் இல்லை என்பதை இக் குறிஞ்சாளினி எனும் கதையின் மூலமாக மீண்டும் நினை வூட்டிய ஆசானுக்கு மீண்டும் ஒருமுறை நன்றிகூறிக் கொள்கிறேன்.

**அருட்பணி கங்கா பிரசாத்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலிலை

இச் சிறு கதையின் ஆரம்பத்திலேயேமனிதர்களின் பேச்சை இக் காலத்தில் யாரும் நம்ப மாட்டார்கள் என்பதற்கிணங்க சாமியே வந்து பேசுவதைப் போன்ற வசனநடையும் மொழிநடையும் அமைந்திருப்ப தானது எமது மனதில் உள்ள கஸ்டத்தை எல்லாம் யாரிடம் ஒப்புவிக் கின்றமோ அவரே நேரில் வந்து அருள் வாக்கு தருவதை போன்ற கதை பாத்திரம் மிகவும் கவர்ச்சியாக உள்ளது.

தற்போதைய நவீன காலத்திலே மனிதர்களாகிய நாம் அழகுக்கும் கௌரவத்திற்கும் மிகவும் முக்கிய இடமளிக்கின்றோம். இதில் ஆண் களை விட பெண்களே கூடுதலாக தமது உடல் அழகை கவனிப்பதற்கு கூடுதலான நேரத்தையும் பணத்தையும் செலவழித்து வருகின்றனர். அதற்காகவே அதிகமான பெண்கள் அரச உத்தி யோகத்தில் உள்ள ஆண்களையே திருமணம் செய்ய விரும்புகின்றனர். அந்த வகையிலே இக் கதாபாத்திரத்தில் வருகின்ற கதாபாத்திரம் இருவருமே அரச உத்தி யோகத்தில் உள்ள ஆண்களையே திருமணம் செய்துள்ளதாக குறிப் பிடப்படுகின்ற விடயமானது தற்காலத்திற்கு ஏற்றதாக அமைந்துள்ளது.

இன்றைய நாட்களில் அரச அலுவலகங்களிலே ஆண்களைவிட பெண்களே அதிகளவில் பணியாற்றி வருகின்றனர் அந்த வகையிலே அரச அலுவலங்களில் பெண்களிற்கு இடையே இடம்பெறுகின்ற அதிகளவிலான உரையாடல்கள் தங்கள் அலங்கரிப்பை பற்றியதாகவே காணப்படுகின்றது. இக்கதையிலே அவ்வாறான உரையாடல்கள் குறிப்பிடப்பட்டுள்ளமை சிறப்பாக உள்ளது.

தற்கால அவசர உலகில் பெண்கள் தமது வேலைகளை இலகுபடுத்தும் நோக்கத்தில் உடனடி தயாரிப்பில் உள்ள உணவுகளையே நாடு கின்றனர். இருந்தாலும் ஒரு சில பெண்கள் பாரம்பரிய உணவுகளை கை விடாது இடையிடையே சேர்த்துக்கொள்கின்றனர். அந்த வகையிலே இக் கதையின் ஒரு கதாபாத்திரம் இயற்கையோடு இணைந்த உணவுகளை எடுத்துக்கொள்வதனால் இளமையோடு இருப்பதை மிகவும் சிறப்பான உரையாடல்கள், பொறாமைப்படுகின்ற மனப்பான்மைகளுடன் சிறப்பாக சித்திரிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோர்கள் டசின் கணக்கில் குழந்தைகளை பெற்று நல்ல முறையிலே அவர்களை வளர்த்தும் உள்ளனர். ஆனால் தற்பொழுது பெண்கள் தமது தொழில்புரியும் இடத்தில் தாமே இளமையோடும் அழகோடும் இருப்பதற்காக ஓரிரு பிள்ளைகளை மட்டும் பெற்றுக்கொளகின்றனர். அது மட்டுமல்லாமல் குழந்தைகளுக்கு பாலூட்டுவதனால் தமது உடல் கட்டமைப்பு இழக்கப்பட்டு விடும் என்பதற்காக எதிர்காலத்தில் சிறந்த ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டிய தமது பிள்ளைகளையே நோயெதிர்ப்பு சக்தியற்றவர்களாக வளர்க்க முற்படுகின்றனர். படித்திருந்தும் தமது எதிர்கால சந்ததியினை கருத்தில் கொள்ளாது செயற்படுகின்ற தாய் மார்களை சுட்டிக்காட்டுகின்ற கதையின் போக்கானது சிலருக்கு எடுத்துக் காட்டாக அமைகின்றது.

இயற்கையாக எமது சூழலிலே செழித்து வளருகின்ற ஆரோக்கியமான தாவரங்களை தமது சந்ததியினருக்கு அறிமுகப்படுத்தாத பெற்றோர் களையும் அதனால் ஏற்படுகின்ற ஆரோக்கியமின்மையையும் சுட்டிக் காட்டுவதோடு அதனை பின்பற்றுகின்ற சில பெற்றோர்களும் இன்னும் இருக்கின்றனர் என்பதையும் எடுத்துக்காட்டியதானது மிகவும் சிறப்புக் குரிய விடயமாகும்.

கட்டாயமாக எதிர்கால சந்ததியினரை ஆரோக்கியமானவர்களாக வளர்க்க வேண்டிய பாரிய பொறுப்பு தாய்மார்களையே அதிகளவு சேரும். அந்த வகையிலே பெண்கள் எந்த காலத்தில் எவ்வாறான இயற்கை உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதோடு கீரை வகைகளை அறிந்திருக்க வேண்டும் என்பதையும் இப் பாலிலை கதையின் ஊடாக பசளிக்கீரையை கொண்டு வந்துள்ள விதமும் நுட்பமும் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது.

அத்தோடு இக் கதையின் மொழிநடையானது ஒரு அலுவலகத்தில் நடை பெறுகின்ற ஆங்கில சொற்பிரயோகங்களுடன் கூடிய பேச்சு வழக்கும் கலந்து அமைந்துள்ளமையினால் வாசிப்பதற்கு உயிரோட்டமுள்ள உண் மையான வாழ்க்கைச் சூழலை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

**தா.லோகேஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேங்காய்ப்பூ

நல்லதொரு சிறு கதை எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான எடுத்துக்காட்டாகவும் தொடக்கம் முதல் முடிவு வரை வாசகரின் ஆவலைத் தூண்டுவதாகவும் ஆரோக்கியமான நோயற்ற வாழ்வை சித்திரிப்பதாகவும் கூடுதலான அளவு பேச்சு வழக்கு சொற்களுடனான இரு வேறுப்பட்ட வயதுடைய நபர்களது உரையாடல்கள் கொண்டதாகவும் குறைவான கதாபாத்திரங்கள் இடம்பெறுவதாகவும் இச் சிறுகதை அமைந்துள்ளது. இச் சிறுகதையால் இயற்கையின் மகத்துவம் நவீன உலகிற்கு எடுத்தியம்பப்படுகிறது. பார்வதி அம்மை எண்பத்தைந்து வயதாகி தனியான வாழ்வு வாழ தலைப்பட்டவரான அவரது அறிமுகம் இச்சிறுகதையில் காட்டப்படுவதோடு இவரது தோற்றம் பொழிவோடு நவீன கால மங்கையர்களை காட்ட நாற்பத்தைந்து வயது மதிப்பிடப்படும் இராசாத்தியின் தோற்றம் ஒப்பிட்டு நோக்கப்படுகிறது.

வெயில் காரணமாக உண்டாகும் சலச்சிக்கல் நவீன மங்கையர்களின் நோயாக காட்டப்பட்டு அதன் தீர்வினை பண்டைக்காலத்தவர் வெற்றி கொள்ளுமாறு செயற்படும் இயல்புகளை பார்வதி மூலம் காட்டுவதாக இச் சிறுகதை அமைக்கப்பட்டு உள்ளது. காலம் எனும் சக்கரம் சுழரினும் பழமை போற்றும் சமுதாயம் இற்றுப்போகாமல் எடுத்துக்காட்டிய ஞாபகச் சுடராக சிறுகதை ஆசிரியர் “தேங்காய்ப்பூ” எனும் தலைப்பின் தேர்வை அமைத்து சிறப்பித்துள்ளார்.

***S.*தாசன்**

## வேலி

எல்லா கதைகளுமே நல்ல சிந்தனையை தூண்டுகிறது. ஆனால் என்னை மிகவும் கவர்ந்த கதையாக வேலி என்ற கதை துலங்குகிறது. இதைப் படிக்கும் போது எமது சொந்தக்கதையைப் போல் ஏதோ ஒன்றை இழந்து விட்டதைப்போல் உணர்வு தோன்றுகின்றது. காரணம் எங்க ளுடைய அனேகமான வேலிகள் கல்லாலும் தகரங்களாலும் உருவாக்கப் பட்டுக் கொண்டு இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரம் தாத்தா உயிருக்குயிராக வைத்திருந்த வேலி, அவரை வாழ வைத்த வேலி, அது இல்லை என்று போகும் போது , அவரும் மௌனமாக மரணம் அடைவது கதையா நிஜமா என்று எண்ணத் தோன்றுகிறது. உண்மையில் வேலியில் தோன்றும் குறிஞ்சா முசுட்டை மொசுமொசுக்கை கொல்வை வாதநாரணி (வாதநிவாரணி) போன்றவை வேலிக்கும் பெலப்பு எங்களுக்கும் சிறப்பு. கதைஆசிரியருக்கு மனமார்ந்த நன்றிகள்.

*சிராணி*

## வேலி

வாழும் கதைகளை சுமந்து வந்த குறிஞ்சாலினி என்னும் அழகிய சிறு கதைகளில் என் மனதை தொட்ட வேலி என்னும் சிறுகதையானது என் ஆரம்ப காலத்தை எனக்கு ஞாபகப்படுத்துகின்றது.

வாழ்க்கை பயணத்தில் நாகரிக மோகத்தால் பல விடயங்களை இழந்து விட்டோம் அந்த வகையில் இழந்தவற்றில் வேலி பொருளாதாரமும் ஒன்றாகும். அதனை ஆசிரியரின் வேலி என்கின்ற இச் சிறுகதையானது வெளிச்சமிட்டு காட்டுகின்றது.
இயற்கை நயமும் சொல்லாட்சியும் கிராமிய பேச்சு வழக்கும் சாதாரண மனிதர்களும் இலகுவில் கற்று ஒழுக கூடிய வகையில் இச் சிறுகதை நடையானது அமைந்துள்ளது என்பது எமக்கு கிடைத்த வரப்பிரசாதம் என்று தான் நாம் கூற வேண்டும்.

நவீன விஞ்ஞான வளர்ச்சிப் பயணத்தில் தேவைக்கருதி மனித மாண்பையும் பொருளாதாரத்தையும் உயர்நிலைப்படுத்த திரும்பிப் பார்த்து வாழ்வியலை வாழ்வதற்கும் எம் பண்பாட்டுடன் இணைந்திருந்த வேலி பொருளாதாரத்தை சிறந்த வாழ்க்கை தத்துவத்தோடும் அதற்காக உயிர் கொடுத்த சுந்தரம் தாத்தாவின் பாத்திர முன் வைப்பானது சிறப்பு. அவரது உரையாடலும் எமக்கு ஒரு சிறந்த விழிப்புணர்வையும் திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளது என்பதை கதையாசிரியருக்கு கூறுவதோடு நன்றி களையும் தெரிவிக்கின்றோம்.

*T.S. யோசுவா / 120*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கதைகளை படிக்கும் போது எம் மனதுக்கு தோன்றிய விடயத்தை முன் வைக்க விரும்புகின்றேன். எம் எதிர்கால சந்ததிக்கு இக் கதைகள் ஓர் பாட புத்தக சிறுகதை தொகுப்பானால் வாழ்க்கையில் எம் அடுத்து வரும் தலைமுறைகள் இயற்கையோடு இசைந்த வாழ்க்கையை தம் வாழ்வில் கவனமாக கொண்டு பயணிக்க இது ஓர் வழிகாட்டியாக அமையும் என்பது எனது தாழ்மையான கருத்து.

**டெபோறா**

## தேனிலை

தேனிலை எனும் சிறுகதையில் கிராமிய மக்களின் இயற்கையோடு இணைந்த எளிமையான வாழ்க்கை முறையினை பேச்சு வழக்கு மற்றும் இலகு தமிழில் வெளிப்படுத்தியுள்ளார்.

இங்கு பின் தங்கிய கிராம மக்கள் அனுபவிக்கும் துன்பங்களும் அவர்களின் எதிர்ப்பார்ப்புகளும் சானுஜனின் பாடல் வரிகளூடாக சுட்டி காட்டியுள்ளார்.

*முன் வழியால் வந்த துன்பம்*
*பின் வழியால் ஓடட்டும்*
*கிழக்கால வெழிச்சாச்சி*
*மேற்கால தென்றல் வந்தாச்சி*

எனும் வரிகள் புத்துணர்வை ஏற்படுத்துகின்றன...

குடும்ப உறுப்பினர்களுக்கிடையிலான அன்பு அக்கறை என்பவற்றை எளிய கதாபாத்திரங்களை கொண்டு சானுஜனின் கதையினூடாக வெளிப் படுத்தியுள்ளார்.

இக் கதையில் பாடசாலை ஆசிரியர் - மாணவர்களுக்கு இடையிலான நட்புறவு மாணவரின் வெற்றியில் ஆசிரியரின் பங்கு ஆசிரியர் - பெற்றோர் களுக்கிடையிலான தொடர்பு என்பவற்றை உரையாடல் வாயிலாக சித்தரித்து காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடக்கொத்தான் இலையின் மகத்துவம் மற்றும் மருத்துவக்குணங்கள் பற்றி கதையினூடாக தெளிவுபடுத்தியுள்ளார்.

## பாலிலை

சங்கவி, சாந்தி என்ற நண்பிகளின் அழகு சார்பாலிலை. பொதுவாக வியத்தகு உலகில் விளையாடும் நாம் உடல் ஆரோக்கியம் பற்றிய கவனிப்புக் குறைவே. "நாளொருவண்ணம் பொழுதொருமேனி" என நம் மூதாதையர் உயிர் வாழ்ந்தனர் இயற்கையுடன் ஒன்றி. ஆகையால் தான் அவர்களுடைய இறப்பை ஆரோக்கியம் தீர்மானிக்கவில்லை. மாறாக இயற்கை தீர்மானித்தது எனலாம்.

அன்றைய காலப்பெண்கள் இயற்கையோடு பின்னிப்பிணைந்து இருந்தனர். அவர்கள் குழந்தைகளை செல்வங்களாக எண்ணிப் பெற்றெடுத்தனர். ஆனால் எத்தனை பிள்ளைகள் பெற்றாலும் "தாய்ப்பால்" சிறந்த உணவு என்ற பூரண அறிவைப் பெற்றிருந்தனர். தாய்ப்பால் கொடுக்கும் பெண் கள் சத்தான உணவுகளை உண்டு பால் கொடுத்து தாய்சேய் என இருவருடைய ஆரோக்கியத்தையும் பாதுகாத்தனர்.

மேலும் மாதவிடாய் காலங்களில் பெண்கள் ஆரோக்கிய உணவுகளை உண்ண வேண்டும் என்பது உண்மை. ஆனால் பல பெண்கள் அதுபற்றிய சிந்தனையில்லை என்பதை விட விஞ்ஞான உலகம் அதற்கு நேரம் கொடுக்கவில்லை என்பதே உண்மை. அதுமட்டுமின்றி பசும்பால் கட்டாயம் குடிக்கவேண்டும் என விஞ்ஞானம் சொல்கிறது. ஆனால் சில சமூகங்களில் அதற்கு தடை சொல்கிறது. எது எவ்வாறாக இருந்தாலும் சத்தான உணவுகள் முக்கியமாகும்.

இன்றைய காலப்பெண்கள் குழந்தைகளைக் கட்டுப்பாட்டுடன் பெற்றெடுத்தாலும் "தாய்ப்பால்" கொடுக்க மறுக்கின்றனர். காரணம் பால் கொடுப்பதனால் தாயின் அழகு குன்றிவிடும், வேலைப்பழு, எனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதையில் சங்கவி மூன்று குழந்தைகளைப் பெற்று தன்னுடைய உடல் ஆரோக்கியத்தையும் அழகையும் பாதுகாத்துக்கொண்டு குழந்தைகளுக் குப் பாலும் கொடுத்து. வேலைக்கும் செல்கிறாள். என்றால் அவளுக்கு உறுதுணையாக இருப்பது அவளை விட சங்கவியின் பெற்றோர்களின் வழிநடத்தல். பசளிபோன்ற பலகீரை வகைகளின் முக்கியத்துவத்தை விளக்கி எதிர்கால சந்ததியினரிடம் பாரம்பரிய உணவுகளின் முக்கியத் துவத்தைக் கூறுவது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய விடயமாகும். ஏன் எனில் சாந்தி போன்ற பெண்களுக்கு உதவியாக இருக்கும்.

தற்காலத்தில் பெரும்பாலும் பெரியோர்களின் வழிநடத்தல்கள் இல்லாத தன் காரணமாக ஆரோக்கிய குறைபாட்டுடனும் தாய்ப்பால் குறிப்பிட்ட வயது வரை குழந்தைகளுக்கு கொடுக்காத தன் காரணத்தினால் நோய் எதிர்ப்பு சக்தி இல்லாமை போன்ற இன்னல்களுக்கு முகங் கொடுக்க வேண்டி உள்ளது. தாய்ப்பாலுக்கு நிகரான உணவு இதுவரை இல்லை என்பதே உண்மை. பால்மா போன்றவை குழந்தையின் ஆரோக்கியத் திற்கு ஏற்றவையில்லை என்பதை நினைவில் கொண்டு வளமான எதிர்கால சத்ததியினரை உருவாக்க வேண்டும். தாய்ப்பாலை விடசிறந்த உணவு எதுவுமில்லை என உறுதியாகக் கூறி இயற்கை உணவுகளின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளவேண்டும் என்ற என் அபிமானத் தையும் கூறி நிறைவு செய்கின்றேன்.

**K. கோபிசாலினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சாலினி, ஆடாதோடையும் ஆட்டுக் கல்லும்

நான் இங்கு குறிஞ்சாலினி, ஆடாதோடையும், ஆட்டுக்கல்லும் என்னும் இரண்டு கதைகளின் கருத்துக்களை கூறுகின்றேன்.

## குறிஞ்சாலினி,

இது மிகவும் கருத்துள்ள மற்றும் உணர்வுபூர்வமான சிந்தனைக்குரிய கதையாகும். முதலில் இந்த கதையை எழுதியவருக்கு நன்றி கூறுகின் றேன். எனது அனுபவப்படி முன்னைய எனது காலங்களில் எனது அம்மா குறிஞ்சா கீரையுடன் அரிசியை உரலில் இட்டு அடிக்கடி எமக்கு புட்டு அவித்து தருவது வழக்கம். நான் இந்த கதையை வாசித்த பிறகு யோசிக் கின்றேன். நான் இன்று வரை எனது உடலுக்கு பிரச்சனை குறைவாக உள்ளதற்கு எனது அம்மாவின் உணவுப் பழக்கங்கள் தான் என்று.

எமது ஊரில் குறிஞ்சா செடி என்பது ஒரு காலத்தில் நிறைய காணப்பட்டது. இப்போதும் காணப்படுகின்றது ஆனால் முதல் போல இல்லை. தற்போது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. அத்துடன் தற்கால பிள்ளைகள் இதனை பெரிதாக விரும்பி உண்பதும் குறைவாக இருக்கின்றது. ஆனால் அதனை எனது அம்மா முதலில் செய்து தருவது போல செய்து பகிர்ந்தால் நிச்சயமாக அனைவரும் உண்பார்கள் என்று நான் உணர்கின்றேன். இந்த நினைவுகளை ஞாபகப்படுத்தியதற்கு மிக்க நன்றி. அத்துடன் எனது பிள்ளைகளுக்கு நான் கிழமைக்கு ஒருக் காலாவது செய்து கொடுப்பதாக தீர்மானித்துள்ளேன்.

## ஆடாதோடையும் ஆட்டுக்கல்லும்

கடந்த வாரம் நான் வன்னேரிக்கு சென்றிருந்தேன். அக்கராயன் பகுதியில் ஒரு வீட்டின் குடும்பத்தின் காணி மிகவும் புல் பூண்டுகளாய் முதலில் காணப்பட்டது, தற்போது அதனை துப்பரவு செய்து இருக்கின்றார்கள். நான் அதில் அவதானித்த விடயம், அவர்கள் அந்த பாவட்டை செடியை மட்டும் வெட்டாமல் மற்றையதை வெட்டியிருந்ததை பார்த்தேன். அப்போது எனக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது அனுபவப்படி எனக்கு முதலிலேயே இந்த ஆடாதோடை பற்றி தெரியும். அத்துடன் அதன் மகிமையும் எனக்கு தெரியும், ஏனென்றால் எங்கட வீட்டு வேலியில் இது கட்டாயமாக காணப்பட்ட ஒரு செடி. இதனை நாங்கள் “பாவட்டை” என்று தான் அழைப்போம். இது எங்களுக்கு பல விடயங்களுக்காக நாங்கள் பயன்படுத்தியிருக்கின்றோம்.

தலையிடி அல்லது காய்சல் என்றால் எமது அம்மா பாவட்டை இலையை அவித்து குளிப்பதற்கு அதனை இளஞ்சுடுநீரில் குடிக்கும் வழக்கம் இருக்கின்றது. இத்துடன் நாங்கள் இதனை அவித்து ஆவி பிடிக்கும் வழக்கமும் காணப்படுகின்றது. அத்துடன் இதனை நான் எனது பிள்ளை களுக்கும் உடல் ஏதேனும் நோவு காணப்பட்டால் உடனே பாவட்டை இலையை அவித்து அதனில் குளிப்பாட்டுவது வழக்கம்.

இந்த கதையை பலருக்கும் அனுப்பி இதன் மகிமையை அறியப் படுத்துவது மிகவும் சிறப்பு. இந்த கதையை வாசித்ததனாலேயே நான் சில விடயங்களை மிகவும் பயனுள்ள விடயங்களை அறிந்துள்ளேன். எனக்கும் வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறுகின்றேன்.

**த. கோணேஸ்வரி**

# குறிஞ்சாளினி

குறிஞ்சாளினி என்கின்ற கதையானது வாசித்து முடிக்கின்ற பொழுது இன்னும் ஒருதடவை வாசிக்க வேண்டும் என்ற உணர்வு என் மனதில் தோன்றுகிறது. மீண்டும் இன்னும் ஒருதடவை வாசிக்கத்தொடங்கி முடியும் நேரத்தில் இக் கதை என் காணியை நினைவுபடுத்தியது.

இக் கதையானது ஒரு பெண் குழந்தை பிறந்து விட்டால் அந்தப்பெண் பிள்ளை வளர்கின்ற வீட்டில் குறிஞ்சாசெடி நட வேண்டும் என்பதனையும் அந்த குழந்தை வளர்ந்து வருகின்ற காலத்தில் நாளாந்த உணவில் குறிஞ்சாவை சேர்த்துக் கொள்ள வேண்டும். பெண் பிள்ளைகளின் பருவகாலப் பகுதியில் பெண்ணின் கருப்பையில் ஏற்படுகின்ற அனைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்கள் மற்றும் சுருக்கங்கள் வராமல் தடுக்கலாம் என்பதனையும் ஒருபெண் குழந்தைக்கு சமமாக குறிஞ்சாவை நட வேண்டும் என்று எடுத்து கூறுகின்றது. அத்தோடு அந்த கிராமத்தில் உள்ளகோயில் சாமியார் சொன்னது ஒரு பெண் பிள்ளை பிறந்தால் ஒரு குறிஞ்சா செடியை நட்டு துளசி செடியை வணங்குவதைபோல் குறிஞ்சா செடி யையும் பாதுகாக்கவேண்டும்.

"கடவுள் அந்த வீட்டிற்கு கொடுத்த செல்வம் குறிஞ்சாளினி என்கின்ற பெயரில் குறிஞ்சாவை.

**N.நாகேந்திரன்**

## வேலி

என்னை மிகவும் கவர்ந்த கதையாக வேலி என்ற கதை துலங்குகிறது. இதைப் படிக்கும் போது எமது தந்தையின் கதையைப் போல் ஏதோ ஒன்றை இழந்து விட்டதைப் போல் உணர்வு தோன்றுகின்றது. காரணம் எங்களுடைய அனேகமான வேலிகள் கல்லாலும் தகரங்களாலும் உருவாக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. ஆனால் சுந்தரம் தாத்தாவை போல் எனது தந்தை வேலியை வெட்டவிடுவது இல்லை. இதனால் இன்று வரை வேலி வெட்டவிடாமல் சண்டை. இதை வாசிக்கும் போது அதன் சிறப்பு பற்றி சிந்திக்க தூண்டியது. சுந்தரம் தாத்தா உயிருக்கு உயிராக வைத்திருந்தவேலி, அவரை வாழ வைத்த வேலி, மனைவி இறந்ததன் பின் வேலியே அவர் வாழ்வாக இருந்தது. "முதலாவது வேலியில் இருந்த வாதநாராயினி வேலியை வெட்டும்போது அவரை வெட்டுவது போல் அவரும் அவருடைய உயிரை நீத்தார்" இதனால் இக்கதை என்னை மிகவும் சிந்திக்கவைத்தது.

**டி. தவரூபினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சையிலை வெளியீட்டின் குறிஞ்சாளினி மலரின் "மீண்டும் அங்கேயே வந்து நிற்கின்றேன்" கவிதையில் காலத்தின் அசிங்கங்களை வரலாறு விழுங்கியதையும் மனிதர்கள் இரசித்து அதற்குள் ஏதோ தேடுகிறார்கள் இதற்குள் இருக்கும் அழகான பக்கங்களை இரத்தம் உறிஞ்சும் உண்ணிகள் உறிஞ்சுவதற்கு காத்துக்கிடக்கின்றன.

தன்னைத்தேடி தனக்குள் புதைந்து கிடக்கும் செல்வங்களை சுவைக்க தெரிந்தவனே "மனித" அனுபவத்தை முழுதாய் சுவைக்கிறாள். கொடியும், செடியும், பூவும், கனியும் இயல்பாய் இருப்பதைப் பார் சுதந்திர மனிதர்களும் அவர்கள் காதல் கொண்ட இந்த இயற்கையும் இங்கே அனு பவங்களாக படைக்கப்படுகின்றன.

"பச்சரிசி கதவை தட்டும் "கதைசொல்லி" கவிதையில் "முற்றத்தில் நின்றதைக் காணோம்." வேலி ஓரச் செல்வங்களைக் காணோம். முகட்டில் கட்டியிருந்த கூட்டைக் காணோம். கூட்டிலிருந்த குருவியைக் காணோம். குருவி பாடிய பாட்டைக் காணோம். அந்த பாட்டைக் கேட்ட உன்னைக் காணோம். இந்தக் கவிதையைத் தொடர்ந்து வரும் சிறுகதையில் பச்சரிசிக் காளான் சம்பந்தமாக அதன் முக்கியத் துவத்தை ஆசிரியர் எடுத்து இயம்புகின்றார். கர்ப்பிணிகளுக்கும், குழந்தைகளுக்கும் மிகவும் வேண்டிய நிறைவுறை எனவும் கூறுகின்றார்.

"தேனிலை" சிறுகதையில் பேச்சுத் தமிழில் சகல மக்களும் புரியக்கூடிய வகையில் வெளிப்படுத்தியுள்ளார்.

" மொடக்கத்தான்" செடியின் மகிமை விளங்கும் வகையில்

"மொடக்கத்தான் தினம்
குடிக்கத்தான் வெற்றி
கொடுக்கத்தான் மனம்
நாளுந் துடிக்கும் தான்"

என்ற வரிகள் மூலம் மொடக்கத்தான் "சூப்" ஐ குறிப்பிடுவதன் மூலம் சர்வதேச உற்சாக பானமாக அதனைக் குறிப்பிட்டு அதன் முக்கியத் துவத்தை உணர்த்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாலிலை" கவிதையில்

நல்லா பாடுறியள் பாட்டு
உன் மார்பில் பாலை வைச்சிட்டு
ஊர் மாட்டு பாலைத்தேடி திரியிறியே
பாலகனுக்கு உன் பாலைக் கொடுக்கத்தானே
அவன் பார் வேந்தன் ஆகிடுவாள்"

என்ற வரிகள் மூலம் தாய்பாலின் முக்கியத்துவத்தை எடுத்து கூறுகின்றார்.

தொடர்ந்து வரும் இச்சிறுகதையில் பாட்டிபாடும் பாட்டாக,

பாலும் பால் அழகும்
தேனாய் பிறக்கும்
இனிக்க உன்னை
இரசிக்க நானும்
பசளிகீரை மறைக்க
இடை சுருக்கி
குருதி குருதியாய்
இசைக்கும் உடலழகில்

பசளிகீரை சாப்பிடுவதன் மூலம் தாய்ப்பால் சுரக்கும் என்ற கருத்தையும் இச்சிறுகதையில் குறிப்பிட்டுள்ளார்.

"குறிஞ்சாளினி" கவிதையில் போனமுறை வரைக்குள்ள பிள்ளை வரம் கேட்டியளே! இந்த முறை வரைக்குள்ள செல்வவரம் கேட்பதென்ன? பிள்ளை பொறந்திருச்சு! பெத்தவளும் மனம் செத்தவளாய் நிற்கிறாளே எனக்கூறி குறிஞ்சாவைச் சேர்த்தால் உடம்பிலுள்ள வருத்தம் எல்லாம் சுகம்படும் எனக் கூறிகின்றார்.

தொடர்ந்துவரும் தங்கதவசி சிறுகதையில் பிள்ளை ஒன்று பிறந்தால் ஞாபகமாக சிறு குறிஞ்சா அல்ல பெரும் குறிஞ்சா நட்டுத்தான் பிள்ளையை வீட்டிற்கு அழைக்கிறது எங்கடை பரம்பரை வழக்கும் எனக் குறிப்பிட்டு சகலரும் குறிஞ்சா செடி ஒன்று நாட்ட வேண்டும் என்பதை எடுத்துக் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் பிறந்த பேரப்பிள்ளைக்கு குறிஞ்சா செடியின் ஞாபகமாக குறிஞ்சாளினி எனப் பெயர் வைப்பதன் மூலம் குறிஞ்சா செடியின் அருமை புலனாகின்றது.

தவசி முருங்கை சம்பந்தமாகவும் ஆசிரியரின் விழிப்புணர்வை காணமுடிகின்றது. "வீட்டுக்கு ஒரு தவசி இருந்தால் கூட்டுக்குடும்ப குயில்பாட்டுக் கேட்கும்" "நாளுக்கொருகால் தவசியிலை சூப்பு குடிச்சா சஞ்சலம் நீங்கும் இல்லறமெங்கும் மங்களம் பொங்கும்" என்ற வரிகள் அதன் முக்கியத்துவத்தை விளக்கி நிற்கின்றது.

"நாவலின் காதலன்" சிறுகதை மூலம் மரங்களின் பெருமை பேசப்படுகின்றது.:." வீட்டுக்கு ஒரு மரம் முற்றத்தில் நிற்க வேண்டும். இதன் முக்கியத்துவத்தை கதை மூலம் கூறிய கதாசிரியர்

"மரங்களே எங்கள் சுவாசத்தின்
மூச்சுக்களை சுமக்கும் கருவறைகள்

எனக் குறிப்பிடுகின்றார்.

"ஆடாதோடையும் ஆட்டுக்கல்லும்" சிறு கதைக்கு கட்டியம் கூறும் கவிதையில் பொருத்தமான நகரங்களைக் குறிப்பிடுவதை உணர முடிகின்றது.

"காலில் வருத்தம் என்று காலிக்கு போயாச்சு
முதுகு வருத்தம் என்று மூதூருக்கு போயாச்சு
இடுப்பு வருத்தம் என்று இளவாலைக்கு போயாச்சு

இங்கே குறிப்பிட்ட இடங்களில் நாட்டு வைத்தியம் பிரபல்யம் பெற்று நடைபெறுவதை நாம் அறிவோம். இதனை ஆசிரியர் சரியாகக் குறிப்பிடுவதுடன் ஆட்டுக்கல் நாட்டு வைத்தியர்களிடம் இருப்பதையும் அதன் நன்மையையும் எடுத்துக் கூறுகின்றார்.

ஆடாதோடையை அவிச்ச சுடுதண்ணியை இளஞ்சூடாக ஆறவைச்சு பொம்பிளைப் பிள்ளைகளை அதில் குளிப்பாட்டினால் பிள்ளைகளுக்கு மார்பகக் கட்டி வராது என வைத்தியர் செல்வநாயகம் கூறுவதாக ஆசிரியர் கூறியதிலிருந்து ஆடாதோடையின் முக்கியத்துவம் ஆசிரியரால் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் கொடுத்த இயற்கைகளை மரம், செடி, கொடி, கல் என்பவற்றை இச்சிறுகதைகள் மூலம் பல தடவைகள் எடுத்துக்காட்டி வளரும் இளைஞர், யுவதிகளுக்கு நல்வழிகாட்டிய இச்சிறுகதைகளின் ஆசிரியருக்கு நன்றி கூறிக் கொள்கின்றேன்.

நன்றி

**எஸ். புத்திசிகாமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோசுவா காட்டும் திசை

காணாமலாக்கப்படுதலின் இழப்புத் தருகின்ற ஒரு கதையை நேற்றுப் படித்தேன். யோசுவா அடிகள் எழுதிய கதை அது. ஆனால், அந்தக் கதையில் நீங்கள் அறிந்த மாதிரிக் காணாமலாக்கப்பட்ட சங்கதிக ளில்லை. அது வேறு. இது வேறு. கதை இப்படித்தான் தொடங்குகிறது. காணாலாக்கப்படுதலுக்கு எதிராக முதியவர் ஒருவர் உண்ணா விரதமிருக்கிறார். "இப்படி உண்ணாவிரதமிருக்கிறதால என்ன பயன்? தேவையில்லாத பிரச்சினைகள்தான் வரும்" என்று அந்த ஊரவர்கள் சொல்கிறார்கள். ஆனால், முதியவர் அசைவதாக இல்லை.

அப்பொழுது அங்கே ஒரு வெள்ளை வான் (றாவைந எயப) வருகிறது. சனங்கள் என்னவோ ஏதோ என்ற அச்சப்படுகிறார்கள். வந்த வாகனம், முதியவர் உண்ணாவிரதமிருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் நிற்கிறது. அதிலிருந்து ஒரு பெண் இறங்குகிறாள். அவள் அந்த முதியவரைப் படம் பிடிக்கிறாள். தொடர்ந்து மற்றவர்களும் இறங்குகிறார்கள். அவர்களில் சிலர் வெளிநாட்டுப் பிரதிநிதிகள். அச்சத்தோடு கலைந்த சனங்கள் இப்பொழுது மெல்ல மெல்ல அந்த இடத்தை நோக்கி வருகிறார்கள்.

சனங்கள் கூடி வந்தபோது வாகனத்தில் வந்த பெண்ணின் தந்தை சனங்களைப் பார்த்துச் சொல்கிறார், "இந்தப் பெரியவரின் உண்ணா விரதத்தை நாங்கள் முடித்து வைக்க வந்திருக்கிறோம். அவருடைய கோரிக்கைகளை நாங்கள் நிறைவேற்றப்போகிறோம். அதை நாங்களும் நீங்களுமாக இணைந்தே நிறைவேற்ற வேண்டும். அது நம்மால் முடியும். இந்தச் சேதியை இன்று உலகம் அறிந்து ஆச்சரியப்படப்போகிறது. இது காணாமலாக்கப்படுவதற்கு எதிரான ஒரு போராட்டம் மட்டுமல்ல, அந்தப் போராட்டம் இன்று செயல்வடிவம் பெறப்போகிறது. எந்தப் போராட்டம் செயல் வடிவம் பெறும்போதே அது வெற்றியளிக்கும். ஆனால், இந்தப் போராட்டத்தை ஆரம்பித்து, அது செயல்வடிவம் பெறுவதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்திய இந்தப் பெரியவரை நாங்கள் மதிக்கிறோம். காணாமலாக்கப்படுவதைப்பற்றிய இந்தப் பெரியவரின் துயரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளைச் சொல்கிறோம், கேளுங்கள்....” என. சனங்கள் வியப்போடு பார்க்க, அவர்கள் சொல்லும் அந்தக் கதைகளே நமக்கான சேதி.

முதியவர் உண்ணாவிரதமிருந்தது, தன்னுடைய வாழ்விலும் அயற் சூழலிலும் காணாமலாக்கப்படும் பச்சரசிக் காளான்கள் தொடக்கம் பல்வேறு வகையான இயற்கைக் காளான்கள், பாலவரை, கோழியவரை, கொத்தவரை, பறுகவரை, புளியவரை, குமுட்டில், முல்லை, முசுட்டை, மொசுமொசுக்கை, முடக்கொத்தான், குப்பைக்கீரை, புளிக்கீரை, பனங் கீரை, குப்பைமேனி, கொவ்வை, கீழ்காய் நெல்லி, பொருத்துமான்கொடி, தூதுவளை, குறிஞ்சா, வாதநாராணி, நாயுருவி, புளியோதரை, முடிதும் மை, தகரை என்ற தான்தோன்றிகளெல்லாம் காணாமலாக்கப்படுவதற்கு எதிராகவே.

ஏனென்றால், இந்த ஒவ்வொரு தான்தோன்றிகளும்தான் முன்பு - முப்பது ஆண்டுகளுக்கு முதல் - எங்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந் திருந்தவை. இவையில்லாமல் எங்களுடைய நாளாந்த உணவிருக் கவில்லை. வாழ்வுமிருக்கவில்லை. இதனால் நோயும் அதிகமிருக்க வில்லை. அப்படித்தான் உடலில் ஏதாவது நோயோ பிணியோ அண்டினால், அதையும் இந்தத் தான்தோன்றிகளே விரட்டியடித்தன. மூலிகைகளாக.

ஆனால், இதையெல்லாம் நாங்கள் இன்று காணாமலாக்கி விட்டோம். வளவுகளிலும் சூழலிலும் இவை இன்றில்லை. இதையெல்லாம் இப்பொழுது யாரும் ஆக்கிச் சாப்பிடுவதுமில்லை. அப்படியே எல்லாவற்றையும் கைவிட்டாயிற்று. ஏதாவது வியாதி என்றால் சிலர் மூலிகைக்காக தேடித்திரிகிறார்கள். அவ்வளவுதான்.

ஆனால், இதைப்பற்றியெல்லாம் ஏராளம் கதைகளுண்டு என்று அங்கே ஒரு கதை சொல்லப்படுகிறது. அது அங்கே உண்ணாவிரதமிருந்தவரோடு சம்மந்தப்பட்ட கதை. அதுதான் காணாமலாக்கப்பட்ட கதை.

“பச்சரசிக் காளான் என்ற ஒரு வகைக் காளான் முன்பு நம்முடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்களிலிருந்தது. அது அருமையான வாசனையும் நல்ல ருசியுமாக இருக்கும். அந்தக் காளானைச் சமைத்துச் சாப்பிடுவோம். அதிலுள்ள விசேச குணம் என்னவென்றால், பெண்கள் கருவுறுவதற்கு அது கூடுதல் வாய்ப்பைத் தரும். அப்படிச் சாப்பிட்டுப் பிறந்தவள்தான் இதோ இந்தப் பெண். இந்த முதியவரின் தாய்தான் என்னுடைய மனைவிக்கு பச்சரசிக் காளானில் கறியாக்கிக் கொடுத்தார்" என்கிறார் அந்தப் பெண்ணின் தந்தை.

"பச்சரசிக் காளானா?" என்று எல்லோரும் ஆச்சரியமாகக் கேட்கிறார்கள். "அதைப்பற்றித் தெரியாதே" என்கிறார்கள் அங்கே நிற்கிற சிலர்.

"எனக்குத் தெரியும். அதைப்பற்றி நான் சொல்கிறேன்" என்று அங்குள்ள இன்னொரு பெண், தனக்குத் தெரிந்த கதையைச் சொல்கிறார். அந்தக் கதையில் வருகின்றவர்களே இப்பொழுது இந்த உண்ணாவிரதமிருக்கும் முதியவரிடம் வந்திருக்கிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள்...

"இப்படி ஒரு காலம் எல்லோருடனும் கூடியிருந்த காளான்களும் இன்றில்லை. முல்லை, முசுட்டை, கொவ்வை என்ற கொடிகளும் பனங்கீரை, பசளி, குப்பைக் கீரை, குப்பை மேனி, புளிக்கீரை, குமிட்டில் என்ற கீரைகளும் இல்லை. அவரையினங்கள் அத்தனையும் அற்றுப் போய் விட்டன. இதையெல்லாம் விட்டு விட்டு இப்பொழுது நாங்கள் hybrid உற்பத்திகளிலும் விதையற்ற (Seedless)

அடமானமாகியிருக்கிறோம். எல்லாமே hybrid மயமாகி விட்டன. Hybrid கோழி. Hybrid மாடு. உலடிசனை மரக்கறிகள் அல்லது கருவற்ற முட்டை, கருவற்ற (Infertile) கோழிகள்" என்று எங்கள் வாழ்க்கையை அடமானம் வைத்திருக்கிறோம். இந்த அடமானத்திலிருந்து எங்கள் வாழ்க்கையை மீட்க வேண்டும். இல்லையென்றால் அது எங்களுடைய வாழ்க்கையாக - எங்களுக்குரிய வாழ்க்கையாக இருக்காது. அது மற்றவர்களின் கையில் இருக்கும் வாழ்க்கையாகவே இருக்கும்.

நீங்கள் காணாமலாக்கப்பட்டதுக்காகப் போராடுவதாக இருந்தால் இப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் சேர்த்து, அதற்காகவே போராட வேணும். அதுதான் சரியான போராட்டம். இங்கே இந்த முதியவரின் போராட்டம் உங்களின் விழிகளை, மனதை, சிந்தனையைத் திறக்க வேணும் என்பதற்கான போராட்டம். உங்களுடைய கைகளில் இருந்தவற்றை மீளப் பெறுவதற் கான விழிப்புணர்வைத் தரும் போராட்டம். உங்களின் சூழலில் இருந்த தையெல்லாம் மீளக் காண்பதற்கான போராட்டம். உங்கள் இழந்த வாழ்வை மீளப் பெறுவதற்கான போராட்டம். அதற்கான கண் திறப்புக் காகவே அவர் இங்கே இப்படி இருக்கிறார்..."

இந்த கதையைக் கேட்கும்போது உண்மையில் காணாலாக்கப்பட்டதும் காணாமற் போனதும் என்ன என்று நமக்குதெரியவருகிறது.

எல்லாவற்றையும் இந்தச் சிறிய காலத்துக்குள் (முப்பது ஆண்டுக ளுக்குள்) காணாமலாக்கி விட்டு கிளினிக் (Clinic card) காட்டுடன் மருத்துவனைகளுக்கு அலைந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொருவரு டைய வீட்டிலும் பாமர்ஸி தனியான ஒரு Deparment உருவாகியுள்ளது.

காணாமலாக்கப்படுதலின் துயரத்தை தாங்க முடியாமல் திணறிக் கொண்டிருப்போர் நாம். அது எதிராளிகளினால் ஏற்பட்ட இழப்பும் துயரும். இந்தக் காணாமலாக்கப்படுதலைச் செய்தது நாமே. நமக்குள் நாம் செய்த இழப்பும் துயரும் இது.

தேசமொன்றுக்காகப் போராடியவர்கள். இன்னும் அந்தக் கனவோடு இருக்கிறோம் என்று சொல்வது முக்கியமல்ல. அதற்கான அடிப்படைகள், சுயாதீனத்தன்மை, தனித்துவ அடையாளம், பண்பாடு, வாழ்க்கை முறை, நம்முடைய சூழலின் வேர்கள் என்பதற்காகவெல்லாம் போராடும் நாம் இதைக் குறித்தெல்லாம் சிந்திக்காமலிருப்பது ஏன்?

யோசுவா காட்டுகின்ற திசை வேறுதான். அது யதார்த்தமான, உண்மையான, தேவையான அடிப்படைகளை - வேர்களைத் தேடும் பயணத் திசை.

- சிக்மலிங்கம் றெஜினோல்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரின் இதர நூல்கள்

01. ஒரு நதியின் ஊற்று

02. மண்

03. மலையில் கசிந்த உதிரம்

04. கரிக்காட்டுப் பூக்கள்

05. மௌனத்தின் வலி

06. அழகான காலங்கள்

07. சாமி
(2018 ஆம் ஆண்டின் சிறந்த இளையோர் சிறு கதைக்கான தேசிய விருது கிடைக்கப்பெற்றது)

08. பாப்பாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எல்லோருடைய வாழ்க்கையிலும் பல கதைகள் உண்டு. அதை வெளிப்படுத்தும் தன்மை சிலருக்கு மட்டுமே உண்டு. சில சமயங்களில் கற்பனை கதை கூட சிலரது வாழ்க்கையின் நிஜமாகும். சுந்தரம் தாத்தாவின் கதை மூலம் அதே கொள்கையில் வாழ்ந்த எனது சுப்பிரமணியம் தாத்தாவை ஞாபகப்படுத்திய உங்கள் சிறுகதைக்கு நான் தாழ் பணிகிறேன். என் தாத்தாவின் காலத்தோடு முடிந்துவிட்டது தோட்ட வேலைகளும், வேலிபராமரிப்பும் என்றுநினைத்தேன்... இல்லை யோசுவா என்னும் நாமம் கொண்ட ஒரு மனிதர் இருக்கிறார். நாம் மறந்துபோன எமது பண்பாட்டை ஞாபகப்படுத்தி எம் வாழ்க்கைப் பயணத்தில் எம்மோடுப யணிக்க...

– எஸ். மதிவதனி (கிளிநொச்சி)

ஆகா! எத்தனைஅழகு? ஆசிரியர் கிராமியவாசனையுடன் மண்வாசனை ததும்பிய இலகு நடையில் இளைய தலைமுறைக்கு பழையகால ஆரோக்கிய வாழ்க்கைமுறை, பெண் தலைமை தாங்கும் குடும்பம், வறுமையில் வாடித் தவித்து கடனுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் குடும்பத்தின் நிலைமை, வறுமையில் படித்துக் கொண்டிருக்கும் இளம் சமூதாயத்தின் எதிர்காலத்திலும் மூதாதையாரின் அன்பும் அரவணைப் பும் ஆணில்லா குடும்பத்தில் சமூதாயத்தின் பார்வை என்ற ஒரு மிகப்பெரிய வாழ்கை சவாலையே ஆசிரியர் இச் சிறுகதையின் ஊடாக விளக்கிகாட்ட முனைவதன் மூலமாக அவரின் எழுத்தாற்றலும் மொழித்திறனும் எல்லோருக்கும் புலனாகின்றது.

அன்புடனே உனை தூக்கி
அடுக்களைவைப்பர் அவமதியாய் நினையாதே
என்றும் வெகுமதிநீயே

– சுபாகரன் (மட்டக்களப்பு)

ரீ. எஸ். யோசுவாவின்
**குறிஞ்சாலினி**

9789557825045

GURU Priners, Thirunelvely. 021 222 8266

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org